தனிப்பிரதி விலை {உள்நாடு 1 அணா / வெளிநாடு 1¼ அணா

**KUDI ARASU.**

Reg. No. M. 2041

# குடி அரசு

வருட சந்தா உள்நாட்டுக்கு ... ரூ 3—0
அரை வருஷ சந்தா ,, ... ரூ 1-12
வெளிநாட்டுக்கு ,, ... ரூ 4—0

வாரப்பதிப்பு
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு விபவ ஆண்டு பங்குனி மீ 11உ. (24—3—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 48

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

வேதப்புரட்டை வெளியாக்கும்

"ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு.

வெளிவந்து விட்டது.

முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0

ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு

தபால்சார்ஜ் இனாம்.

ஒரு புத்தகம் வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
V. P. மூலம் அனுப்பினால் 14 அணா ஆகிறது.

திரு. சந்திரசேகரப்பாவலரால் எழுதப்பட்ட இதிகாசம் (இராமாயண ஆராய்ச்சி)
பாலகாண்டம் விலை அணா 0—4—0
சுயமரியாதைப்பாடல்கள் விலை அணா 0—2—0

விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு

மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும பரமானந்த சுருசுருப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரீக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு நயம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் செ. 1 லேகியம் ரூ. 3—0—0. ஷை செ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல ரோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், டல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.

புத்தகம் 1-க்கு



இல்வாழ்க்கையின்
இரகசியங்கள்.
*Mysteries of Wedded Life.*
இல்வாழ்க்கையில் ஈடுபட்ட
இருபாலார்க்கும் இன்றி
யமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும்கிடைக்கும்
வாஸன்புஸ்தகசாலை:
244, தங்கசாலைவீதி. சென்னை.

விலை ரூ. 2—0—0

திருப்பூர் பனியன்ஸ்
& ஜவுளிகள்.

பார்வைக்கு அழகாயும் உறுதியாயும் மெல்லியதாயும் அதிக நாள் உழைக்கக்கூடியதுமான ஜவுளிகளும் பனியன் தினுசுகளும் கிடைக்கும்.

விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

வெளியூர் ஆசாமிகள் பூரா பணமும் முன்பணம் அனுப்பவேண்டும்.

அட்வான்ஸ் இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

தி ஜெனரல் நிட்டிங் பாக்டரி,
திருப்பூர். (தென்னிந்தியா)

மதனகாமேஸ்வர லேகியம் (Regd)
பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா. காலண்டரும் கியாட்லாக் இனும்.
சித்த ஔஷதசாலை கம்பெனி, K. A. S.
போஸ்டு முல்லச்சேரி, தென்மலையாளம்.

ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதச்சஞ்சிகைகளில் முதன்மைபெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப்போதிப்பது; 46 பக்கம் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் பல விளக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.

வருட சந்தா தபாற்கூலி யுள்பட
உள்நாடுகளுக்கு ரூ. 1—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0

ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
மதராஸ்.

## ஜாதிப்பட்டங்களையும் விபூதி நாமம் பூணூல் முதலிய ஜாதிமதக் குறிகளையும் துறந்தவர்கள்.

திருவாளர்கள்:—

1 கே. ஆர். திருமூர்த்தி
பெரியகடை வீதி
பாலக்காடு.

2 கே. சீனிவாசன்
சக்ரபாணி கீழ வீதி
கும்பகோணம்.

3 என். ஆர். சுப்பராயலு
கே. கே. சங்கராரியதரிசி
இருளக்குரிச்சி.

4 நடராஜா
ஷாப்புக்கடை
கோபி.

5 எம். நாச்சிமுத்து
C. N. M. N. R. Brothers
திருப்பூர்.

6 பொன்னுசாமி
பாம்பூர் P. O.
ராமநாதபுரம் ஜில்லா

7 கே. தாண்டவராயம்.
நார்ட்டன் பிரிட்ஜ்
சிலோன்.

8 வ. டி. சீனிவாசன்
குசப்பேட்டை
வெல்லூர்.

9 பி. ஆர். ஆதித்தன்,
காயாமொழி P. O.
திருநெல்வேலி.

10. எம். வேணுகோபால்
டிக்கோயா P. O.
சிலோன்.

11 வ. பார்த்தசாரதி
S/o ஜனார்த்தனம்.
உத்திரமேரூர்.

12 மு. அ. அருணாசலம்
பள்ளத்தூர்
ராமநாதபுரம் ஜில்லா.

13. எஸ். வ. மாணிக்கம்
அப்பாநாயக்கன்பட்டி
சூலூர்.

14 ஆர். துரைவெங்கடசாமி
இராமச்சந்திரபுரம்
ஸ்ரீவில்லிபுத்தூர் P. O.

15 டி. பெருமாள்சாமி
கூமாபட்டிகுளம்
ஸ்ரீவில்லிபுத்தூர் P. O.

16 சி. சாமிநாதன்
கூத்தூர்,
தஞ்சாவூர் ஜில்லா.

17 ஞானசுந்தர்,
கொடைப்பூர்
சீர்காமங்கலம்.

18 எஸ். கந்தசாமி
சிதம்பரம்,
சேவ்வாய்ப்பேட்டை.

19 கே. எப். முத்தையன்,
பாட்டணை
தென்னாற்காடு ஜில்லா.

## 'குடி அரசு'க்கு நன்கொடைகள்.

வேலூர் முனிசிபல் வைத்தியசாலை டாக்டர் திரு. V. முருகேச முதலியார் L. M. F., L. C. M. S. அவர்கள் காலஞ் சென்ற தமது மனைவியார் திருமதி மீனாக்ஷியம்மாள் அவர்களின் ஞாபகார்த்தமாக "குடி அரசு" பத்திரிகைக்கு ரூ 10 நன்கொடை யளித்துள்ளார். அன்னாருக்கு எமது மனமுவந்த வந்தனம். (ப—ர்)

மதுரை பிஸ்கத் பாக்டரி திரு. வி. கருப்பையா அவர்கள் தமது இல்லத்தில் பார்ப்பனீயமின்றிச் செய்த திதிச்சடங்கை முன்னிட்டு "குடி அரசு"க்கு ரூபா 1 நன்கொடையாக அனுப்பியுள்ளார். அன்னவருக்கு எமது மனமார்ந்த வந்தனம். (ப—ர்)

## பார்ப்பனீயத்தையும் புரோகிதத்தையும் ஒழித்தவர்கள்.

திருவாளர்கள்

1. பொன்னுதாஸ் அண்டு பிரதாஸ்
பாம்பூர் போஸ்டு
ராமனாதபுரம் ஜில்லா.

2. அ. நாகலிங்கம்
கட்டுக்குடிபட்டி
பொன்னமராவதி போஸ்டு.

3. அ. அய்யா பிள்ளை
கண்டி, சிலோன்.

4. கா. பிறவிப்பெருமாள் பிள்ளை
பலசரக்கு மளிகை
பெடாரக்குளம்

5. ஆர். எம். சங்கர சிந்தாமணி
ஜெனரல் மர்ச்சண்ட்
நாகர் கோயில்.

6. எஸ். நரசிம்மம்
மங்கோட்டை
திருச்சிரபுரம்.

7. வி- கோனேரிதாஸ்
ராமநாதபுரம்
ராமநாதபுரம் ஜில்லா-

## பார்ப்பனீயம் ஒழிந்த ஸ்வீகாரம்.

கோவையில் சென்ற 21—3—29ம் தேதி வியாழக்கிழமை செங்குந்த மரபு ஸ்ரீ சி. கே. வெங்கடாசல முதலியார் வீட்டில் பிராமணப் புரோகிதம் நீக்கிய ஒரு ஸ்வீகாரச் சடங்கு நடந்தது. ஸ்ரீ முதலியாரின் புதல்வன் சுமார் 8 வயதுள்ள கோபாலன் என்ற ஹரிஹரனை தமது மனைவியின் சகோதரியும் காலஞ் சென்ற சங்ககிரி ஸ்ரீ எஸ். கே. அப்பாதுரை முதலியாரின் மனைவியுமான ஸ்ரீ மங்களாம்பாளுக்கு ஸ்வீகாரப்புத்திரனாய்க்கொடுத்தார்கள். அதுசமயம் சம்பிரதாயமாய் நிகழவேண்டிய சகல சீர்களையும் தங்கள் மரபினரான ஸ்ரீ சி. கே. நாராயணசாமி முதலியாரைக் கொண்டே நடத்திக்கொண்டார்கள்- விஜயமாயிருந்த மரபினர்கள் குழந்தையை ஆசிர்வதித்தார்கள்-

ஒரு நிருபர்-

## பெண் தேவை.

நல்லகுணமும் ஸ்கூல்பயினல் வரை கல்வியும் சுயமரியாதைக் கொள்கையுமுள்ள, 22 வயது விஸ்வபிர்ம குல வாலிபர் ஒருவருக்கு விஸ்வபிர்மகுலத்திலுதித்த 16 வயதுக்கு மேற்படாததும் நல்ல அழகுடைய சாதாரணக் கல்வியேனும் கற்ற மணமுடிக்காத பெண்ணாயினும் விதவைப்பெண்ணாயினும் தேவை.

விரும்புவோர் சுயமரியாதை கொள்கைக்கேற்ப எக்குலப் பெண்ணை விரும்பினும் மணமுடிக்கத்தயாரென்றாலும் விஸ்வபிர்மகுல வகுப்பார் சுயமரியாதை இயக்கத்தில் பின்னடைந்திருக்கிறார்களாதலால் அவ்வகுப்பின் அசட்டுக்கொள்கையை அகற்றவே விஸ்வபிர்மகுல வகுப்புப் பெண் விரும்பப்படுகிறது. விரும்புவோர் ஒரு அணா ஸ்டாம்பு வைத்து விஷயத்தை அனுப்பவும்

"சுயமரியாதை அன்பன்"
C/o
'குடி அரசு' ஈரோடு.


## A. N. காதர் அவுலியா பரிமளசாலை.

வாசனை சாமான்கள் விபரம்.

களிவைச்சந்தனம், பத்ருத்தூள், சந்தனத்திக்கைலம், சிகிரி புகையிலை, தாம்பூல மாத்திரை, சந்தன வில்லை, கூந்தல் தைலம், சாந்து டப்பி, அரகஜா, ஸ்நானப் பவுடர், கேசர்பவுடர், புனுகு, ஜவ்வாது, பொன்னாங்கனி தைலம், கஸ்தூரி தந்தப் பவுடர், பலதினுசு அத்தர்வகைகள், தசாங்கம், ஆனந்தபவுடர், ஊதுபத்தி வகைகள், வீரியவிர்த்தி சிட்டுக்குருவி லேகியம், வஸ்திர வாசனைக்கவர், ஆனந்தசாகர், அஷ்டகம், தேன்விதை முனைக் திராவகம் யாவும் எங்களிடம் விலை சகாயமாய் கிடைக்கும்.

தங்கள் விலாசம் தெரிவித்தால், மேற்கண்ட வாசனை சாமான்களின் முழுவிபரமடங்கிய லிஸ்டைக்கு இனாமாகவே அனுப்புவோம்.

எங்கள் விலாசம்:—

A N. காதர் அவுலியா பரிமளசாலை,
வலங்கைமான் (தஞ்சை ஜில்லா.)

குறிப்பு:—எங்கள் பரிமளசாலைக்கு (ஆண்டவன் பிரஸ்) என்று நாமஞ்சூட்டி அச்சுக்கூடம் ஏற்படுத்தி இருக்கிறோம். வெளியூர் அச்சுவேலைகள் குறித்தகாலத்தில் அச்சிட்டு அனுப்பப்படும்.

# குற்றிநாட்டி இடறினல் குப்புற விழவேண்டும்.

### கைவல்லியம் எழுதுவது.

ஐரோப்பா தேசத்திலுள்ளவர்கள் உண்மையை மனதிற்குள் அடைத்து வைக்காமல் வழக்கத்தில் காட்டுகிறார்கள். ஜனக்கட்டிலும் ராஜ்ஜியத்திலும் குற்றங் குறைகளிருந்தால் அதைப் பொது ஜனங்கள் உண்மை விளக்கால்சோதித்து திருத்த வழியுண்டு. அதனுல் கிடைக்கும் சக்தியும் விடுதலையும் எல்லாருக்கும் பயன் பட்டு நம்பிக்கையும் உண்டாகின்றன என்று கேள்விப்படுகிறோம். அவர்களிருக்கும் நிலையே அதை நமக்குக்காட்டுகின்றன, நமது நாட்டில் உண்மைக்குப் பரிந்து பேசுவோர் இல்லாமல் தெய்வத்தின் பொதுவிதிக்கு எல்லாரும் அடங்கி நடக்கவேண்டுமென்று சொல்லுவோரை சருவஞ்சக்கக் கங்கணம் கட்டும் பண்டிதரும் இருந்தமையாலல்லவா நம் ஜாதி வாழ்க்கை கெட்டு பல நூற்றாண்டு நேர்ந்தகஷ்டத்தை பொறுத்து அழுது கொண்டு இருக்கும்படி நேரிட்டது.

ஒவ்வொரு காலத்திலும் மனுஷிய ஜாதி கற்றுக் கொள்ளும் பெரிய உண்மைகளை ஞாயப் பெயர்பூண்ட இங்கிலீஷ் ஜாதி நமது நாட்டிற்கு வந்திருக்கையிலும் கூட இந்த செல்வத்தை சமப்போர் பரப்புதலிலே லோபம் காட்டுதல் நம்பிக்கைத்துரோகமல்லவா? இவர்கள் தெய்வ சிந்தைக்கு விரோதம் செய்து புராணகாவியங்களினுல் துக்கத்தைப் பரப்பி இன்னும் தங்கள் உயர்வையே நாடுகிறார்கள். நவீன உலகத்தில் ஜனத்தின் ஜீவ சக்திக்கும் ஜாதியின் நிபந்தனைகளுக்கும் போர் நடக்கும் இக்காலத்தில் அறிவைப் படைத்தவர்களே! பண்டிதர்களே! ஞாயம் தெரிந்த நல்லோர்களே! சத்தியத்திற்குப்பரிந்து பேசும் ஜன சமூகங்களே! நீங்களெல்லோரும் இதன் விஷயத்தை கவனித்துப் பாருங்கள்.

குற்றி நாட்டி இடறுதே என்பதே ஒரு பழய பழஞ்சொல். அதாவதுமுளையைத்தானே நாட்டி அதில் தானே வந்து இடறி விழுவது. அதைப் போல கனம் கலியாணசுந்தரமுதலியார் அவசியமில்லாத இடத்தில் தானே முளையை நாட்டி தானே அதில் இடறி அவருடைய படிப்பையும், புத்தியையும் சிதறச் செய்து குப்புற விழுந்து விடுவதைக் 'குடி அரசு' எடுத்துக்காட்டும். அவர் எங்களைக்குற்றம் சொல்லுவதற்கு 'குடி அரசு' சொல்லும் பதிலைப் பொதுப் பற்றுதலோடு கவனித்துப் பாருங்கள்.

கனம் முதலியார் அவர்கள் பிரசங்கம் செய்யப் போகுமிடங்களில் அங்கிருப்பவர்களில் சிலரைத்திருப்திபபடுத்தவும், சமயத்தில் அவசியமில்லாத பற்று வைத்திருப்பவர்களை மௌடீகத்தில் வைத்திருக்கவும், பாப்பனர்கள் கேட்டுத் தன்னைப் பெருமைப்படுத்தவும் சுயமரியாதைச் சங்கத்தைக் குற்றம் சொல்லிக் கொண்டு வருகிறார். அதில் திருமங்கலம் சர்வஜன ஜீவகாருண்ய மகாநாட்டில் அளவு கடந்து குற்றம் சொல்லி, லார்டு கோஷனையும் துணையாகக்கூப்பிட்டு, நோசன் பிரபுவின் சர்க்காரையும் எச்சரிக்கைசெய்து, என் சர்க்கார சுயமரியாதைக்காரர்களை அடக்கவில்லை என்று கேட்கிறார். அவர் எங்கள் பேரில் சொல்லும் குற்றங்கள், சீதையை இகழ்ச்சியாய்ப் பேசினதும் ஞானசம்பந்தரை அரக்கொடியோன் என்றதும் இதிகாசங்கள் பெரிய புராணம் இவைகளைக் குற்றம் சொல்லுகிறோம் என்பனவே. இதைப்பற்றி மேல்வாரியாக பலதரம் என்னுல் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் விபரப்படுத்தி எழுதி வருகிறேன். தெளிவான யோசனையும் பெருந்தகையையுடைய உள்ளமும் நேர்மையுமுடையவர்கள் எங்குமிருக்கிறார்கள். அவர்களே தருமத்தின் உண்மைக்கு வாய்க்கால்களாவர். அவர்களிடமும் இந்த ஞாயம் போய்ச் சேர்கின்றன. இதைத் தெரிவதற்கு முதலியாருக்கு பண்டிதத்தன்மையுமில்லை, அறிவின் பிரகாசமுமில்லை, லார்டு கோஷனிடம் முறையிடஞாயமுமில்லை. சுயமரியாதைச்சங்கம் சொல்லுவதை சைவசமயப் பண்டிதர்களில் பெரியவர்கள் ஒத்துக் கொண்டு சீர்திருத்தத்திற்கு சைவசமயம் எவ்வளவு இடம் கொடுக்குமென்பதை தீர்மானம் பண்ணுவதற்கு திருநெல்வேலியில் ஒரு சபைகூட்டப் போவதாக சைவசமாஜ உபதலைவர் கனம் சச்சிதானந்த பிள்ளை பி. ஏ. எல். டி. பத்திரிகைக்கு எழுதியிருந்தது வாசகர்களுக்குத் தெரியும். திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்தத்தின் ஆண்டு விழாவில் திரு. கலியாண சுந்தர முதலியார் தலைமையின் கீழ் திருக்குறள் அவதானியார் என்னும் குறளில் பெரியார் தென்காசி தி. ப. சுப்பிரமணியதாஸ் என்பவர் சொன்னதாவது:— 'தற்காலம் மக்களிடம் அறிவு வளர்ச்சி இல்லாமையாலே சில சுயநலபண்டிதர்களால் மக்கள் ஏமாற்றமடைகிறார்கள். மக்கள் விடுதலையடைய வேண்டுமானுல் கடவுள், மதம், சமயம், புராணம், காவியம், இனிமை, நயம் என்று பிரசாரம் செய்வதைப் பார்க்கிலும் மக்களுக்கு அறிவு வளர்ச்சிக்கு வேண்டியவைகளைக்கற்பித்தால்உபயோகமுண்டு. நமது நாடும்தேசமும் விடுதலையடையும். பொது அறிவிற்குப் புலனுகாத தற்காலப் போக்கிற்கு முறண்பட்ட பழம் புராணங்களையும் காவியங்களையும் சிறப்புவகையில், அதற்குப் பொருள் இது, இதற்குப் பொருள் அது, என்று வியாக்யானஞ் செய்து பொழுது போக்குவதற்கு தெய்வப்புலமை திருவள்ளுவர் "அறிவுடைமை" அதிகாரத்திலிடமில்லை' என்றார்.

அதே சைவமகாசபையில், அதே ஆண்டு விழாவில், கனம் முதலியார் தலைமையின்கீழ் திரு கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எம். ஏ. எம். எல், பேசியதாவது:— 'கோவில்கள்மக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் இடமாக மாறிவிட்டன. சமயத்தினுலும் மதத்தினுலும் ஜாதிப்பிரிவினையோ உயர்வு தாழ்வோ மக்கள் பிறவியினுலேயே கிடையாது. உண்மைச்சமய சட்டங்களில் கடவுள் முன்னிலையில் மக்களுக்கு வழிபடும் உரிமைஉயர்வு தாழ்வில்லாது சமத்துவமாயும் சம சுதந்திரமாயுமிருக்கக்காண்கிறோம். ஆகமங்களும், வேதங்களும் மக்கள் அறிவிற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு அவ்வக்கால அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்ச்சி மூலமறிகிறோம். அதை ஒரு சுயநல வகுப்பாரும், அவர்களுடன் கலந்து மயக்கங்கொண்டநம்மவர்களில் சிலரும், கடவுள் சொன்னது அநாதி என்று பாமர மக்களை ஏமாற்றி வருகின்றார்கள். அதுபோலவே புராணங்கள் காவியங்கள் காலத்திற்கேற்ற முறையில் தங்கள் தங்கள் சுயநலத்தை நாடி ஒவ்வொரு சமயத்தாராலும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்ச்சி மூலம் நாம இப்பொழுது அறிகிறோம். அறிவு வளர்ச்சிக்கும் தற்காலப்போக்கிற்கும் மக்கள் வாழ்க்கைக்கும முறண்பட்டவைகளையும் தவறாக விருப்பவைகளையும் ஒழித்து விட வேண்டியது தான். அவைகளிலுள்ள குற்றங்களை எடுத்துச் சொல்லுபவர்களிடத்தில் நாம் பொறாமையோ பகைமையோ காட்டுவதில் பயனில்லை. குற்றங்களை ஒப்புக் கொண்டு சீர்திருந்துவதுதான் கடமை. அதற்கு முட்டுக்கட்டையாக நின்று அறிஞர்கள்உள்ளதை மறைத்துப் பேசுவதுதான் குற்றம்."

வாசகர்களே இவ்விதம் சொன்னவர்கள் யார், எந்த ஜில்லாவில், எந்த இடத்தில், எந்த சபையில், யார் தலைமையின் கீழ், எந்த மக்கள் கூட்டத்தில் என்பதை நீங்கள் தெரிய வேண்டும். அன்பர்களே! இவர்கள் பரம்பரைச் சைவர்கள், ஒன்பது மணி வரையிலும் சிவபூசை செய்கிறவர்கள், தமிழ்பாஷைப் பண்டிதர்களில் பெரியபண்டிதர்களுடன் சேர்க்கப்பட்டவர்கள், 'சைவம் பெருத்த திருநெல்வேலி, படிப்பு அதிகப்பட்ட மக்கள் கூட்டம், சைவ சபை, திரு கலியாணசுந்தர முதலியார் முன்னிலையில் சொல்லப்பட்டது. இதைவிடவா சுயமரியாதைக் காரர்கள் சொல்லிவிட்டார்கள். சைவசபையில் இவர்கள் சொன்னதைத்தான் சுயமரியாதைக்காரர்களும் சொல்லுகிறார்கள். பின் எதற்காக சுயமரியாதைக்காரர்களைப் பிடித்து காவலில் வைக்க லார்டுகோஷனை கூப்பிட வேண்டும்? இதனுல், கலியாணசுந்தர முதலியார் தன்னை விற்று விட்டார் என்பதும், திருநெல்வேலியில் சொல்லாத வார்த்தைகள் விருதுநகரிலும் திருமங்கலத்திலும் சொல்லுவதற்கு பாப்பார்களிடம் வரும் லக்ஷணையும் சேர்த்து ஒப்பந்தம் முடிந்து விட்டதென்பதும் தெரியவில்லையா? ரிக்வேதத்திலிருந்து எல்லாப் புராணங்களைத் தேடியும் கற்பனை அகத்தியரைக் கண்டதேயல்லாமல் சேக்கிழாருக்கு ஒப்பில்லாத அகஸ்தியரைக் காணவில்லை என்று மகாவித்வான் திரு. நமச்சிவாய முதலியார் சொன்னாரே, அவருக்கு திரு கலியாணசுந்தர முதலியார் என்ன பதில் சொன்னார்? சிவபெருமான் செம்புத்தகட்டில் குருக்களுக்கு எழுதிக் கொடுத்த பொருள் இலக்கணங்கள் மனிதனுல் உண்டாக்கப்பட்ட போர்ஜரி என்று மகாவித்வான் திரு. நமச்சிவாய முதலியார் சொன்னதாகவும், மகா மகோ உபாத்தியாயர்கள் அதை ஆமோதித்ததாகவும் சொல்லப்படுவதற்கு 'நவசக்தி' முதலியார் கடவுள்செந்நெறி அல்லவென்று சொல்லவில்லையே?

நாங்கள், சமய ஒழுங்கென்று காட்டப்படுவதையும், இதிகாச புராணங்களில் எழுதப்பட்டிருப்பதையும், உலகப் பொது அறிவுடையவர்கள் ஒத்துக் கொண்டதையும், சமூகங்களை கொடுமைப்படுத்துவதையும் ஆதாரத்தோடு அனுபோகத்தில் காட்டி விபரமாக எடுத்துச் சொல்லுகிறோம். ஒன்றோ நாங்கள் சொல்லுவதை ஒத்துக் கொள்ள வேண்டும். அல்லது நாங்கள் சொல்லுவதை சாஸ்திரத்தால், சமயத்தால், ஞாயத்தால் விபரப்படுத்தி மறுக்கவேண்டும். அதுவுமில்லாவிட்டால் ஞாயமாக நமக்கு எடுத்துக்காட்டும் தன்னலமில்லாத அறிவுடைய பண்டிதர்கள்சொல்வதை ஒத்துக் கொள்ள வேண்டும். இதுவே சாதாரணமனிதர்களுக்கும் ஏற்பட்ட ஞாயம், படித்தவனுக்கு அழகுமாகும்.

ராஜாங்கத்தை எச்சரிக்கை செய்யும் அதிகாரம் பார்லிமெண்டில்ராஜாங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவருக்கே உரியது. அந்த முறையை அனுசரித்து எல்லா சட்டசபை ராஜாங்க எதிர்க்கட்சி தலைவரும் எச்சரிக்கை சொல்லுவார்கள். அவை காங்கிரஸ் மேடைகளுக்கும் வந்தன, சனசமூகங்கள் எவனிடம் ஒன்றுபட்டிருக்குமோ அவனிடம் அந்த பாத்திதை எப்பொழுது மிருக்கும். கதர் கட்ட வேண்டுமென்கிற காங்கிரஸ் கட்டளைக்கு காந்தியைக்கண்டால் கதர் கட்டி, விருந்திற்குப்போனுல் டாசாசில்க்குப் போட்டு, சப்ளிலறினுல் இங்கிலீஷ் வழக்க முழுஉடையணிந்து அவர்கள் சாரீரத்திலேயே மூழ்கி கப்பலை விட்டு இறங்கினவுடன் கதர் கதர் என்று கத்தும் சென்னைக் காங்கிரஸ் தலைவர்களின் எச்சரிக்கை பத்திரிக்கையில் பரிகாசமாக நிற்கையில், கனம் முதலியார் அவர்கள் எந்த அர்த்தத்தில், யோக்கியதையில், ராஜாங்கத்திற்கு எச்சரிக்கைக் கொடுக்கிறார்?

அவர் காங்கிரசில் போய் சேர்கிறபடியால் காங்கரஸ் காரர்கள் இவரை வீரரென்று மதிக்க சுயமரியாதைக்காரர்களை வேண்டியமட்டும் குற்றம்

(இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

### (14-ம் கட்டுரை)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுவது)

பரதன் சேனையோடு கங்கைக்கரையை யடைந்ததைக் கண்ட குகன் "மனத்தாலும் எண்ண முடியாத சேனையுடன் இவன் வருகிறான். இவன் வேடர்களான நம்மைச் சிறை செய்வானோ, அல்லது கொல்வானோ? அல்லது இராமனைக் கொல்ல வருகிறானோ? வேடர்களே நீங்கள் மரக்கலங்களில் ஏறித் துறையைப் பாதுகாத்துப் போருக்குத் தயாராயிருங்கள்" என்று கூறிக் காணிக்கையும் புலாலும் பழமும் எடுத்துக்கொண்டு பரதனிடம் போனான். சுமந்திரன் அவன் வருவதைக் கண்டு பரதனை நோக்கி "இவன் வேடர் தலைவன் குகன். இராமனுக்கு உயிர்த்தோழன். இராமனிருக்குமிடம் அறிந்தவன். உன்னைக்காண வருகிறான்" என்றான். பரதன் அவனை அழைத்துவரச்சொன்னான். குகன் வந்து பரதனைப் பணிந்து "இது உங்கள் நாடு. கங்கைக்கரை வரையில் வழிபோட்டதை உணர்ந்தும் தாங்கள் வருவதாக எனக்கு உத்திரவிடாததால் மோசம் போனேன். அடிமைகளாகிய எங்கள் ஊரில் தங்கி நாங்கள் கொடுக்கும் புதுப்புலால், உலர்ந்த புலால் இவைகளை உண்டு இன்றிரவு தங்கவேண்டுகிறேன்" என்றான். பரதன் "உன் பேச்சால் மிகமகிழ்ந்தேன். பரத்துவாச முனிவனுடைய குடிசையை அடையவேண்டும். கங்கையையும் தாண்டவேண்டும்" என்று கூறினான். குகன் அவனை நோக்கி "அதற்கு வேண்டுவன செய்கிறேன். ஆனால் உமது பெரிய சேனை எனக்கு ஓர் ஐயத்தை உண்டாக்குகிறது. நீர் இராமனிடம் நல்ல எண்ணத்துடன் போகிறீரா, கெட்ட எண்ணத்துடன் போகிறீரா?" என்று கேட்டான். நான் இராமனை அழைத்துவரப் போகிறேன். இது உண்மை" என்றான். குகன் பரதனைப் புகழ்ந்தான். பரதன் இராமனை நினைந்து வருந்தி நகனிருக்குமிடம் போனான். குகன் அவனுக்கு இராமன் படுத்திருந்ததும் இலக்குவன் புலம்பியதும் இராமன் தூங்கும் போது இலக்குவன் என்ன செய்து விடுவானோ என்று சந்தேகித்து தான் வில்லேந்தி அவன் சென்ற இடங்களெல்லாம் அதேசமயம் பின்தொடர்ந்து சென்று இராமனைக் காத்திருந்ததும், (சருக்கம் 87) அவர்கள் சடை பூண்டு ஓடமேறியதும் தன் வேலைக்காரன் அவர்களை அக்கரை சேர்த்ததுமாகிய வரலாற்றை விவரித்துச் சொன்னான். அதுகேட்ட பரதன் மூர்ச்சற்று வீழ்ந்தான். கோசலை ஓடிவந்து "ஐயோ! இலக்குவனுக்காவது இராமனுக்காவது ஏதாவது துன்பம் நேர்ந்ததா" என்றழுதாள். பரதன் தெளிந்து அவளைத் தேற்றி இராமன் தங்கிய இடம் முதலியவைகளைக் கேட்டறிந்து புலம்பினான். அவன் அன்று முதல் மரவுரியுடுத்துச் சடை பூணத்துணிகிறான். மறுநாள் கங்கையை யடைந்து சென்று பரதன் சேனையை நிறுத்தி பரத்துவாசனைக் காணச்சென்றான்.

பரதன் ஆயுதங்களையும் நகைகளையும் சட்டையையும் தலைப்பாகையையும் கழற்றி வைத்துவிட்டு வெண்பட்டணிந்து வசிட்டனை முன்னிட்டுச் சென்று பரத்துவாசனைக் கண்டான். அம்முனிவன் அவனை "இராமனைக் கொல்லவந்தாயோ" என வினவினன். பரதன் வருந்தினன். முனிவன் அவனைச் சோதிக்கவே கூறியதாகச் சொல்லி அவனை அவனுடைய சேனையோடு தன் விருந்துண்ண வேண்டினன்.

பரத்துவாசன் யோக மகிமையால் விசுவகர்மன் மயன் முதலிய தச்சர்களையும் அரம்பை மேனகை முதலிய தேவதாசிகளையும் அப்சரசுகளாகிய பெண்களையும் அழைத்தான். மைரேயம் சுரா என்கின்ற சாராயங்களையும் கள்களையும் வரவழைத்தான். நல்ல சோற்றுடன் மாமிசங்களையும் பானங்களையும் வரவழைத்தான். அதன் பயனாக தேவதைகள் எங்கும் நிறைந்து வந்து பரதனுக்கும் அவன் சேனைக்கும் வேண்டுவன உதவினார்கள். சில பெண்கள் பாடினார்கள். சிலர் ஆடினார்கள். பரதன் தனது மந்திரி பிரதானிகளுடன் வரிசையாக உட்கார்ந்தான். பிரமன் இருபதாயிரம் தாசிப்பெண்களையும் குபேரன் இருபதாயிரம் தாசிப்பெண்களையும் அனுப்பினார்கள்' அவர்களில் மிக அழகானவர் பரதன் முன் ஆடினார்கள். சில செடிகள் பெண்களின் உருவெடுத்துக்கொண்டு "உங்கள் விருப்பப்படி எங்களை அனுபவியுங்கள். கட்குடியில் விருப்பமுள்ளவர்களே! இந்த இனிமையான சாராயங்களைக் குடியுங்கள். இந்த சுத்தமான மாமிசங்களை உண்ணுங்கள்" என்றன

ஒவ்வொரு ஆண்மகனையும் ஏழெட்டுப் பெண்கள் கைப்பற்றிக்கொண்டு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, கால்பிடித்து, அலங்கரித்து அந்தரங்கமாக சுரா முதலிய பானங்களை குடிக்கச் செய்தார்கள். பரதனுடன் வந்த யானைக்காரர்களும் குதிரைக்காரர்களும் மற்றவர்களும் அளவுக்கு மிஞ்சிக் குடித்து புத்தி மயங்கி தங்கள் வாகனங்கள் போனவிடந் தெரியாமல் மயங்கினார்கள். ஆட்டுமாமிசங்களும் பன்றி மாமிசங்களும் நிரம்பியிருந்தன. விசித்திரமாகப் பக்குவஞ் செய்யப்பட்ட மான், மயில், கோழி முதலிய பிராணிகளின் மாமிசங்கள் சூடாக பானைகளில் குன்றுகளைப்போல் வைக்கப்பட்டிருந்தன. இவைகளை யெல்லாம் அவர்கள் உண்டு களித்து அன்றிரவைக் கழித்தார்கள். விடிந்தவுடன் முனிவன் இராமனிருக்குமிடத்தைப் பரதனுக்குக் கூறினான். பரத்துவாசன் வினவ, பரதன் கோசலையையும் சுமித்திரையையும் சுட்டிக்காட்டி தன் தயாகிய கைகேசியைச் சுட்டும் போது அவளை இழித்து கூறுகிறான். பின் பரதன் விடை பெற்று ஓர் பல்லக்கிலேறிச் சேனை சூழச் சென்றான். சித்திர கூடமடைந்து ஓரிடத்தில் புகை கிளம்புவது கண்டு பரதன் தன் சேனையை நிறுத்தி அவ்விடத்தை நோக்கி இராமனைக் காணச்சென்றான். அச்சேனையால் துன்புறுத்தப்பட்ட மிருகங்கள் அக்காட்டை விட்டு ஓடிப்போயின.

இராமன் சீதைக்கு வனத்தின் அழகைக்காண்பித்து மந்தாகினி நதியையும் காட்டி "பெண்ணே! அதோ சக்கரவாகப் பறவைகள் சம்போகத்திற்காக ஒன்றுக்கொன்று இனிய குரலுடன் அழைத்து சம்போக காலத்தில் உண்டாகும் அழகிய ஒலிகளை ஒலித்துக்கொண்டு ரதியின் பொருட்டு அந்தப் பூக்களின் மேல் ஏறுகின்றன. இச்சித்திரக்கூடம் மிகவும் ஏகாந்தமான போகங்களை அனுபவிக்கும் இடமாக இருத்தலால் இது அயோத்தியினும் இன்பந் தருகிறது. இந்நதி மிகவும் காமத்தை உண்டாக்குகிறது. நாமிருவரும் இதில் நீராடுவோம்" என்று பலவாறு கூறி அவளுடன் திரிந்தான். இராமன் அங்கே ஓரிடத்தில் உட்கார்ந்து "சீதே! இதோ சுத்தமான மாமிசம் இருக்கிறதுபார். இது சுவையுள்ளது; நன்றாக வெந்தது" என்று தான் முதலில் சுவை பார்த்து அவைகளைச் சீதைக்குக் கொடுத்து மகிழ்வித்தான். அப்போது பல மிருகங்கள் சேனையைக் கண்டு அஞ்சி ஓடி வந்தன. அதன் காரண மறிய இராமன் தம்பியை ஏவினான். இலக்குவன் ஓர் மரத்திலேறிச் சேனையைக் கண்டு "நெருப்பை அணை, சீதை குகைக்குள் போகட்டும். போருக்குத் தயார் செய்" என்று கூற இராமன் அது யாருடையதென்று வினவ, பரதனுடையதென்றறிந்து கூறி அவனை இகழ்ந்து "நாம் மலைமேலேறியோ இங்கு நின்றோ சண்டை செய்வோம். இன்று நான் பரதனைக்கொல்லாமல் விடுவதில்லை" என்றான். இராமன் "பரதன் மிகவும் நல்லவன் அவன் அயோத்தி வந்ததும் என் துன்பம் அறிந்து கைகேசியை இகழ்ந்துரைத்து தந்தையையும் இசைவித்து என்னை அழைத்துப்போக வருகின்றான். மூத்த மகனுக்கே அரசுரிமை உண்டு என்பதை அவன் நன்றாக அறிவான். பரதன் நம்மை பார்க்க விரும்புவது இந்தச் சமயத்திற்குத் தகுந்ததே. இதுவரை அவன் உனக்கு ஏதாவது கெடுதி செய்ததுண்டா? முன் தந்தையைக் கொல்வேனென்றாய், இப்போது அண்ணனைக் கொல்வேனென்கிறாய், உனக்கு அரசாட்சி வேண்டுமென்று விரும்புகின்றாய் போலும். பரதனை நோக்கி 'அரசை எனக்குகொடு' என்றால் உடனே கொடுத்துவிடுவான்" என்று கூறினான். இலக்குவன் உடனே வெட்கமடைந்தான். அவன் "நமது தந்தைதான் அழைத்துப்போக வந்தாலும் வரலாம்" என்று பேச்சை மாற்றப்பார்த்தான். இராமன் "இருக்கலாம். ஆனால் நமது தந்தையின் வெண்குடையைக் காணேன். கீழே இறங்கு. பரதனிடம் நான் கூறுமாறு நடந்து கொள்" என்று எச்சரித்தான். இலக்குவன் கீழிறங்கி வணக்கத்தோடும் நின்றான்.

பரதன் தனது சேனைகளை நிறுத்திவிட்டு கால் நடையாக இராமனைத் தேடி வந்தான். புகை வருமிடத்தை நோக்கி சத்துருக்கன் முதலியோரோடும் புலம்பிச் சென்று இராமனைக் கண்டான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

பரதன் செயல்களினால் அவன் இராமனிடம் உண்மையான அன்பு கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. கங்கைக் கரையில் இராமன் ஓர் மரத்தடியில் படுத்திருந்ததைக் கேட்டு மூர்ச்சற்று வீழ்கிறான். இதைக்கண்ட கோசலை இராமனுக்காவது இலக்குவனுக்காவது ஏதோ கேடு வந்தது கேட்டு பரதன் துன்புறுகிறான் என எண்ணி அழுகிறாள். இது இயல்பேயாயினும் மூர்ச்சற்று கீழே வீழ்ந்த பரதனுக்கு மனத்துன்பம் போக்குமாறு தேடாமல் தன் மகனையே நினைவது அவளது சுயநலத்தையும் உண்மையின்மையையும் காட்டும்.

பரத்துவாச முனிவன் பரதனைக் கண்டதும் 'இராமனைக் கொல்லவா வந்தாய்' என அவன் மனம் வருந்துமாறு கேட்டுவிட்டு அவன் வருந்தித் துடிப்பதைக் கண்டு பேச்சை மாற்றி "யான் உன் உண்மையறிவேனாயினும் உன்னைச் சோதிக்கவே வினவினேன் என்று கூறுகிறான். இது அவனுடைய இழிமதியையே உணர்த்துகிறது. என்னை? முக்காலமும் உணர்பவனாகத் தன்னைக் கூறிக்கொள்ளும் முனிவன் பரதனுடைய உண்மையறிந்தும் அவன் மனம் வருந்துமாறு வினவுவானேன்? இது அவனது அறியாமையை உணர்த்துமன்றோ? இதனால் அம்முனிவனும் அவனையொத்த ஆரிய முனிவர்களும் முக்காலமும் அறிவார்கள் என்று புராண இதிகாசங்களில் ஆரியர் கூறுவது முழுப்பொய் என்பதும் ஆரியர்கள் தங்களுக்கு வலிமைத்துணையாம் தங்கள் முனிவர்களை நம்பி உலகினர் மயங்கி ஈடுபடுமாறு கட்டிவிடும் கதைகளே இவை என்பதும் தெளிவாக விளங்குகின்றதல்லவா?

பரதன் கங்கைக்கரை வந்த அன்றே மரவுரியுடுத்துத் துணிகிறான் என்று குறித்த வால்மீகர் அதற்கு மாறாக பரத்துவாசனைக் காணச் சென்ற போது நகைகளையும் சட்டையையும் தலைப்பாகையையும் கழற்றி வைத்துவிட்டு வெண்பட்டணிந்து சென்றான் என்று கூறுவதால் அவன் தான் கூறி

(இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# "இந்திய மாதா"

(அய்யா முத்து)

கட்டுரை நே. 10

## பார்ப்பனீயக் கொடுமை.

(முன் தொடர்ச்சி.)

இந்தியாவை கண்டுசென்ற மேயோ வெனும்மாது தனது "இந்தியமாதா" வெனும் புத்தகத்தில் பார்ப்பனீயக் கொடுமையைப் பற்றி ஒரு அத்தியாயம் வரைந்துள்ளார். அதை அப்படியே வாசகர்களுக்குத் தருகிறேன்.

மேயோ கூறுவது:—"சென்னை ராஜதானிதான் பார்ப்பனீய இந்துமதத்தின் இருப்பிடமாகும். பூர்வீகக் குடிகளான கருநிறமுள்ள திராவிடமக்களின் இருப்பிடமும் சென்னை ராஜதானியே. பார்ப்பனீயஇந்துமதம் திராவிடர்களை சின்னபின்னப் படுத்தி, பறையர்களெனவும், கீழ்சாதியார்களெனவும் கூறி அடிமையாக ஒதுக்கி வைத்ததுடன் அவர்களை அறிவில்லாதவர்களாயும், கல்வி இல்லாதவர்களாயும் செய்து நசுக்கி வைத்தது. இந்தச் சமயத்தில் பிரிட்டிஷார் வந்து சேர்ந்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தினர். ஜனங்களும் கொஞ்சங்கொஞ்சமாக தங்கள் உரிமையைப்பெற்றனர், ஜனநாயக ஆட்சிசிலவு ஆரம்பித்தது.

திராவிட மக்களும் காலக்கிரமத்தில் தாங்கள் நெடுநாளாகத் தூங்கிக்கொண்டிருந்த உறக்கத்திலிருந்து கண்விழித்துக் கொண்டனர். திராவிட மக்களைக்கண்டு மற்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தாரும் தலைதூக்கத்தொடங்கினர். பார்ப்பனர்களுக்கு எதிராக 'பார்ப்பனரல்லாதார் கட்சி' என்ற பெயருடன் ஒருகட்சி தோன்றியது. இக்கட்சிக்கு அதிக பலமிருப்பதால், சென்னை சட்டசபையில் பார்ப்பனர் வகித்திருந்த அரசியல் ஆதிக்கத்தை பறிமுதல்செய்து, அதிகாரங்களைப் பார்ப்பனரல்லாதார்கைப்பற்றிக்கொண்டனர். இது இந்துதேச சரித்திரத்தில் எழுதப்பட வேண்டிய ஒரு முக்கிய சம்பவமாகும்.

தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவரும், செல்வந்தரும், அரசியல் துறையில் வேலை செய்து வருபவரும், பொதுஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டவருமான ஒருவரை சென்னையில் சந்தித்தேன். அவர் மிகவும் ஊக்கமும் உற்சாகமும் உள்ளவர். தாராளமாகப் பேசும் இயல்புள்ளவர், அவருடன் நான் வெகுநேரம் வரையிலும் அந்தரங்கமாக சம்பாஷித்துக்கொண்டிருந்தேன், பிராமணர்களைப்பற்றி விவரமாகக் கூறும்படி அவரை வேண்டிக்கொண்டேன்.

அவர் கூறியதாவது:— பண்டைக்காலத்தில் எல்லா மனிதர்களும் அவரவர்கள் விருப்பப்படி வாழ்ந்துவந்தபோது பிராமணன் மட்டும் கல்விகற்கத் தொடங்கினான். பிராமணன் இயற்கையிலேயே மிகவும் தந்திரசாலியாதலால், அவன் கல்விகற்றதும், புராண சாஸ்திரங்களையெல்லாம் தன்வசமாக்கிக்கொண்டு 'பிராமணனே எல்லாச்சாதியாரினும் உயர்ந்தவன், பிராமணனே அனைவருக்கும் குரு' என அந்த சாஸ்திரங்களில் எழுதிவைத்துவிட்டான். ஆண்டுகள் பல கழிந்தன, பிராமணர்களைத்தவிர வேறு எவரும் கல்விகற்கவில்லை, பிராமணன்தான் கல்விகற்றவன், அவனைத்தவிர வேறுஎவரும் புராணங்களையும், சாஸ்திரங்களையும் கண்ணெடுத்துக்கூட பார்க்கக்கூடாதென பிராமணன் புஸ்தகங்களில் எழுதிவைத்து விட்டபடியால் பிற சாதியார் அவைகளில் நம்பிக்கைவைத்து அவனை 'பூதேவர்' என மதித்து அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஆரம்பித்தனர். ஆகவே எல்லா ஹிந்துக்களுக்கும் பிராமணனே தலைவனானான். அவன் கூறியமொழிக்கு எதிர்மொழிகூற எவருக்கும் தைரியமில்லை. அவன் ஆணைக்கு மறுமொழி கூறாமல் அவனிட்ட வேலைகளையெல்லாம் அவன் தாள்பணிந்து, இருகை கூப்பி செய்துவந்தனர். ஆங்கிலேயர் வந்து எல்லாச்சாதியார்களும் கல்விபயிலலாமென்ற உரிமையை அளித்து பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கும்வரை ஹிந்து இந்தியா மேற்கூறிய நிலைமையிலேயே இருந்து வந்தது.

சென்னை மாகாணத்திலே நாங்கள் பிராமணர்களை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறோம். பல்லாண்டுகளாக பிராமணன் உயர்ந்தநிலையில் இருந்துவந்ததனாலும், பேய்க்கூட்டங்களைப்போல தந்திரமும்சூழ்ச்சியுமுள்ளவனாக விருந்தபடியாலும், அவனை எதிர்த்துப்போராடி வெல்வது அதிக கஷ்டமாகத்தானிருக்கிறது. பத்திரிகைகள் பிராமணர் வசமிருக்கின்றன. சர்க்கார் உத்தியோகங்களில் 100-க்கு 80 பிராமணன் கையிலிருக்கின்றன. நீதி ஸ்தலங்கள், கச்சேரிகள் எல்லாம் பிராமணனுக்குச்சொந்தம், கீழ்த்தர குமாஸ்தா உத்தியோகத்திலிருந்து உயர்தர நீதிபதி உத்தியோகம்வரை பிராமணன் வசமே இருக்கின்றன. அதிகாரங்கள் தங்கள்கையில் அகப்பட்டுக் கொள்ளவே ஜனங்களை விசேஷமாக பெண்களை அதிகமாகப் பயமுறுத்த ஆரம்பித்தனர். ஏனெனில் நாங்களெல்லாம் ஏழைகள், கல்வியில்லாதவர்கள். பிராமணர்களுடைய சூழ்ச்சியை அறியாமல் அவர்கள் கூறி வந்த மூடப் பழங்க வழக்கங்களில் நம்பிக்கை வைத்து விட்டோம். ஆகவே பூதேவர்களாகிய பிராமணர்களுக்கு நாங்கள் அடிமைகளாகிவிட்டோம். எங்களை நசுக்கி, நசுக்கிப் பிழிவதற்கு பிரிட்டிஷார் தடையாயிருப்பதால் பிரிட்டிஷார் மீது பிராமணன் சீறி விழுகிறான். ஆத்திரத்துடன் துள்ளிக்குதிக்கிறான். பெரிய தேசாபிமானி போல் போலிவேடந்தரித்து மேடைகள்மீது நின்றுகொண்டு பிரிட்டிஷார் நாட்டை விட்டுப் போய்விட வேண்டுமென்று உறக்கக்கத்துகிறான். போதும்! போதும்! பிரிட்டிஷார் போய்விட்டால் பிராமணனுக்குக் கொண்டாட்டந்தான், எங்கள் மீது நன்றாக குதிரைச் சவாரி செய்வான், எங்கள் மூச்சைப் பிடித்துக் கொல்லத்தொடங்குவான், பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வருவதற்கு முன் இந்தியா என்ன நிலைமையிலிருந்ததோ அந்த நிலைமை மறுபடியும் வந்துவிடும். பண்டைக்காலத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த புரோகித ஆட்சி மறுபடியும் வந்துவிடும். நாங்களெல்லோரும் மீண்டும் அடிமைகளாக வேண்டியதுதான். இன்னும் மூடநம்பிக்கைகள் நம்மை விட்டபாடில்லை. இந்நிலைமையிலேயே நமக்கு இத்தனை இன்னல்களிருக்கின்றன. இன்னும் பண்டைய புரோகிதாட்சி வந்து விட்டால் எங்கள் பாடு திண்டாட்டந்தான். தயை செய்து சற்று செவிசாய்த்துக் கேட்க வேண்டுகிறேன்.

சர்க்காருக்கு கொடுக்கும் வரிகளைக்காட்டிலும் பிராமணனுக்கு அதிகமான வரிகளைக் கொடுக்கிறோம். பிறந்த தினத்திலிருந்து இறக்கும் வரை ஒருஹிந்து பிராமணனுக்கு வரி கொடுத்துக் கொண்டேயிருக்கிறான். குழந்தை பிறந்தவுடன் பிராமணனுக்கு தக்ஷணை கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால குழந்தை சுகமாய் வளராதாம், குழந்தை பிறந்த 16-வது நாள் 'தீட்டுக்கழியும்' சடங்கென்று ஒரு விழா நடத்த வேண்டும். அதற்கும் பிராமணனுக்கு தட்சணை கொடுக்கவேண்டும். சிறிதுநாள்கழித்து குழந்தைக்குப் பெயரிட வேண்டும், அதற்கும் அவனுக்கு தட்சணை உண்டு. ஒரு வருடம் கழித்து ஆண்டு நிறைவு விழா வந்துவிடும். அப்பொழுது பிராமணனுக்கு கொண்டாட்டந்தான்.

பின்பு குழந்தைக்கு சாதம் ஊட்டவேண்டும். அதற்கும் பிராமணனுக்கு தட்சணையுண்டு. குழந்தை ஆண்குழந்தையாய் இருந்தால் குழந்தைக்கு குடுமி வைக்கவேண்டும். அதற்கும் பிராமணனுக்கு தக்ஷணை உண்டு. ஏழாவது வயதில் குழந்தைக்கு அக்ஷராப்பியாசம் செய்விக்கவேண்டும். அப்பொழுதும் பிராமணனுக்கு கொண்டாட்டந்தான். கொஞ்சம் செல்வவந்தர்கள் வீடாயிருந்தால் தங்கத்தினால் பேனா செய்து அதை பிராமணனுக்குத் தத்தம் பண்ண வேண்டும்,

பெண் குழந்தையாயிருந்தால், 16 வயதுக்குள் கல்யாணம் செய்விக்க வேண்டும். இச்சமயத்தில் பிராமணனுக்கு கொழுத்த பணம் கிடைக்கும். கிரகணதினம் வந்தால் அப்பொழுதும் பிராமணனுக்கு ஏராளமான தக்ஷணை கிடைக்கும். இன்னும் ருதுசாந்தி முதலிய வைபவங்களிருக்கின்றன. இவ்விதமாக பலதடவைகளில் பிராமணனுக்கு உயிருள்ள மட்டும் தக்ஷணை கொடுக்க வேண்டும். இது இத்துடன் நின்றபாடில்லை இறந்த பின்பும் பிராமணப்பேய் நம்மை விட்டு விடாது. பிராமணனுக்குப் பணம் கொடுக்காமல் பிரேதத்தை அடக்கம் செய்யக்கூடாது. பிரேதத்தை அடக்கம் செய்யும் பொழுது பிராமணனுக்கு கொழுத்த தட்சணை கொடுக்கவேண்டும். ஒருவன் இறந்து ஒரு வருடம் வரை மாதா மாதம் அவனுடைய மகன் சிரார்த்தம் கொடுக்கவேண்டும். ஏனெனில் பிராமணன் உண்பதும், உடுப்பதும், குடிப்பதும் பிதுர்களுக்கு திருப்தி செய்யக்கூடியதாம். பின்பு ஒவ்வொரு வருடமும், இறந்தவனுடைய மகன் பிராமணனுக்கு, வயிறு நிறைய விருந்தளிக்க வேண்டும். இந்துமதாச்சாரப்படி இந்த வருமானமெல்லாம் பெற பிராமணனுக்கு உரிமையிருக்கிறதெனக் கூறுகிறான். பிராமணனுக்கு கொடுக்க வேண்டியவைகளைக் கொடுக்காத

இதன் தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# பனகால் வாசகசாலைத் திறப்புவிழா.

## நான் பேசியதன் உண்மை

## "மித்திரன்" நிருபரின் பொய்யுரை.

திருவாளர்
த. வே. உமாமகேஸ்வரன் B.A.B.L. எழுதியது

திருவையாற்றில் 28—2—29ந் தேதி பனகால் வாசகசாலையை ராவ்பகதூர், ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்கள் திறந்து வைத்தபோது 'நமது வாலிபர் இயக்கம்' என்பது பொருளாக நான் ஒரு பிரசங்கம் செய்தேன். அதைப்பற்றி 4—3—29ல் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் ஒரு நிருபர் விரிவாக எழுதி இருக்கிறார். அதை நான் பார்த்தேன். அதில் நான் பேசாத விஷயங்களும் நினைக்காத விஷயங்களும் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். அதனால் பலர் என்னைப்பற்றி உண்மைக்கு மாறாக நினைக்கக்கூடுமெனக் கருதி யான் பேசியதன் உண்மையை வெளியிடுதல் எனது கடைமையெனக்கருதி அதனை எழுதுகிறேன்.

### நான் பேசியதன் சுருக்கம்.

நமது வாலிபர்கள் ஐம்புலன்களால் அநுபவிக்கும் இன்பமே சுகவாழ்வு என மயங்கியும், முன்னேற்றத்திற்கு வேண்டிய உறுதியான காரியங்களை மேற்கொள்ளாமல் உறங்கியும் வாளாவிருப்பதை நான் காண்பதுண்டு. அதற்கு மாறாகப் பல வாலிபர்கள் ஒருங்கு கூடுவதையும், நல்ல செயல்களை மேற்கொள்ளுவதையும் காண எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. நீங்கள் வாலிபர்கள்; உடல் வலியும் மனவலியும் நிறைந்தவர்கள்; பழங்கொள்கைகளால் இடர்ப்படாதவர்கள்; உயர் நிலையை அடைவோம் என்னும் உறுதிப்பாடு உடையவர்கள். யானோ எனது அறிவு, செயல், ஆற்றல்களில் மிகவும் நம்பிக்கை வைத்து முயன்றும் தோல்விகள் பலவற்றை யடைந்தவன். யான் முயன்று பெற்றனவும் நிலையற்று அழிவதைப் பார்க்கின்றவன். இன்ப வாழ்விற்கு ஏற்றவை எனத் தேடிய பொருள்கள் இருந்தும் அவைகளால் இன்பம் குறைவதைக் காண்கின்றவன். பாலும் புளிக்கின்றது. புலன்களும் வலி குறைகின்றன. எனது உடல்வலி, மனவலி முதலிய வனைத்தும் குறைந்துவரும் இந்நிலையில் மனத்திற்கு ஆறுதலளிக்கும் அழியாத துணை யாது என எண்ணி மயங்கும் யான் உங்கட்குச் சொல்லத்தகுவது யாதுளது?

நமது முன்னேற்றம் கருதி உழைத்து வரும் சங்கங்கள் பல திறப்பட்டவை அவற்றுள் இளைஞர்களால் நடத்தப்படும் சங்கங்களும் மிகப் பல. அவைகளில் நமது நோக்கங்களைத் தவறாமல் ஊக்கத்தோடு செய்து முடிக்கும் சங்கங்கள் மிகச்சில. அவைகளில் செழித்துவளருபவைகள் உங்கள் போன்ற இளைஞர்களால் தஞ்சை நகரில் நடத்தப்பட்டுவரும் 5, 6, நாடகச் சங்கங்களேயாம். இச்சங்கங்களின் மாண்புள்ள அங்கத்தினர்கள் ஏழைமக்களின் துன்பங்களைத் துடைப்பது கருதி அவர்களை மகிழ்வூட்டவல்ல ஆடை அணிகலன்கள், காட்சிப் பொருள்கள் ஆகியவைகளைச் சேர்ப்பதிலும் பலசுவைகள் நிறைந்த கதைகள் இன்னிசை முதலியவற்றைப் பயிலுவதிலும் தங்கள் காலங்கள் முதலியவற்றைச் செலவிடுகின்றனர். அவர்கள் தந்நலத்தைப் பெருக்கக் கூடிய கல்வி, அறிவு, ஒழுக்கங்களை வளர்த்துக் கொண்டு பிறர்க்கு நன்மை செய்யும் முயற்சிகளை மேற்கொள்ளாமல் வெறும் இன்பச் சுவை ஒன்றையே ஊட்டும் முயற்சியுடன் உழைத்து வருகின்றனர். கல்வி வளம் கருதியும் உடல் வலிமை கருதியும் ஒழுக்க நலம் கருதியும், பொதுநலம் கருதியும், வேறு பல நன்மைகளைக் கருதியும் வாலிபர்களால் நிறுவப் பட்டுள்ள சங்கங்கள் வாளா உறங்கிக் கிடக்கின்றன. ஆனால் இழிந்த முறையில் சிறிது இன்பத்தை மட்டும் தரும் வாலிபர்களின் நாடகச் சங்கங்கள் மட்டிலும் சிறந்து விளங்குகின்றன. என்னே! நமது வாலிபர்கள் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் தலை சிறக்க வேண்டுமென்னும் ஆவலுடையவர்களாய் அவைகளைப் பெறுவதற்குரிய வழியில் உறுதியுடன் நின்று உழைப்பவர்களாய் விளங்கினால் தான் நாம் முன்னேற்றம் அடைய முடியும்.

இந்நாளில் மக்கள் முன்னேற்றத்திற்காகத் தோன்றியுள்ள இயக்கங்கள் பலவாகும். வாலிபர்கள் அவற்றின் தன்மைகளைத் தூரத்திலிருந்து அறிந்து கொள்வது மிகவும் நல்லது. அவைகளில் தலையிட்டு உழைப்பது அறியாமையாகும் என்பதே எனது அபிப்ராயம். வாலிபர்கள் உலக இயக்கங்களைக் கற்க வேண்டுவது அவசியம். அவ்வியக்கங்களிலுள்ள உண்மைக் கொள்கைகளைக் கசடறக் கற்பது மிகவும் அவசியம். பின்னர் அவற்றில் மேற்கொள்ளத் தக்கன எவை என ஆராய வேண்டும். தம் அறிவினால் ஆராய்ந்து கற்றவற்றைத் தமது வாழ்க்கையில் நடத்திக் காட்ட முன் வரல் வேண்டும். இவ்வுண்மையை உணராமல் அரசியல் வாதிகளின் ஆரவாரங்களால் மயங்கி வீண் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட வாலிபர்கள் மிகப்பலர். ஆகையால் நண்பர்களே! "எண்ணித்துணிக கருமம், துணிந்த பின் எண்ணுவம் என்பதிழுக்கு" என்னும் மொழியைப் பின்பற்றி நடக்க முயலுங்கள்.

இப்பொழுது நீங்கள் மேற்கொண்டிருக்கும் வாலிபர் இயக்கம் ஆகட்டும், நீங்கள் விரும்பும் வேறு எந்த இயக்கம் ஆகட்டும், உங்கள் இயக்கங்கள் பலமடைய வேண்டுமாயின் ஒற்றுமை, பொறுமை, தூங்காமை, துணிவுடைமை ஆகிய நான்கு குணங்களையும் உறுதியுடன் கைப்பற்ற வேண்டும்.

இக்காலத்தில் ஒற்றுமையைப்பற்றிப் பேசாதவர் எழுதாதவர் ஒருவருமேயிலர். ஆனால் அதனை நடைமுறையிற் கொண்டு வருபவர் மிகச்சிலரே. ஒற்றுமையைக் கெடுக்கும் வேற்றுமைகளை ஒழிக்க உண்மையில் முயலுபவர் சிறியர் ஆவர். சாதிப் போராட்டங்கள் எத்தனை? சமயப் போராட்டங்கள் எத்தனை? இவைபோன்ற வேற்றுமைகளை அன்பினாலும், பரந்த நோக்கத்தினாலும் ஒழிக்கக்கூடுமேயன்றி வேறு எவ்வகையிலும் கூடாததாகும். சாதிப்பட்டங்களையும், சமயக்குறிகளையும் மிகவும் சுலபத்தில் ஒழித்து விடலாம். சுயமரியாதை மகாநாட்டிற்கு எவ்வளவோ காலம் முன்னமே ஐயர், ஐயங்கார் என்னும் பட்டங்களை மறைத்து எழுதிய விண்ணப்பங்கள் பலவற்றைத் தலைவர் பன்னீர்ச்செல்வம் அவர்கள் பார்த்திருப்பார்கள். அதுபோலவே சமயக் குறிகளை அணியாது விட்டவர்கள் பலரை நாம் கண்டு வருகிறோம். இவ்வாறு சாதிப் பட்டங்களை விட்டவர்களும், சமயக் குறிகளை ஒழித்தவர்களும் குறுகிய நோக்கங்கள் இன்றி அன்பையும், பரந்த நோக்கத்தையும் மேற்கொண்டொழுகுகின்றவர் ஆவார்களா? அல்லது சமயக் குறிகளை அணிவதுதான் உண்மையான சமய ஒழுக்கங்கள் உடைமைக்கு அடையாளமா? அதுவுமில்லை இதுவுமில்லை. எல்லாம் வெளிமயக்கே. மனத்தில் பரிசுத்தம் இல்லாவிடில் சமய வேடத்தை அணிவதனாலும், ஒழிப்பதனாலும், ஒரு பயனும் இல்லை என்பது நிச்சயம். ஆதலால் இதுபோன்ற சிறு முயற்சிகளில் கலகம் விளைத்து வேற்றுமையை மிகுதிப்படுத்தாமல் உண்மை அன்புகொண்டு ஒற்றுமையை நிலைநாட்ட முயலுங்கள்.

மனிதர்கள் உயர்வடைவதற்குப் பொறையுடைமை மிகவும் அவசியமாகும். அதிலும் பிறர் பேசியவற்றிலுள்ள உண்மைகளைக் கண்டறிவதற்குப் பொறுமையே சிறந்த கருவி. உலக முன்னேற்றத்தின் பொருட்டுக் கூடும் பொதுக்கூட்டங்களில் அபிப்பிராய பேதம் உண்டானால் பொறுமையிழந்து ஆவேசத்துடன் எதிர்ப்பதும், வசை கூறுவதும் தன் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையாளர்க்குப் பேசுதற்கு இடந்தாமல் கூக்குரல் இட்டு மறுப்பதும் பெருவழக்காக இருக்கிறது. அன்றியும் பத்திரிகைகளிலும் பிறமதத்தினரைத் தகாதமுறையில் நிந்திப்பதும் வழக்கமாகிவிட்டது. நமது கொள்கையை ஒப்புக்கொள்ளாத ஒருவர் தமது கொள்கையைக் கூறப்புகுந்தால் அதற்கு நாம் இடந்தருதல் வேண்டும். அவர் கூறுவனவற்றிலுள்ள உண்மையை ஆராய்ந்து தெளிவுபடவேண்டும். இன்றேல் நாமும் தெளிவுபெறமாட்டோம். அவரும் தெளிவுபெறமாட்டார். அறிவுடையோர் என்று கூறிக்கொண்டு தமக்கு மாறுபட்ட அபிப்பிராயமுடையவர்களை இகழ்ந்து ஒதுக்கினால் முன்னேற்றம் எப்படி உண்டாகும்? அவர்களின் கூட்டம் அறிவாளிகளாகிய உங்களைவிட எத்தனைமடங்கு பெரிதாயிருக்கிறது? அவர்களை உங்கள் வழியில் திருப்பினாலன்றி உங்களுடைய விரைந்த செலவினைத் தடுக்கக்கூடிய தளைகளால் உங்கள் கால்களைப் பிணைத்துவிடுவார்கள் அன்றோ? ஆதலால் உண்மையில் உலக முன்னேற்றத்தை விரும்புகின்றவர்கள் அன்பு, அறிவு, பொறுமை முதலியவற்றால் பிறரைத் திருத்த முயலவேண்டும்.

மிகப்பல சங்கங்கள் உறக்கத்தால் உயிரிழந்தன. சங்கங்கள் உயிருடன் இருந்து மக்களுக்குப் பயனளிக்கவேண்டுமாயின் சங்க ஊழியர்களும், உறுப்பினர்களும் சங்க

(இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.)

## சீர்காழியில்

# சுயமரியாதை முழக்கம்

## திரு. R. சின்னையா தலைமைவகித்தார்.

### திரு. ராமசாமியின் மூன்றுமணி நேரத்திய சொற்பெருக்கு.

(நமது விசேஷ நிருபர்)

சகோதரர்களே! பெரியோர்களே!

சில வருஷங்களுக்குமுன் ஒத்துழையாமைக் காங்கிரஸ் பிரசாரத்தின்போது இவ்வூருக்கு வந்திருக்கிறேன். ஆனால் இன்று சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி உங்களுக்கெடுத்துக்கூற வந்திருக்கிறேன். சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அதன் எதிரிகளும் அவர்களது ஆள்களும் தப்பும் தவறுமாகத் திரித்துக்கூறி வருகின்றார்கள். உங்கள் ஊரிலும் அதே காரியம் சற்று அளவுக்கு மீறிச் செய்து விட்டதால் வெகு பேர் ஆச்சரியப்பட்டு பார்க்கலாம் என்றே நான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே இங்கு கூடி இருக்கிறீர்கள். இது நமது இயக்க எதிரிகள் தங்களுக்குத் தெரியாமலே நமக்குச் செய்த உதவியாகும். மற்றும் என் அருமை இப்படிப்பட்ட பொதுக் கூட்டங்களுக்கு வாராத அரும்பெரும் கனவான்களும் விஜயம் செய்திருப்பதும் எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தருகின்றது. என்னை அன்னிய மதப் பிரசாரகன் என்றும் சர்க்கார்பிரசாரகனென்றும் எழுதப்பட்டிருந்த ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். நான் இந்து மதம் என்று சொல்லப்படும் மதத்தை துவேஷம் செய்து அன்னிய மதங்கள் என்று அழைக்கப்படும் மதங்களை ஆதரிப்பதாகவும் அவர்களிடம் பிரதி பலன் பெறுவதாகவும், உங்கள் ஊரில் சிலர் கட்டுக்கட்டி விட்டிருக்கின்றதாகக் கேள்விப்பட்டேன். எங்கள் ஜில்லாவிலும் ஆலயங்களும் தேவஸ்தான போர்டும் உண்டு. அதில் காரியதரிசியாகவும் பிரசிடெண்டாகவும் வைஸ் பிரசிடெண்டாகவும் 20, 30 வருஷகாலமாய் இருந்துவருகின்றேன். எங்கள் குடும்பத்தாரிலும் பல கோவில்கள் கட்டப்பட்டும் உற்சவங்கள் செய்யப்பட்டும் வருகின்றன.

எனவே என்னுடைய இந்த சுமார் 25 வருஷ நிர்வாகத்திற்குள்ளாக லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து பல கோவில்கள் ரிப்பேர் செய்தும் நிர்வகித்தும் வந்ததின் பயனாக அவற்றின் பயனின்மையையும் அவற்றால் ஏற்படும் தீமைகளையும் நான் நன்றாய் அறிந்திருக்கின்றேன்.

இந்து மதத்தை எப்படிக் கண்டிக்கின்றேனோ அதே கண்ணுடனேயேதான் மற்ற சமயங்களையும் பார்த்து கண்டித்து வருகின்றேன். மற்ற சமயக்காரர்களுக்கும் என் மீது சிறிது அபிப்பிராயபேதமிருக்கலாம். பிறவியில் உயர்வு தாழ்வு ஏமாற்றம் ஆகியவைகளுக்கு மதத்தின்பேரால் இடம் கொடுக்கமுடியாது. ஆதலால் இதுவரை ஏமாற்றிவந்தவர்களுக்கு நமது பிரசாரம் கஷ்டமாகத்தான் இருக்கும். அதற்காக அவர்கள் எதையும் சொல்லவும் துணிவார்கள். அதற்கு நாம் பயப்படக்கூடாது.

அதுபோலவே நான் சர்க்காரை ஆதரிப்பதாகவும் கூறப்படுகிறது. எனக்கு எந்த சர்க்கார் தயவும் தேவையில்லை. எனது வாழ்க்கையில் ஸ்தல ஸ்தாபன சம்பந்தமாக என் சக்திக்கியன்றவரை எவ்வளவு உயர்ந்த பதவியிலிருந்து பார்க்க வேண்டுமோ அதெல்லாம் பார்த்தாகிவிட்டது. தாலூகா போர்டு ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி ஆனரரி மேஜிஸ்டிரேட் ஆகிய வேலைகளில் இருந்து பார்த்தாய் விட்டது. முனிசிபல் சேர்மனாகவும் இருந்தாய் விட்டது. இவைகளையெல்லாம் நானே ஒரே நிமிஷத்தில் ஒன்றாய் ஒரே காகிதத்தில் ராஜிநாமா கொடுத்து விட்டு வெளிவந்து விட்டேன். மற்றபடி சர்க்கார் உத்தியோகம் ஏதாவது எதிர்பார்க்கிறேன் என்பதற்கோ முதலில் எனக்கு ஆங்கிலம் தெரியாது. இவ்வளவு கிழவனான நான் இனி எந்த உத்தியோகத்திற்கு லாயக்காயிருக்க முடியும்?

அன்றியும் மூன்று நான்கு தடவை சிறைவாசம் தண்டனை அடைந்தவனுக்கு சர்க்காரில் உத்தியோகம் தான் கொடுப்பார்களா? என்னை சர்க்கார் தங்கள் அடிமையாக ஏற்றுக்கொள்ள நம்புவார்களா? இன்னமும் சி. ஐ. டி. போலீஸார் என்கூடவே இருக்கிறார்கள். இதோ இந்த கூட்டத்திலும் சி. ஐ. டி. நான் பேசுவதை எழுதுகின்றார்கள் பாருங்கள்.

ஒருசமயம் நான்தான் பல விதத்தும் உத்தியோகத்திற்கு லாயக்கில்லையானாலும் எனது பிள்ளை குட்டிகளுக்காவது உத்தியோகம் வாங்கிக்கொடுக்க சர்க்காருடன் ஒத்துழைக்கக்கூடுமென்றாலோ, எனக்கு பிள்ளையும் இல்லை குட்டியும் இல்லை. என் சகோதரருக்கு சென்ற வாரத்தில்தான் ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. சில வருடங்களுக்கு முன் எனது அண்ணன் குழந்தை ஒன்றை சீமைக்கனுப்பி அங்குசில வருஷகாலம் படிக்கவைக்கப்பட்டான். மறுபடியும் அமெரிக்கா முதலிய நாடுகளுக்கனுப்ப ஏற்பாடு செய்திருந்தேன். பாதிவழியில் இன்புளுயன்சா ஜுரம்கண்டு இங்குவந்து மதனபள்ளியில் இறந்துவிட்டான். என் பந்துக்களிலும் உத்தியோகத்திற்கு லாயக்கானவர்கள் எவருமில்லை. ஆகவே எனக்கு எவ்விதத்திலும் சர்க்கார் கூட்டுறவோ தயவோ வேண்டியதில்லை. எனக்கு ஜீவனத்திற்கும் எனது தகப்பனார் சம்பாதித்து வைத்துவிட்டுப்போயிருக்கின்றார். அது எனக்குப்போதும். மற்றும்பலருக்கு உணவளிக்கவும் உதவும். ஆதலால் ஜீவனத்திற்கும் யாருடைய தயவும் தேவையில்லை. மற்றபடி காங்கிரசுக்கு நான் விரோதி என்றும் அதைதான் திட்டுகிறேன் என்றும் கூறப்படுகின்றது.

ஆம், இப்பொழுதும் அதையே கூறுகிறேன். காங்கிரஸ் என்றசபை திரு. காந்தியின் தலைமையின்கீழ் இரண்டு மூன்று வருடம் தேசமக்களின் நன்மைக்குப் பாடுபட்ட காலத்தில் அதிலிருந்த தேசிய வீரர்களில் பெரும் பாலோர் இன்று அதில் இல்லையென்பது உங்களுக்குத் தெரியும். அக்காலத்தில் நான் காங்கிரசுக்கு எவ்வளவு உழைத்தேன் என்பதும் உங்களுக்குத் தெரியாததல்ல. ஒத்துழையாத்திட்டத்தில் அதி தீவிரமாகநின்று உண்மையில் பாடுபட்ட ஒரு சிலரில் நானும் ஒருவன் என்பதுடன் நான் மாத்திரமல்லாமல் எனது குடும்பத்தாரும் அக்காலத்தில் திரு காந்தியின் தலைமையில் காங்கிரசைப்போற்றி அத்திட்டம் வெற்றியுறப் பாடுபட்டோம், காங்கிரசானது தியாகம், கஷ்டம், சிறை, என்பவைகளுடன் பிணைக்கப்பட்டிருந்தபோது, இந்நாட்டிலுள்ள எல்லா அரசியல் சங்கங்களும், சர்க்காரும், காங்கிரஸை எதிர்த்த காலத்தில், அக்காங்கிரசின் இம்மாகாண கமிட்டியின் தலைவர் காரியதரிசி என்ற பதவிகளைப் பெற்று நான் ஊழியம் செய்ததுடன் என் குடும்பத்தாரும் அவ்விதமே வேலைசெய்தார்கள் என்பதற்கும் ஒரு உதாரணம் கூறி அதை முடித்துவிடுகிறேன்.

ஒத்துழையாமை மும்முரமாய் நடந்து நான் சிறையில் இருக்கும்போது ஸர் சங்கரநாயர் தலைமையில், பம்பாயில் ரவுண்டேபிள் கான்பரன்ஸ் ஒன்று நடந்தது. அதன் பிரதிநிதியாய் திரு. காந்தியும் போயிருந்தார். அப்பிரதிநிதிக்கூட்டத்தில் முக்கியஸ்தர்கள் திரு. காந்தியைப்பார்த்து 'மற்ற சகாக்களான அந்தந்திரிகள் சொல்லும் திட்டங்கள் இருக்கட்டும். தாங்கள் (திரு காந்தியை) சமாதான திட்டங்களைப்பற்றி பேசமுன் ஒத்துழையாமையை நிறுத்தி வையுங்கள்' என்று கேட்டார்கள். அதற்கு திரு காந்தி கூறிய பதிலென்ன? "அது முடியாத காரியம், அன்றியும் அது என் இஷ்டமல்ல, மற்ற காங்கிரஸ் சகாக்களையும் குறிப்பாக, தமிழ்நாட்டில் ஈரோடு என்ற ஊரில் உள்ள இரு பெண்மணிகளையும் கேட்டுக்கொண்டுதான் ஒத்துழையாத் திட்டத்தை தள்ளிவைப்பதைப்பற்றி யோசிக்க முடியுமேயொழிய நானாக எதுவும் சொல்வதற்கில்லை" என்று கூறினார். அவ்விரு பெண்மணிகளும் யார் தெரியுமா? எனது மனைவி ஒன்று, எனது தங்கை ஒன்று ஆக இவ்விரு பெண்களேயாகும். (கரகோஷம்) இந்தவிஷயம் 1922ம் ஜனவரி 19 முதல் 22 தேதிக்குள் 'இந்து', பத்திரிக்கையில் இருக்கின்றது வேண்டியவர்கள் பார்த்துக்கொள்ளுங்கள். இதை ஒரு பெருமைக்காகச்சொல்லவில்லை. மற்றெதற்காகவென்றால் திரு. காந்தியும், காங்கிரசும் நாட்டிற்கு உண்மையில் பலனுடைய நல்ல திட்டத்தையும், கொள்கைகளையும் கொண்டிருந்த காலத்தில் நான் மாத்திரமல்லாமல் என் குடும்பமும் பெண்களும் கூட சற்றும்சலிப்பின்றி அதில்பாடுபட்டவர்களேயன்றி இன்று என்னைக்குறை கூ

ரும் நண்பர்களைப்போல் தியாகம் செய்ய வேண்டிய காலத்தில் ஓடி ஒளிந்தவன் நானல்ல என்பதற்காகவே யாகும்' (கரகோஷம்) இதுவே என்னைப்பற்றி முதலில் உங்களுக்கு சொல்லிக் கொள்ள வேண்டிய வார்த்தை. இதில் தற்பெருமைக்காக ஏதாவது சொல்லப் பட்டதாகக்கருதாதீர்கள். உங்களுக்கு என்னைப்பற்றிப் பார்ப்பனர்களும் அவர்கள் கூலிகளும் செய்திருந்த விஷமப் பிரசாரத்தின் உண்மையை நீக்கவே இதைச்சொன்னேன்.

## அரசியல் புரட்டு.

நிற்க அரசியல் உலகில் இன்று விளம்பரப்பட்டிருப்பவர்கள் 1 காங்கிரஸ்காரர்கள் 2 பூரண சுயேச்சைக்காரர்கள். இவர்களின் யோக்கியதை யாது? இவர்கள் அரசியல் என்பதின் பெயரால் செய்யும், செய்து வரும் செய்கைகள் இவர்கள் முன் பின் செய்த தியாகங்கள் என்பவைகள் என்ன என்பதை சற்றுஞாபகப்படுத்திப்பாருங்கள். ஒரு காங்கிரஸ் தலைவர் மேடையில் பேசும் போது 'ஆங்கில அரசாங்கம்மிகவும்மோசம், அதை அழித்து விட்டுத்தான் மறுவேலை பார்க்கவேண்டும்' என்று கூறுவார்: நீங்களும் கைதட்டுவீர்கள், அவர் மகனும் அண்ணனும் தம்பியும் சம்மந்தியும் சர்க்காரில் மீ 1க்கு 500, 1000, 2000, 3000, ரூபாய் வாங்கும்படியான முன்சீப்பு ஜட்ஜ் கலக்டர் ஆகிய உத்தியோகத்திலிருப்பார்கள். இவர்பேசும 'வீரப்பேச்சு' அவர் உறவினர்களின் உத்தியோகத்தை வலுப்படுத்தவும் உயர்த்தவும் தான் உதவுமே தவிர உங்களுக்கோ நாட்டிற்கோ கடுகளவு நன்மையுண்டாவதற்கு அதில் ஒன்றுமே இருக்காது. மற்றொரு காங்கிரஸ் காரியதரிசி ரெங்கசாமி அய்யங்கார் இங்கு பேசும்போது "சர்க்காரை முட்டுக்கட்டைபோட்டு சிக்கு முக்கலாடச் செய்யவேண்டும். சிங்கத்தின் குகைக்குள்புகுந்து அதன் தாடியைப்பிடித்து ஆட்டவேண்டும்" என்று பேசுவார். அங்கு அவர் தம்பி சர்க்கார் என்கின்ற குகைக்குள் புகுந்து வெள்ளைக்காரர் என்கின்ற சிங்கத்தின் தயவுக்கு வாலைத்தூக்கிப் பிடித்துக்கொண்டிருப்பதற்கு அதிகாரவர்க்கத்தின் காலடியில் கிடக்கும் சர்க்கார் வாதியாயிருப்பார். திரு எஸ். சீனிவாசய்யங்கார் வெள்ளைக்கார சம்பந்தமே கூடாது என்பார், ஆனால் காலையில் எழுந்ததும் வெள்ளைக்காரர்கள் கோர்ட்டுகளில் போய் அவர்கள் காலடியில் நின்று கொண்டு 'அப்பா! அய்யா! பிரபுவே! துரையே! சாமியே! என்று கெஞ்சி மீ 5000, 10000 சம்பாதித்துக்கொண்டிருப்பார். அவர் சம்மந்தி மாமன் மைத்துனன் எல்லோரும் சர்க்காரிடம் சம்பளம் வாங்கிப் பிழைக்கும் அடிமைகளாயிருப்பார்கள். அவர்கள் பிரமோஷனுக்கு இவர்கள் பூரண சுதந்திரம் உதவியாகவும் இருக்கும். மற்றும் மகாகனம் சீனிவாச சாஸ்திரி ஒரு பெரிய தேசிய வாதி, அவர்கள் மகன் சர்க்காரில் மீ 1க்கு ஆயிர ரூபாய் சம்பள வாதி. திரு ரங்காச்சாரி ஒரு பெரிய தேசிய வாதி, அவர்கள் மக்கள் தற்குறிகள், எல்லாம் மீ 1க்கு 500, 1000 ரூபாய்கள் வாங்கும்படியான சர்க்கார் சம்பள வாதிகள். திரு மணி அய்யர் பென்ஷன் பெற்ற பின் ஒரு பெரிய தேசிய வாதி அவர்கள் மக்கள் ஷை சர்க்கார் சம்பள வாதி. திரு வி. கிருஷ்ணசாமி அய்யர் பெரிய தேசிய வாதி, அவர் மக்கள் சகோதரர்கள் மீ 1000, 500 சம்பள வாதி, சர் சி.பி. ராமசாமி அய்யர் ஒரு பெரிய தேசிய வாதி. காங்கிரஸ் காரியதரிசி, உத்தியோக காலத்தில் மீ 2000, 5000 சம்பள வாதி. உத்தியோகம் போய்விட்டால் மறுபடியும் தேசிய வாதி. திரு. விஜயராகவாச்சாரியார் ஒரு பெரியகிழ தேசிய வாதி, அவர் சகோதரரும் மருமகனும் சர்க்கார் சம்பள வாதிகள். பார்ப்பனர்களில் உத்தியோகத்திற்கு லாயக்கில்லாதவர்களும் உத்தியோகம் பார்த்து பென்ஷன் வாங்கினவர்களும் பெரிய தேசிய வாதிகள், அவர்கள் பிள்ளைகுட்டி பந்துக்களான மற்றவர்கள் சர்க்கார் சம்பள வாதிகள். இதை நீங்கள் யாராவது மறுக்கமுடியுமா? காங்கிரஸ் ஏற்பட்டபிறகு காங்கிரசின் பலனாக இந்த 30, 40 வருடங்களாக சமீப காலம் வரை எல்லா ஸ்தல ஸ்தாபனங்களையும் சர்க்கார் உத்தியோகங்களையும் பார்ப்பனர்களே கைப்பற்றும்படியாகிவிட்டது. அதற்குமுன் எல்லா உத்தியோகங்களிலும் பார்ப்பனரல்லாதாரே இருந்தார்கள். ஆனால் "தேசிய ஸ்தாபனமாகிய" காங்கிரஸ் ஏற்பட்டபிறகு ஓட்டு ஜனத் தொகையில் நூற்றுக்கு மூன்றுவீதமுள்ள பார்ப்பனர்களே நூற்றுக்கு தொண்ணூற்றேழு உத்தியோகங்களை கைப்பற்றி வாழமுடிந்தது என்றால் காங்கிரசின் தேசியம் பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் சம்பாதிக்கும் ஸ்தாபனம் என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்?

காங்கிரஸ் தீர்மானம் ஆக ஆக, பொறுப்பாட்சி கேட்கக் கேட்க, சீர்திருத்தம் வழங்க வழங்க உத்தியோகங்கள் அதிகமாயிற்றே அல்லாமல் கந்தாயம் வரிவட்டம் குறைந்தபாடில்லை. சர்க்காருக்கு படித்த கூட்டத்தின் தொந்திரவு படக்க எப்படியாவது உத்தியோகங்களை உற்பத்தி செய்து அவர்களுக்கு லஞ்சமாக அவற்றை கொடுத்துதீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இதை சர்க்கார் செய்யாவிட்டாலோ நாட்டில் பாமர மக்களின்பேரால்பார்ப்பனர்களின் கிளர்ச்சி அதிகமாகின்றது. இந்த மாதிரி காங்கிரசாலும் அதனால் உண்டாகும் உத்தியோகங்களாலும் அவற்றைப் பார்ப்பனர்களுக்கே கொடுப்பதினாலும் சர்க்காருக்கு நாளுக்குநாள் அதிகசவுகரியம் ஏற்படுகிறது. அதனால் தான் காங்கிரசு என்றால் சர்க்காரும் அதற்கு உதவிசெய்து வந்தனர். வெள்ளைக்காரர்கள் சுகமும் சம்பாத்தியமும் பெறவே அவர்கள் இங்கு இருக்கிறார்கள். ஆங்கில சர்க்காருக்கும், அவர்களது கொள்ளைக்கும் ஏமாற்றத்துக்கும் உடனிருந்து ஏமாற்ற நம்மை காட்டிக்கொடுக்கும் உளவாளாக இருந்தவர்கள் இந்த காங்கிரஸ்காரர்களே யாகும். இந்த காங்கிரஸ்காரர் என்னும் படித்த கூட்டத்தார் நமது நாட்டில் பாமரர்களை சர்க்கார் கொடுமையிலிருந்து காப்பாற்றுவதாக மேடைகளில் பேசிவிட்டு நம்மை சர்க்காருக்கு காட்டிக்கொடுத்து அதிக அடிமைத்தனத்திற்கு ஆளாக்கியதோடுமது தலைமீது சுமக்கமுடியாத அதிகவரியை விதிக்கவும் ஏதுவாயிருந்திருக்கிறார்கள். இன்னும் காங்கிரசால் சுயேச்சை, சுயராஜ்யம், விடுதலை, பூரண சுயராஜ்யம், ஹோம்ரூல், என்ற எண்ணற்ற அரசியல் கட்சிகள் நாட்டில் தோன்றின. இவைகள் ஒவ்வொன்றின் பேச்சும், பிரசாரமும், தீர்மானமும், கிளர்ச்சியும், ஆகிய எல்லாம் பாமர ஜனசமூகத்தை காப்பாற்ற வேண்டுமென்ற பல்லவியை பாடிக்கொண்டு புதிது புதிதான உத்தியோகங்களும், கமிட்டிகளும், அங்கத்தினர் பதவிகளும், தனித்தனி இலாகாக்களும், வெளி நாட்டுக்குப் பிரதிநிதிகளாகச் செல்லும்பெருமைகளும், மற்றும் இத்தகைய புதுப்புது சனியன்கள்தோன்றி நன்மையும் காட்டையும் கெடுத்து, அதிக பளுவான வரியை சுமத்தி ஜனசமூகத்தை பாழ்படுத்தி வந்திருக்கின்றனவேயன்றி வேறு என்ன பலன் உண்டாயிற்று? உதாரணமாக காங்கிரசுக்கு முன் இருந்த தாசில்தார்கள் மாஜிஸ்ட்ரேட்டுகள்கோர்ட்டுகள், போலீஸ் ஸ்டேஷன்கள், ரெவினியூ இலாகாவின் அளவுகள் ஹைகோர்ட்டு ஜட்ஜுகள், சர்க்கார் நிர்வாக உத்தியோகஸ்தர்கள், இவைகளின் எண்ணிக்கை என்ன? இன்றைய எண்ணிக்கையென்ன? மூன்று மடங்கு அதிகமாயிருக்கின்றதா இல்லையா? இவ்விதம் அதிகமானதற்கு அன்று இருந்ததை விட இன்று மூன்று மடங்கு ஜனங்கள் அதிகமாக அபிவிருத்தி படைந்திருக்கின்றார்களா? இல்லை. முன் இருந்த ஜனசமூக யோக்கியப் பொறுப்பு, கண்ணியம், இவைகள் கூட ஆயிர மடங்கு குறைந்து விட்டது என்பதைத் தவிர வேறு என்ன சமாதானம் சொல்லகூடும். உங்களிடம் வந்து 'ஆங்கில பாஷை' 'அன்னிய பாஷை' 'நீச பாஷை' அதைப்படிக்கக்கூடாது என்று சொல்லி விட்டு உங்களை மோக்ஷத்துக்கு அனுப்பவும் உங்கள்முன்னோர்களின் ஆன்மா சாந்தியடையும்படி செய்யவும், என்று சொல்லி உங்களிடமிருந்தே பெற்ற பணத்தைக் கொண்டு தங்கள் பிள்ளைகுட்டிகளை மட்டும் அவ்வாங்கில பாஷையைப் படிக்கச் செய்து உங்கள் தலைமைக்கென்று காங்கிரசின் மூலம் உத்தியோகங்கள் உண்டாக்கி அவைகளை அவர்களே பெற்று வருகின்றார்கள். அதன் ரகசியம் என்ன என்பதை நீங்கள் சற்றாவது யோசித்துப் பார்த்தீர்களா? காங்கிரஸ் ஏற்பட்டதின் பலனாய், சத்திரத்தில் சாப்பிட்டு முனிசிபல்லாந்தர் வெளிச்சத்தில் படித்த பஞ்சாங்கப்பார்ப்பனர்கள் சாஸ்திரிகள் ஆகியவர்களின் வீட்டுப்பிள்ளைகள் தானே இவ்வநீச அரசாங்கத்தில் 'கொடுங்கோல் அரசாங்கத்தில்' 'அன்னிய அரசாங்கத்தில்' உள்ள உயர்ந்த உத்தியோகம்முதல் தாழ்ந்த உத்தியோகம் வரையில் நிரப்பி இருப்பதுடன் ஜாதி ஆணவமும் கொண்டு நமக்கு எவ்வளவு கொடுமையும், அவமானமும், இழிவும் உண்டாக்க முடியுமோ, அவ்வளவையும் சற்றும் ஈவு, இரக்கமன்னியில் செய்து வருகின்றார்களா இல்லையோ என்பதை யோசித்துப் பாருங்கள். சமீப காலத்திற்கு முன் வரையில் ஹைகோர்ட் ஜட்ஜுகளாகவும் மாகாண நிர்வாக உத்தியோ

கன்தர்களாகவும் இருந்தது யார்? நம்மவர்களில் படித்தவர்களா? அல்லது பிரபுக்களாகவும், பெரும் பண்ணைகளாகவும் உள்ளவர்களா? அல்லது நம்மிடம் வாழ்வுக்கும் சாவுக்கும் சடங்குகள் பேரால் பிச்சை பெற்று வயிறு வளர்த்து வந்த பார்ப்பனக்கூட்டத்தார்களா என்பதை யோசித்துப்பாருங்கள்.

காங்கிரஸ் ஏமாற்றத்துக்குமுன், அதாவது வெள்ளைக்காரர்கள் பார்ப்பனர்களுக்கு உத்தியோகத்தின் பேரால் லஞ்சம் கொடுக்க வேண்டிய அவசியத்திற்கு முன் நமது தேசத்தில் வருஷம் ஒன்றுக்கு 25 அல்லது 30 கோடி ரூபாய் தான் சர்க்காருக்கு வரும்படி வரியாக வசூலிக்கப்பட்டு வந்தது. காங்கிரசின் 50 வருஷ வேலையின் பயனாய் இன்று 140, 150 கோடி ரூபாய் வருஷா வருஷம் குடிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. ஒன்றுக்கு ஐந்து மடங்கு அதிகவரி ஏற்பட்டதால் கஷ்டப்படுவதும் கொடுமைப்படுவதும் விவசாயமும் வியாபாரமும் செய்யும்குடிகளாகிய நாமும் ஏழைகளும் கூலிகளும் அல்லாமல் பிச்சை எடுத்து வந்த கூட்டத்தாராகிய இன்றைய "பூரணசுயேச்சை" வாதிகளல்ல. ஒருபுறம் மாதம் லக்ஷக்கணக்கான சகல ஜனங்கள் இந்நாட்டில் வேலையில்லாமல் வெளிநாடுகளுக்கு கூலிகளாய்ச்செல்லவும் மற்றொருபுறம் சர்க்கார் இவ்விதம் ஒன்றுக்கு ஐந்து மடங்காக அதிகவரிவாங்கவும் என்ன அவசியம் ஏற்பட்டது. காங்கிரசுக்குமுன் ஆள் ஒன்றுக்கு மாதம் 2500 ரூபாய் சம்பளத்தில் 5 ஐகோர்ட் ஜட்ஜிகள் இருந்தார்கள். இன்று மாதம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 4000 ரூபாய் சம்பளத்தில் 15 ஐகோர்ட்டு ஜட்ஜிகள் இருக்கிறார்கள்.

எனவே முன் வருஷம் 1க்கு ஒரு லக்ஷத்து ஐம்பதினாயிர ரூபாய் ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் சம்பளமென்றால் இன்று 15 பேருக்கு (பதினைந்து—நான்கு—அறுபது, அறுபதாயிரம், ஆறு—பன்னிரண்டு—எழுபத்திரண்டு, வருஷம் ஒன்றுக்கு ஏழு லக்ஷத்து இருபதினாயிரம் ரூபாய் செலவு ஆகிறது. முன்பு அரசியல் நிர்வாக அங்கத்தினராக 5500 ரூபாயில் இரு மந்திரியும் அவர்களுக்குள்ள இரண்டு காரியதரிசிக்கு இரண்டாயிரம் ரூபாய்சம்பளமென்றால் இன்று 5500 ரூபாயில் ஏழு மந்திரிகளும் ஏற்பட்டு அவர்களுக்கு ஒரு பிரசிடெண்டு, வைஸ் பிரசிடெண்டு, மந்திரிகளுக்கு ஐந்து காரியதரிசி, இவர்களுக்கு கொட்டிக் கொடுக்கும் சம்பளம் எத்தனை லக்ஷம் ரூபாய்கள் ஆகின்றது என்றுபாருங்கள். முன்பு மாகாண சட்டசபையில் 8 பிரதிநிதிகள் என்றால் இன்று 150 பெயர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அக்காலடிச்செலவைவிட இன்று 15 மடங்கு அதிக படிச்செலவு ஆகிறதல்லவா? இவ்விதமாகவே இனியும் 'விடுதலையும்' 'சுயராஜ்யமும்' 'சீர்திருத்தத் திட்டமும்' 'பூரண சுயேச்சையும்' வளர்ந்து கொண்டே போனால் நமது கதி என்ன ஆவது? இதை சற்று சுயபுத்தியோடு யோசித்துப்பாருங்கள். இவ்விதம் பல விதத்திலும் அரசியல் பேராலும் மதத்தின் பேராலும் நம்மை மாற்றி சகல பெருமையுடைய பதவிகளிலும் உத்தியோகங்களிலும் பார்ப்பனர்கள் உட்கார்ந்துகொண்டு நம்மை இழிவும் செய்ய ஆரம்பித்த பின்புதான் நாம் சகிக்காது, பாமர மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்றும், இருக்கும் உத்தியோகங்களிலும் இனி ஆகும் உத்தியோகங்களிலும் நமக்கும் சரியான பங்கு விகிதம் கிடைக்க வேண்டுமென்றும் கேட்கத் தொடங்கி விட்டோம். நாம் இப்படிச்செய்தால் இனி பார்ப்பனர்கள் உத்தியோகத்தை ஒரு நாளும் அதிகரிக்க மாட்டார்கள், இது பிராமண துவேஷமா? தேசத்துரோகமா? என்று தான் உங்களை கேட்கிறேன். காங்கிரசின் பேரால் தேசியத்தின் பேரால் உங்களிடம் வந்து கூச்சல்போடும் நபர்களுக்கு நமது வரிகள் இன்னமும் ஒன்றுக்கு பத்துவீதம் உயர்ந்தாலும் அவர்களுக்கு ஒரு அம்மன் காசு நஷ்டம் வராது. ஆதலால் அவர்களுக்கு வரி உயர்வைப்பற்றி சிறிதும் கவலை இல்லை. பார்ப்பனர்கள் சொல்லிக்கொடுத்தபடி இங்குவந்து பேசி விடுகின்றார்கள். எனக்குப் பொதுவாக எந்தத்தனிப்பட்ட நபரிடமும் துவேஷமில்லை, எல்லோரிடமும்நான் நேசமாய்த்தான் இருக்கின்றேன். திரு. சீனிவாசய்யங்கார் முதல் எல்லா காங்கிரஸ் வாதிகளும் மற்றும் அவர்களது பிரசாரகர்களும் இப்போது என்னை வந்து காங்கிரசை நடத்துங்கள் என்று தான் கூப்பிடுகின்றார்கள். எத்தனையோ பேர் என்னைப்பற்றி எவ்வளவோ விஷமப்பிரசாரம் செய்தும் என் மீது அல்லது எனது சொந்த வாழ்க்கையில் ஒரு குற்றமாவது கண்டு பிடித்து எடுத்துக்காட்டினவர்கள் அல்லமற்றப்படி புகழ்ந்தும் பேசிக்கொண்டுதான் வருகின்றார்கள்.


உதாரணமாக சென்றவாரம் கூட திரு சீனிவாசய்யங்கார் சென்னையில் ஒரு பிரசங்கம் செய்தபோது திரு. ராமசாமி நாயக்கர் வந்து காங்கிரஸ் நிர்வாக பதவியை ஏற்றுக்கொண்டு நடத்தினால் நான் அவரைப் பின்பற்றத் தயாராயிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஒருக்காலமும் இந்த காங்கிரசின் பக்கம் திரும்பிப் பார்க்கமாட்டேன். ஒருசமயம் காங்கிரசை ஒழிக்க என்னால் என்வாழ்நாளில் முடியாமல் போனாலும் போகலாம், ஆனாலும் எனது வாலிப வீரர்கள் ஆயிரக்கணக்காய் அதை ஒழிக்கக் காத்திருக்கின்றார்கள். அந்த தைரியத்தில் தான் நான் உயிர் விடுவேன், அதில்எனக்கு சந்தேகமில்லை.

## மந்திரிகள் விஷயம்.

இன்றைய மந்திரிகளான திருவாளர்கள், டாக்டர் சுப்பராயன் அவர்களும் எஸ். முத்தையமுதலியார், சேதுரத்தினமையர் ஆகியவர்களும் "காங்கிரஸ்காரர்களால் கண்டிக்கப்படுகிறார்கள், விசேஷமாய் கனம் எஸ். முத்தையமுதலியார் அவர்கள் அடிக்கடி கண்டிக்கப்படுகிறார். துரோகம் விளைவித்ததாக தூற்றப்படுகிறார். இதன் ரகசியம் என்ன? 'இரட்டை ஆட்சி பயனில்லை என்பதும் மந்திரிகளை ஆதரிக்கவோ, ஆதரிப்பவர்களுக்கு ஆதரவுகாட்டவோ கூடாதென்பதும் அக்காங்கிரசின் திட்டமும் தீர்மானமும் ஆகும். சென்ற சட்டசபைதேர்தல் முடிந்ததும் கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களின் மந்திரி சபையை அமைத்துகொடுத்தது இந்தகாங்கிரஸ் 'வீரர்'களா அல்லவா? என்று கேட்கின்றேன். இவர்கள் சொன்னபடி ஆடுவதாக ஒப்புக்கொண்டதின்மீது திருவாளர்கள் ரெங்கநாத முதலியாரும் ஆரோக்கியசாமி முதலியாரும் காங்கிரசுக் காரர்களால் ஆதரிக்கப் பட்டார்கள். காங்கிரசுக் காரர்களின் இந்த அயோக்கியத்தனத்தை கண்டித்து மாகாண காங்கிரஸ் கமிட்டியிலும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், சென்ற திரு. எஸ் முத்தைய முதலியார்வாதாடினார். அவருக்கு அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டியில் பேசுவதற்குக்கூடசந்தர்ப்பம் அளிக்கமறுத்துவிட்டு தாங்கள் மந்திரிசபை ஏற்படுத்தினதையும் அதை ஆதரித்ததையும்பற்றி தங்களையே பாராட்டி ஒரு தீர்மானமும் செய்துகொண்டார்கள். இதற்குக்காரணம் என்னவென்றால் பார்ப்பனரல்லாதார்கக்ஷியாகிய ஜஸ்டிஸ்கக்ஷியை அழிக்க இப்படிச்செய்ய நேரிட்டதாம் இதை அறிந்தபின் உண்மையான பார்ப்பனரல்லாத ரத்தம் ஓடும்எந்தபார்ப்பனரல்லாதாராவது காங்கிரசில் இருக்க முடியுமா என்றுநீங்களே யோசித்துப்பாருங்கள்.

எனவே திரு. எஸ். முத்தைய முதலியார் காங்கிரஸ் கமிட்டியைவிட்டு விலகிவிட வேண்டியது அவசியமாயிற்று. எனவே விலகின முதலியார் தனிகக்ஷியமைத்து, மந்திரிவேலை ஒப்புக்கொண்டு, பார்ப்பனரல்லாதாருக்குத்தம்மால் கூடிய நன்மைசெய்யவேண்டியதாயிற்று. பழய மந்திரிகள் 7 வருஷமாய்ச் செய்ய முடியாதவேலையை திரு. முத்தைய முதலியார் மந்திரியானவுடன் செய்து முடித்தார். அவர்தான் சர்க்கார் உத்தியோகங்களை இதுவரை பார்ப்பனர்கள் மாத்திரம் கொள்ளையடித்து வந்ததுபோல் இல்லாமல் எல்லா மக்களுக்கும் சமசந்தர்ப்பமும் சம உரிமையும் இருக்கும்படி செய்துவிட்டார். இதனாலேயே பார்ப்பனர்கள் திரு. முத்தையமுதலியாரை அதிகமாக வைகின்றார்கள், வையவும் கூலி கொடுக்கின்றார்கள். பார்ப்பனர்களுக்கு அவர்களின் ஏகபோக அனுபவத்தில் ஒருசிறு நஷ்டம் வருவதானாலும் அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிவிடுவார்கள். ஒரு சிறு மாறுதல் செய்ய ஆரம்பித்தால்கூட உடனே காங்கிரஸ் துரோகிகள் என்று சொல்லிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட காங்கிரஸ் நமக்கு வேண்டாம், இப்படிப்பட்ட தேசாபிமானமும் நமக்கு வேண்டாம். இதனால் என்ன வந்தாலும் வரட்டும், நீங்கள் காங்கிரஸ் துரோக பூச்சாண்டிக்கோ தேசத்துரோக பூச்சாண்டிக்கோ பயப்பட்டுவிடாதீர்கள். அடுத்துவரும் தேர்தலில் திரு முத்தையா முதலியாருக்கு விரோதமாய் பார்ப்பனர்கள் வெகுபாடு படுவார்கள், அநேக கூலிகளை அமர்த்தி உங்களை ஏமாற்றப் பார்ப்பார்கள், நீங்கள் ஏமாந்து போகாதீர்கள். நன்றாய் உங்கள் சுய புத்தியைக்கொண்டு யோசித்துப்பார்த்து எதையும் செய்யுங்கள். இதனால் பெரும்பாலான சமூகம் ஏமாற்றப்படுவதுடன் அநீதியும் நடைபெறுகிறதே என்று வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை அனுஷ்டிக்க எஸ். முத்தையா முதலியார் கிளம்பினால்

இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு விபவ-ஹு பங்குனி-மீ 11-உ.

## எதிர்ப்பிரசாரங்கள்.

தமிழ் நாட்டில் பார்ப்பனர்களில் திரு. சத்தியமூர்த்தியும் பார்ப்பனரல்லாதார்களில் திரு. வாதராஜுலுவும் இரண்டிற்கும் நடுவில் அதாவது பண்டி நக்கூட்டத்தில் திரு. கலியாணசுந்தர முதலியாரும் ஆக மூவர்கள் எப்படியாவது ஒரு வழியில் தினம் தங்களை விளம்பரம் செய்து கொண்டும் எப்படியாவது ஒரு வழியில் நாடோறும் சூரிய உதயமும் அஸ்தமனமுமாகி இன்றையநாள் கழிந்ததா என்கின்றதுமானகவலையேவாழ்க்கையாகக்கொண்டவர்களே யல்லாமல் மற்றபடி 'நேற்று என்ன சொன்னோம், என்ன எழுதினோம், எப்படி நடந்தோம், இன்று என்ன சொல்லுகின்றோம், எப்படி நடக்கப் போகின்றோம், நாளை நமது கதி என்ன' என்கின்றகவலையே அணுவளவும்இல்லாதவர்களாய் அவ்வளவுபெரிய'துறவிகள்' "முற்றும் துறந்த ஞானிகள்" என்றசொல்லத்தக்கவண்ணம் நடந்துவருகின்றார்கள். இம்மூவருக்கும் கொஞ்ச காலமாய் தமிழ் நாட்டில் ஒன்று போலவே நாணயம் குன்றாது வெளியில் தலைநீட்ட யோக்கியதை இல்லாத அளவு செல்வாக்கு ஏறிவிட்டது. இவர்களில் திரு. சத்தியமூர்த்தியோ வெளிப்படையாய் காலித்தனத்தில் இறங்கி விட்டார். இவர் கொஞ்சநாளைக்கு முன் சென்னை கார்ப்பரேஷன் பிரசிடெண்டு திரு ஏ. ராமசாமிமுதலியாரை நாய், கழுதை, பன்றி, மடையன் என்பது போன்றமொழிகளை குடி வெறியில் உளறுவதுபோல் உளறி கலகம்செய்துவிட்டுமறுநாள்மன்னிப்புகேட்டுக்கொண்டது யாவருக்கும் தெரியும். அதுபோலவே இந்த வாரத்திலும் சட்டசபைக் கூட்டத்தில் ஜனாப் டாக்டர் மகமது உஸ்மானைப்பார்த்து 'உமக்கு திருசீனிவாசய்யங்காருடையகால் பூட்சுகழற்ற யோக்யதைஉண்டா' என்றுகேட்டுவிட்டுஉடனேவாபீசுவாங்கிக்கொண்டார்.

திரு. சத்தியமூர்த்தியின் இம்மாதிரியான அயோக்கியத்தனங்கள் நாட்டில் பார்ப்பனர்களாலும் அவர்களது கூலிகளான காங்கிரஸ்காரர்கள் என்பவர்களாலும் பாராட்டப்பட்டே வருகின்றது. காங்கிரஸ்காரர்கள் சென்ற பக்கமெல்லாம் உதைபட்டுக்கொண்டு வருகிறார்கள் இழிவாய் நடத்தப்படுகிறார்கள் என்றால், அவர்கள் உதைபடுவதிலும் இழிவாய் நடத்தப்படுவதிலும் ஏதாவது அதிசயமிருக்க முடியுமா? ஒரு வேடிக்கை கதை சொல்லுவார்கள். அதாவது,

ஒரு பெரியார் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஒரு அயோக்கியன் போகும் போதும் வரும் போதும் தனது கால் அவர் மீது படும்படி ஆணவமாக நடப்பதும் உடனே "தெரியாமல் கால் பட்டுவிட்டது, மன்னிக்க வேண்டும்" என்று சொல்லி கால்பட்ட இடத்தை தொட்டு கண்ணில் ஒத்திக் கொள்ளுவதுமாயிருந்தான். அப்பெரியவர் பார்த்தார். இவன் ஆணவத்தையும் மானம் கெட்ட தன்மையையும் பார்த்து இவனுக்குசரியானபடி புத்தி கற்பிக்க எண்ணி அவ்வயோக்யன் உட்கார்ந்திருக்கும் போதுபிடரியில் ஒரு சரியானஉதை கொடுத்து கழுத்து முறியும்படி செய்துவிட்டு 'தெரியாமல் கால்பட்டுவிட்டது' என்று சொல்லி இரண்டு கையாலும் அவன் கழுத்தைத் தொட்டு இரு கண்களிலும் நன்றாய் ஒத்திக் கொண்டாராம். உடனே உதைபட்டவனுக்கு புத்தி வந்து "என் கால் அவ்வளவு தடவை பட்டதற்கும் தங்கள் கால் ஒருதடவை பட்டதற்கும் தங்கள் கால் சற்று பலமாய் பட்டு விட்டதால் நம் இருவர்களுக்கும் கணக்கு சரியாய்விட்டது, இனியார் மீதும் பாக்கி இல்லை, ஆதலால் தயவு செய்து மீதி எண்ணிக்கைகளைமறந்து விடுங்கள்" என்று கேட்டுக் கொண்டானாம்.

இக்கதைபோல் இவர்கள் விடிந்தெழுந்தால் ஏதாவது பேசுவதும் பிறகு பல்லைக் காட்டுவதும் மன்னிப்பு கேட்பதும் நாணமல் மற்றும் தங்களைப் போலுள்ள காலிகளுடன் இதைப் பெருமையாய்ப் பேசிமகிழ்ந்து கொள்வதும் பிறகு இவர்கள் காலித்தனத்திற்கும் சூஸ்திரர்களாய் இருக்கின்ற அயோக்கியரிடம் போய் கூலி பெற்றுக் கொள்ளுவதும் நித்திய கர்மமாய் போய் விட்டது.

இம்மாதிரி பொறுப்பற்ற காலிகளின் நடவடிக்கைகள் வெகு சீக்கிரத்தில் நமது நாட்டு மக்களை ராணுவச்சட்டத்தின் கீழும் தண்டப் போலீஸ் அதிகாரத்தின் கீழும் வாழவேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டு விடும் என்று வெகு அழுத்தமாய் எச்சரிக்கை செய்கின்றோம். இதன் உண்மையை அறிய வேண்டுமானால் இதை எழுதி வைத்துக் கொள்ளட்டும். தமிழ் நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட காலித்தனம் இந்திய சட்ட சபைக்கும் பரவி அங்கும் கை கலக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதும் திரு நேரு என்கின்ற ஒரு பார்ப்பனர் இந்திய தேசியத்தலைவர் என்னும் பேரால் அங்கும் காலித்தனமாய் நடந்து கொண்டதும் நமக்கு இந்த எண்ணத்தை உறுதிப்படுத்துகின்றது.

நிற்க தன்னை சதா தேசியவாதி என்று சொல்லிக் கொள்வதன் மூலம் வாழும் திரு வாதராஜுலுவுக்கு நமது நாட்டுப் பார்ப்பனர்களின் இந்த விதமான காலித்தனமான காரியங்களில் கவலையில்லாமல் "நாயக்கர்பிரசாரத்தால்" உலகம் முழுகிப்போவதுபோல் நீலிக்கண்ணீர் விட்டு பார்ப்பனர்களின் காலுக்குள்ளாக புகுவதற்கே புத்தி போய்க் கொண்டிருக்கின்றது. இது வரை 'நாயக்கர் பிரசாரத்தை'ப்பற்றி இவ்வளவு ஆபத்து வந்து விட்டதாய் ஊளையிடும் எவராவது 'நாயக்கரின்' எந்தபிரசாரத்திற்கு எந்தகருத்துக்கு எந்த வாக்கியத்திற்கு தாங்கள் கவலைப்படுகின்றார்கள் என்று பொது ஜனங்களுக்குஎடுத்துக்காட்டிசமாதானம் சொல்லிகூப்பாடு போட்டிருக்கின்றார்கள்? மொத்தத்தில் "நாயக்கர் பிரசாரம்" "நாஸ்திக பிரசாரம்" "சுயமரியாதைப்புரட்டு" "மதம்போச்சு" "சமயத்திற்கு ஆபத்து" என்று எழுதியும் பேசியும் பாமர மக்களை ஏமாற்றி வாழப் பார்ப்பதைத்தவிர இவர்கள் நம்மீது கண்டு பிடித்த குற்றம் என்ன என்று கேட்கின்றோம்.

16—3—29-உ தமிழ்நாடு பத்திரிகை தலையங்கத்தில்:—

"தமிழ்நாடு காங்கிரசுக்கு ஒரு கண்ணாயிருந்த ஸ்ரீ ஈ. வி. ராமசாமி நாயக்கர் சமய சமூக அரசியல் விஷயங்களில் கண்ணிழந்த குருடர்போல் மனம்போன போக்கில் பிரசாரம் செய்ததின் பயனாக தமிழ்நாட்டில் எதிர்ப்புச்சக்தி தோன்றியிருப்பதை யாரும் மறுக்கமுடியாது"

"சமதர்மக் கொள்கைகளில் நமக்கும் நாயக்கருக்கும் பேதமிருப்பதாக ஒருவரும் சொல்லமுடியாது"

"செங்கல்பட்டில் செய்த தீர்மானத்தை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது"

என்று எழுதியிருக்கின்றார்.

சமய சமூக விஷயங்களில் திரு வாதராஜுலுக்கு இஷ்டமில்லாத நமது கொள்கை எது? கண்மூடித்தனமாக நாம் செய்த பிரசாரக் கருத்து எது? என்று திரு வாதராஜுலுவால் எடுத்துக்காட்ட முடியுமா என்று கேட்கின்றோம். நம்மைவிட "மோசமாகவும் கண்மூடித்தனமாகவும்" உத்திரவு போட்டும்நிர்த்தவர்களை, சிறையில்போட்டும்நிர்ப்பந்தம் செய்த திரு ஆப்கன் அமீர் அமானுல்லாவுக்கு "பணமும்படைத்திரட்டியும்தயாராய்வைத்துக்கொண்டு அங்கு செல்வதற்குபிரிட்டிஷ்அரசாங்கத்தின் உத்திரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த "சமூக சமுதாய சீர்திருத்த வீரருக்கு" நம்மிடம் என்ன குறை காணப்பட்டது என்று கேட்கின்றோம்.

தவிர செங்கல்பட்டு தீர்மானத்தில் இவர் எதை ஆக்ஷேபிக்கிறார் என்று கேட்கின்றோம். ஜாதிப் பட்டத்தையும் சமயக்குறிகளையும் எடுத்து விடுவதைப்பற்றியா? பெண்கள் தங்கள் இஷ்டப்படி கணவனை தேடிக் கொள்வதைப்பற்றியா? இஷ்டமில்லாதபோது விலகிக்கொள்வதைப் பற்றியா? கடவுள் பூஜைக்கு பணச்செலவு தாகணும் கூடாது என்பதைப்பற்றியா? என்று கேட்கின்றோம்.

திரு. வாதராஜுலு வெகு காலத்திற்கு முன்பே ஜாதிப் பட்டத்தையும் சமயக் குறிகளையும் எடுத்துவிட்டதாக விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறார் என்பதை நாம்

குறைப்பிக்கமுடியும்; பெண்கள் விஷயத்தைப்பற்றியும் தனது மனைவியார் அவர்களது கழுத்தில் இருந்த தாலியைக்கூட அறுத்தெறிந்துவிட்டதாகவும் சர்வ சுதந்திரத்துடன் இருக்க அனுமதித்திருப்பதாகவும் தானும் எழுதியதோடு தனது மனைவியாரேயாலும் வெளிப்படுத்தி இருக்கின்றார். கடவுள் விஷயத்திலும் தான் கோவிலுக்கே போவதில்லை என்றும் விக்கிரக வணக்கமே செய்வதில்லை என்றும் அநேக இடங்களில் சொல்லி இருக்கின்றார்.

அன்றியும் இவர் விக்கிரகஆராதனை இல்லாத ஆரிய சமாஜத்தில் சேர்ந்து கொஞ்ச காலம் இருந்தார். இப்பேர்பட்டவருக்கு செங்கல்பட்டுதீர்மானத்தில் எதுபட்டுக்கொண்டது என்பது நமக்கு விளங்கவில்லை.

நிற்க, திரு. கல்யாணசுந்தர முதலியாரின் விஷயம் வரவர மிக இழிவான துறையில் போய்க்கொண்டிருக்கின்றது. இவருக்கும் திரு. சத்தியமூர்த்திக்கும் கடுகளவு வித்தியாசமாவது இருப்பதாகக் கண்டுபிடிப்பதற்கில்லை. ஆனால்முந்தினவர் மன்னிப்புகேட்டுக்கொள்வார், இவரோ தான் சொல்லவில்லையென்றுபொய்சொல்லிவிடுவார். இதுஇரண்டிலும்பிந்தினவர் குணமே மிகவும் இழிந்துரைக்கத்தக்கது. இவரும் தனது பத்திரிக்கையில் "நாயக்கர் எனது அன்பர் அவர், சிங்கக்குட்டி" என்று எழுதுவதும் திருவாளர்கள் பாவலர், குழந்தை ஷாமி முதலிய ஆசாமிகளுடன் கூடிக்கொண்டு இழிதன்மையில் விஷமப்பிரசாரம் செய்வதும், "சுயமரியாதை இயக்கம் நல்லதுதான் ஆனால் அது ஜஸ்டிஸ்கக்ஷியில்சேர்ந்துகெட்டுப்போய்விட்டது" என்று சொல்லுவதும் "ஜஸ்டிஸ் கக்ஷி நல்லதுதான் ஆனால் அது சுயமரியாதைஇயக்கத்தில் சேர்ந்து கெட்டுப்போய்விட்டது" என்பதும், கூட்டத்தில் எங்காவது சிக்கிக்கொண்டால் பல்லைக்காட்டி கெஞ்சுவதும் தனது அறையில்இருக்கும்போது அவன்முட்டாள் இவன் எட்டன் படியாதவன் என்பது மானமுறையில் பேசுவதுமாய்நடந்துகொள்கின்றார். எனவே இம்மூவரும் சேர்ந்துதான் "இந்தியநாட்டுதேசிய'க்காங்கிரசைகாப்பாற்றுகின்றவர்களாக பறைஅடித்துக் கொள்ளுகின்றவர்கள் என்பதை பொது ஜனங்கள் உணர ஆசைப்படுகின்றோம்.

நிற்க ஆஸ்திகச்சங்கம்ஸ்தாபித்தவர்களும் அதன் மூலம் "கடவுளைக்காப்பாற்றவும் சமயங்களைக்காப்பாற்றவும் வேலைசெய்கின்றோம்" என்றுசொல்லிக்கொண்டு புறப்பட்டிருப்பவர்களுமான திருவாளர்கள்பாவலர், குழந்தை, ஷாபிசாயபு, ஜயவேலு, கல்யாணசுந்தர முதலியார் முதலிய கனவான்களுக்கு முதலாவது "கடவுள் பக்தியோ" "சமய" ஒழுக்கமோ நாணயமோ உண்டா என்பதை யோசித்துப்பாருங்கள். சிஷ்யர்களுடைய யோக்கியதை அறியவேண்டுமானால் குருவின் யோக்கியதையிலிருந்துதெரிந்துகொள்ளலாம். இவர்களின் குருவான திரு. கல்யாணசுந்தர முதலியாரின் கடவுள்எது? அதற்கு கற்பிக்கப்பட்ட ஒழுக்கம் எது? என்று அவராவது மற்றும் யாராவது சொல்லமுடியுமா? அதுபோலவே திரு. முதலியாருக்கு அவரது சமயம் எது? அதன் கொள்கைகள் எவை? அவற்றுள் அவர் பின் பற்றுவது எது? என்று அவராவது மற்றும யாராவது சொல்லமுடியுமா என்று கேட்கின்றோம்.

திரு. முதலியார் சிஷ்யர்களில் ஒருவருவர் "நாயக்கருக்கு" ஒரு பகிரங்கக் கடிதம் எழுதி இருக்கிறாராம். அதாவது அதில் திரு நாயக்கர் அந்த சிஷ்யருடன் வாதுக்கு வரவேண்டுமாம், எதைப்பற்றி என்றால் திரு நாயக்கர் வாதம் வியர்க்காத தோஷமுடையதாம். ஆதலால் "நாயக்கர்" இலக்கிய இலக்கணதர்க்க சமய சாஸ்திர அனுபவ ஞானம் இல்லாதவரென்று நிரூபணம் செய்ய தயாராயிருக்கின்றாராம். இதைத்தான் பத்திரிகைகளுக்கு பகிரங்கக்கடிதம் என்று எழுதியிருக்கின்றார்.

திரு. 'நாயக்கர்' தனக்கு இலக்கண இலக்கியம் தெரியுமென்று எப்போதாவது சொன்னாரா? தர்க்க சமயசாஸ்திரம் பார்த்திருப்பதாய் எப்போதாவது சொன்னாரா? மனிதனுக்கு பகுத்தறிவு இருக்கின்றதா இல்லையா என்றும் அந்த அறிவு என்ன சொல்லுகின்றது என்றும் தான் சொல்லுவது அந்த அறிவுக்கு பொருத்தமானதா விரோதமானதா என்றும் தான் கேட்கின்றாரே ஒழிய வேறு என்ன? இதற்கு சமாதானம் சொல்லமுடியாமல் இலக்கணத்தில் வெல்லுவேன் இலக்கிய சாஸ்திரத்தில் வெல்லுவேன், அதுவும் "இலக்கியஇலக்கணதர்க்கசாஸ்திரபண்டிதர்"களான தமிழ்பேசத்தெரியாத திருவாளர்கள் எ. ராமசாமி முதலியாரும் தணிகாசலம் செட்டியாரும் தான் இதற்கு மத்தியஸ்தராயிருக்கவேண்டுமாம்.

எனவே இந்த அறிவாளிகளின் தீரத்தை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம். இந்த 'பண்டிதர்களை' மத்தியஸ்தமாக வைத்துக்கொள்ளும் பண்டிதருக்கு எவ்வளவு இலக்கண இலக்கிய அனுபவ ஞானம் இருக்கும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

எனவே இதிலிருந்தே ஆஸ்திகப்பிரசாரகர்களின் அறிவு எவ்வளவு என்பதை உணர்ந்துகொள்ளலாம். ஆஸ்திகர்கள் தங்களின் காலித்தனத்தாலும் தேசத் துரோக பூச்சாண்டியாலும் நாஸ்திகபூச்சாண்டியாலும் சுயமரியாதை இயக்கத்தை அசைத்து விட முடியாது என்பதையும் அசைக்கப் புறப்பட்டிருப்பதாய் சொல்லிக்கொள்ளும் நபர்களும் வெறும் கூலிக்கு மாரடிப்பவர்கள் என்றும் தெரிவித்துகொள்வதோடு இதற்காக சுயமரியாதைக்காரர்கள் மெனக்கெட்டு அவர்களுக்கு எதிர்பிரசாரம் செய்வதற்கென்று காலத்தையும எண்ணத்தையும் வீணில் செலவழிக்கவேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

## பிழைதிருத்தம்.

### திருக்குறள்.

இவ்வாரப்பத்திரிகையிலும் சென்ற வாரப்பத்திரிகையிலும் திருக்குறளைப்பற்றி விளம்பரம் செய்திருப்பதில் விலை பிரதி1க்கு ரூ1—8—0 என்று பிசகாய்க்குறிக்கப்பட்டிருக்கிறது. அதை பிரதி1க்கு விலை0—8—0(எட்டணா)என்றுதிருத்திக்கொள்ளக்கோருகிறோம். (வி. மானேஜர்.)

---

## திருநெல்வேலியில் மார்ச்சு 29, 30, 31-ம் தேதிகளில் கூடப் போகும் சைவப்பெரியார்கள் மகாநாட்டிற்கு ஒரு சைவன் எனப்படுவோரின் வினாக்கள்:—

1 நமது நாட்டில் சைவசமயத்திற்குமுன்னால் ஏதாவது சமயம் இருந்ததா ?

2 அது எது?

3 சைவ சமயம் என்பது எப்போது உண்டாயிற்று?

4 அதற்கு முதல் கர்த்தா அல்லது சமயாச்சாரி என்பவர் யாவர் ?

5 சைவ சமயத்திற்கு மற்ற சமயத்தில் இல்லாத தனிக் கொள்கைகள் என்ன?

6 அதற்கு ஆதாரம் யாது?

7 சைவம் என்பது சிவன் என்னும் ஒரு உருவமுள்ள கடவுளை வழிபடு கடவுளாகக் கொண்டதா ?

8 அல்லது தனி தெய்வமில்லாமல் ஏதாவது கொள்கைகளை மாத்திரமோ அல்லது குணத்தை மாத்திரமோ அடிப்படையாகக் கொண்டதா ?

9 சிவன் என்பது ஒரு கடவுள் பெயரா?

10 ஒருதன்மையா ?

11 ஒரு குணமா ?

12 சிவனுக்கு உருவம் சொல்லப்படுகின்றதே, அது ஏன்?

13 அதற்குப் பெண்டு பிள்ளைகளும் இருப்பதாகக் காணப்படுகின்றதே, அதுஏன்?

14 சைவ சமய சம்மந்தமான பல கடவுள்களுக்கு உள்ள ஆயிரக்கணக்கான பெயர்கள் வட மொழியில் இருப்பானேன் ?

15 ஆயிரக் கணக்கான கடவுள்களுக்கும் அவர்களது பெண்டுபிள்ளைகளுக்கும் வேறு வேறு பெயர்கள் ஏன் ?

16 சைவத்திற்கும் சமணக் கொள்கைகளுக்கும் பௌத்தகொள்கைகளுக்கும்உள்ள வித்தியாசம் என்ன ?

17 ஆரிய வேதத்தையும் ஜீவபலி வேள்வியையும் சைவம் ஒப்புக் கொள்ளுகின்றதா மறுக்கின்றதா?

18 சைவ சமயாச்சாரியார்கள் என்பவர்கள் ஆரிய வேதத்தையும் அதில் காணும் வேள்விகளையும்ஒப்புக் கொள்ளுகின்றார்களா மறுக்கின்றார்களா ?

19 சமணர்கள் வேத வேள்வியை நிந்தனை செய்தார்கள் என்றால் அது எந்த வேதத்தையும் வேள்வியையும் ?

20 சைவ சமயத்திற்குள்ள சித்தாந்தமும் ஆகமமும் வட மொழியா தென்மொழியா ?

21 சைவ சமயத்தையே சேர்ந்த சைவக் கடவுள்கள் இருக்கும்தனித்தனிஸ்தலங்களுக்கு தனித்தனி பெருமை ஏன் ?

22 சமயாச்சாரிகள் என்பேர்களால் பாடப்பட்ட ஸ்தலங்களுக்கும் பாடப்பட்ட கடவுள்களுக்கும் மாத்திரம் அதிகமான மதிப்பு ஏன் ?

23 சைவ சமயாச்சாரியர்களும் சைவ

சமய பக்தர்களும் பௌத்தர்களையும் சமணர்களையும் துன்புறுத்தியதேன்?

24 துன்புறுத்தவில்லையானால் தேவாரம் முதலியவைகளில் அவர்களைக் கண்டபடி இழித்துக்கூறி வைதிருப்பதேன்?

25 வடமொழிக்கதைகளையும் வடமொழிப்புராணங்களையும் தள்ளிவிட்டால் சைவர்களுக்கு ஏதாவது கடவுள் உண்டா?

26 சைவத்திற்கு ஏகதெய்வ வணக்கமா? பல கடவுள் வணக்கமா?

27 எத்தனை கடவுள்கள் இதுவரைகண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றது?

28 இதோடு தீர்ந்ததா இனியும் உண்டாகுமா?

29 சைவசமயத்திற்கு கோவில் கொள்கை உண்டா?

30 விக்கிரக ஆராதனை உண்டா?

31 வேறு ஒருவன் அர்ச்சகனாக இருந்துதான் கடவுளை வணங்க வேண்டுமா?

32 ஆகிய இவைகளுக்கு ஆதாரம்எது?

33 சைவர்களில்ஒவ்வொருவரும் அவரவர் வணங்க வேண்டிய கடவுளை நேரில் பூசனை புரிய அவரவருக்கு உரிமை உண்டா?

34 சைவத்தில் ஜாதி வித்தியாசம் உண்டா?

35 சைவக் கோவில்களில் இப்போது ஜாதிவித்தியாசம் பாராட்டப்படுகின்றதா?

36 அதுசைவத்திற்கு முரண் அல்லவா?

37 முரணானால் அம்முரணுக்கு இதுவரை சைவர்கள் ஏதாவது பரிகாரம் செய்தார்களா?

38 கடவுளைவணங்க கற்பூரம் கொளுத்தி வைத்து வணங்க வேண்டும் என்பதற்கு ஏதாவது ஆகமம்உண்டா? எந்த ஆகமத்தில் சொல்லுகின்றது?

39 ஏதாவது ஒரு ஆகமத்தில் சொல்லப்பட்டால் அது ஆரியர்கள் ஆகமமா? தமிழர்கள் ஆகமமா?

40 கற்பூரம் கொளுத்தும் வழக்கம் எது முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது?

41 பிள்ளையார் என்று ஒரு கடவுளுக்கு சைவத்தில் இடம் இருக்கின்றதா?

42 கந்தப் புராணத்தை சைவர்கள் ஒப்புக் கொள்ளுகின்றார்களா? திருவிளையாடல் புராணத்தை ஒப்புக் கொள்ளுகின்றார்களா?

43 ஒப்புக் கொள்ளுவதானால் அது சைவத்திற்கு பொருந்தியது தானா?

44 சைவர்கள் சிவரகசியத்தையும் சிவமகாபுராணத்தையும் சிவபாரக்கிரமத்தையும் ஒப்புக் கொள்ளுகின்றார்களா?

45 நால்வர்கள் பிரமாவையும் விஷ்ணுவையும் ஒப்புக் கொள்ளுகின்றார்களா??

46 அவை தனித்தனிக்கடவுள்களா?

47 நால்வர்கள் விஷ்ணுவைத் தாழ்த்திப் பாடி இருந்தால் அது மதத்துவேஷமா அல்லவா?

48 மனுஸ்மிருதியையும் பாராசர்ஸ்மிருதியையும் சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

49 சமணர்கள் கழுவேற்றப்பட்டதை சைவர்கள் ஒப்புக் கொள்ளுகின்றார்களா? கோவில்களில் இன்றும் திருவிளையாடல்புராணக்கதை உற்சவங்கள் நடக்கின்றதைமறுக்கின்றார்களா ஒப்புக் கொள்ளுகின்றார்களா?

50 திருநீறு எதற்காகப் பூசுவது?

51 லிங்கத்திற்கும் ஆவுடையாருக்கும் சொல்லும்கதையை அதாவது (ஆண்குறி பெண்குறி) என்பதை ஒப்புக் கொள்ளுகின்றார்களா இல்லையா?

52 ஒப்புக் கொள்ளாவிட்டால் அந்தப்படிக்கு உள்ள வடமொழி ஆதாரத்திற்குஎன்ன பதில் சொல்லக்கூடும்?

53 லிங்கம் என்னும்வார்த்தை என்ன பாஷை? அதற்கு என்ன அர்த்தம்? எந்த ஆதாரப்படி?

54 கைலயங்கிரிஎது,சுப்பிரமணியன்எது முருகன் எது, கந்தன் எது, குமரன் எது?

55 மலையரசன் மகள் என்றால் என்ன?

56 இப்பொழுது இதுவரை நடந்துவந்த கோவில்முறை பூசைமுறை உற்சவமுறைமுதலியவைகளால் ஏற்பட்ட நன்மையென்ன?

57 இவை இப்படியே நடக்க வேண்டியவைதானா?

58 இவைகளின் போல் பலலக்ஷம் ரூபாய்கள் செலவாகின்றது நியாயந்தானா?

59 அந்த திரவியம் அச்செலவையும் காலத்தையும் வேறு வழியில் திருப்பலாமா அல்லது இப்படியேதான் இருக்கவேண்டுமா?

60 சைவர்கள் மேல் லோகத்தை ஒப்புக் கொண்டார்களா?

61 மறுபிறப்பை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

62 நிதிகளை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

63 பிராமணர்களை ஒப்புக்கொள்கின்றார்களா?

64 சமயாச்சாரிகளின் அற்புதங்களை எல்லாம் அப்படியே நடந்ததாகவே ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

65 மற்றும் சைவப் புராணங்களில் உள்ள எல்லா அற்புதங்களையும் நடந்ததாகவே ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

66 ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு சாமிக்கும் ஏற்பட்ட ஸ்தலமூர்த்தி தீர்த்த புராணங்களை உண்மை என்பதாக ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

67 சைவர்களுக்கு கல்யாணமுறை எது?

68 சைவர்களுக்கு அல்லது சைவச்சாமிகளுக்கு தேவதாசி முறைகள் உண்டா?

69 வருணாசிரமம் உண்டா?

70 உண்டென்றால் ஆதாரம் எது?

71 இல்லை என்றால் ஆதாரம் எது?

72 இப்பொழுது அமுலில் இருப்பதற்கு காரணம் என்ன?

73 சைவமடங்கள் எதற்கு?

74 அவைகள் இதுவரை சாதித்தது என்ன?

75 அம்மடங்கள் இனியும் இப்படியே இருக்க வேண்டியது தானா?

76 இம்மடங்களை திருத்த இதுவரை எந்தச் சைவராவது முயற்சித்தது உண்டா?

77 இப்பொழுதுள்ள சைவர்களில் சைவ சமயத்தைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல நிபுணர் யார்?

78 அருகதை உடையவர் யார்?

79 பாரதம் இராமாயணம் பாகவதம்முதலிய வைணவப்புராணங்களில் வரும் சிவனை சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

---

## காலஞ்சென்றார்!

திருச்சியில் சுயமரியாதை இயக்கத்துக்கு ஓர் அரண்போன்றிருக்கும் திருவாளர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களின் மாண்புமிக்க மனைவியார் ஸ்ரீராஜம்மாள் அவர்கள் சிலகாட்களாய் நோய்வாய்ப்பட்டிருந்து திடீரென்று யாரும் எதிர்பாராதவண்ணம் சென்ற செவ்வாய்க்கிழமை 19—3—29 தேதியிரவு காலஞ்சென்று விட்டதாக அறிந்து மிகவும் வருந்துகின்றோம். எமது ஆழ்ந்த அநுதாபத்தை திரு விஸ்வநாதம் அவர்கட்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

S. C. No. 1357 of 1928.
I. A. No. 438 of 1928.

| | |
|---|---|
| 1. குப்பாஞ் செட்டியார், 2. பழனியாண்டி செட்டியார், 3. குமரப்ப செட்டியார் | வாதிகள். மனுதாரர்கள். |

காளியம்மாள்—பிரதிவாதி. எதிர்மனுதாரி.

ஷை நெம்பரில் வாதிகளின் இறந்துபோன தகப்பனார் ராமசாமி செட்டியாருக்குபிரதிவாதியின் இறந்துபோன புருஷன் சுப்பரய பண்டாரம் 25—7—25 தேதியில் ரூ. 50க்கு எழுதிக்கொடுத்திருக்கிற பிராம்சரியின் பேரில் தாவா செய்தும் I. A. 438/28ல் வள்ளியம்மாள் என்று எழுதியிருப்பதை காளியம்மாள் என்று திருத்திக்கொள்ளும் படிக்கும் மனு போட்டு ஷை நம்பர் வாய்தாவும் மனுவாய்தாவும் இரண்டும் 28-3-29 தேதி ஷை கோர்ட்டில் வாய்தா போட்டிருக்கிறது என்ற சங்கதி அறியவும்.

ஈரோடு 22-3-29 } K. S. Krishnasami Iyengar, Pleader for Plaintiff.

---

## உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டு.

1929 ஞு அ. நெ. 42

வாதி:—

அ. வீர. சித. அண்ணாமலை செட்டியார்,

பிரதிவாதிகள்:—

வெங்கிடசாமி நாயக்கர்—1 முன் மைனராயிருந்து இப்போது மேஜரான கோவிந்தசாமி நாயக்கர்—2 உடுமலைப்பேட்டைதாலூகா சோமவாரப்பட்டி பஜாரபொட்டிநாயக்கனூரிலிருக்கும் பெருக்கார்கோட்டு வீட்டு ரங்கசாமி நாயக்கர் மகன் பொட்டி நாயக்கர் 3.

ஷை நெம்பரில் 3 ம் பிரதிவாதிக்கு தெரிவிக்கும் நோடீஸ், ஷை நெம்பர் விசாரணைக்காக 5—4—1929 தேதி வாய்தா போட்டிருக்கிறது. ஷை தேதியில் ஷை 3 ம் பிரதிவாதி ஆஜராகத்தவறினால் ஷை நெம்பர் ஷை 3 ம் பிரதியைப்பொருத்து ஒரு கக்ஷியாய் தீர்மானிக்கப்படும்.

21-3-1929 உடுமலைப் பேட்டை } எ. முத்தையா பிள்ளை, பி. ஏ. பி. எல்., வாதி வக்கீல்.

(9ம் பக்கத் தொடர்ச்சி,)

உடனே பெரும் ராக்ஷஸனாகவும் ஜன சமூக துரோகியாகவும் மாறிவிடுகிறார். இவ்விதம் ஒவ்வொன்றிலும் நீண்ட நாளாய் ஏமாற்றப்பட்டோம். இன்று அதை உணர்ந்து ஒரு வழியை தேட முயலுகிறோம். இதைத்தான் என்னென்னவோ என்று உங்களுக்கு கூறி ஏமாற்ற முயலுகிறார்கள்.

சகோதரர்களே!

இன்றைய மந்திரி கக்ஷியை தூற்றும் 'தேசிய வீரர்கள்' சொல்லும்காரணம் என்ன? 'இரட்டை ஆட்சியை ஒழிக்கவேண்டும்' என்பது. அப்படியானால் தேர்தல் முடிந்ததும் இரட்டை ஆட்சியை நிலை நிறுத்தியது மந்திரி கட்சியை அமைத்தது காங்கிரஸ் வீரர்கள்தானே! என்று கேட்டால் நாம் காங்கிரஸ் துவேஷியா? நீட்டின காகிதத்தில் கையெழுத்துபோட்ட கனம் ஆரோக்கியசாமி முதலியார் நல்லவராக இருந்ததற்கும், கையெழுத்து போடு என்று கேட்க பயப்படக்கூடிய நிலையில் உள்ள கனம் எஸ். முத்தையா முதலியார் பார்ப்பனர் கண்ணுக்கு தேசத்துரோகிபோல் தோன்றுவதற்கும் காரணம் விளங்கவில்லையா? இதை பார்த்தபின்புகூட நம்மவர்கள் கண்விழிக்கவில்லையானால் கெதிமோக்ஷம் இந்த நாட்டுக்கு எப்பொழுது கிட்டப்போகிறது.

## சைமன் கமிஷன்.

சைமன் கமிட்டியை நான் ஆதரிப்பதைப் பற்றி என் மீது பெரிய குற்றம் சுமத்தப்படுகின்றது. சென்ற தேர்தலில் உங்களிடம் ஓட்டுக்கேட்ட காங்கிரஸ் வாதிகள் (ராயல் கமிஷன்) சைமன் கமிஷனிடம் சாட்சி சொல்வதாய் ஒப்புக்கொண்டு அதற்காக வேண்டியே தங்களுக்கு ஓட்டு கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். இப்போது அக்கமிட்டியில் பார்ப்பனர்களையும், பார்ப்பனதாசர்களையும் சேர்க்காததால் அதை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூச்சல் போடுகிறார்களே ஒழிய வேறில்லை. உண்மையில் பகிஷ்கரிக்கும் யோக்கியர்கள் தங்கள் மெம்பர் ராஜீனமா கொடுத்துவிட்டு கமிஷனை பகிஷ்கரிப்பதாய்ச் சொல்லி ஓட்டு வாங்கி மெம்பராகி பிறகுதான் பகிஷ்கரிக்கவேண்டும். இதுதான் யோக்கியமாகும். நிற்க லைஸ்ராய் நிர்வாகசபையில் மெம்பராயிருந்த திருவாளர் ஸி. ஆர். தாஸ் பார்ப்பனரல்லாதாரைக் கண்டு பிடித்துவிட்டோம். அதாவது, எதாவது ஒரு பார்ப்பனரை ராயல் கமிஷன் கமிட்டியில் போட்டால் பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சி செய்வார்கள், ஆதலால் போடுவதாயிருந்தால் சென்னை மாகாணத்திய ஒருபார்ப்பனரல்லாதாரைப் போடும்படி சொன்னாராம். அவ்சிராய் சபையிலுள்ள மற்றொரு கனவான், பார்ப்பனரல்லாதாரைப் போட்டால் பார்ப்பனர்கள் கிளர்ச்சிசெய்வார்கள். ஆதலால் மகமதிய கனவானைப் போடும்படி சொன்னாராம். எனவே பார்லிமெண்டார் பயந்துகொண்டு யாரையும் போடாமல் வெள்ளைக்காரர்களாகவே பார்த்துப் போட்டுவிட்டார்கள் இதனால் எந்தவிதத்தில் இந்தியாவின் சுயமரியாதைக்கு ஆபத்து வந்து விட்டது. மேல்கண்ட மூவரில் யாரையாவது ஒருவரைப்போட்டிருந்தால் மற்ற இருவருக்கும் இதைவிட சுயமரியாதைக்கு அதிகமான பங்கம் வந்துவிட்டதாககூப்பாடு போட்டிருப்பார்கள். இந்த போலி பகிஷ்காரக் கூச்சலினால் இப்போது சைமனுக்கு வேண்டிய தகவல்களில் எது தடைப்பட்டு விட்டது. நேரு ரிபோர்ட் காங்கிரஸ் ரிபோர்ட் எல்லா கட்சிரிபோர்ட், திருவாளர் பெசண்டு திட்டம், விஜயராகவாச்சாரி திட்டம், ரங்கசாமி அய்யங்கார் திட்டம், சீனிவாசய்யங்கார் திட்டம், வர்ணாசிரம திட்டம், பார்ப்பனத்திட்டம், பார்ப்பனரல்லாதார் திட்டம், மகம்மதியர் திட்டம், கிருஸ்துவர்கள் திட்டம், ஆதிதிராவிடர்கள் திட்டம், ஜமீன்தார் திட்டம், வியாபாரிகள் திட்டம், நிலச்சுவான்தார்கள் திட்டம், நூற்றுக்கணக்கான உள்பிரிவு ஜாதிகள் திட்டம், சர்க்கார் உத்தியோகத்தில் உள்ள பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்கள் வெள்ளைக்காரர்கள் ஆகியவர்கள் திட்டம், இன்னமும் என்ன என்னமோ திட்டம், வண்டி வண்டியாக அவர்கள் முன் குவிந்து இருக்கின்றது. எனவே சைமன் பகிஷ்காரம் என்பது எந்த அர்த்தத்தில் சொல்லப்பட்டது, எந்த அர்த்ததில் செய்து எந்த அர்த்ததில் நிறைவேற்றப்பட்டது என்பதை நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள்.

## மதம்.

கனவான்களே! முதலாவது மதம் என்றால் என்ன? அது கால தேச வர்த்தமானத்திற்கும் அக்காலத்திய அறிவின் தன்மைக்கும் தக்கபடி மக்களின் வாழ்க்கைக்கு என்று ஏற்படுத்திக்கொள்ளும் சில கொள்கைகளேயாகும். அக்கொள்கைகள் எப்போதும் எல்லா இடத்துக்கும் ஒன்றுபோலவோ அல்லது மாற்றமுடியாததென்றோ சொல்வது சுத்த மடமையேயாகும்.

உதாரணமாக விளையாட்டுச் சங்கத்திற்கோ அல்லது ஒரு ஓய்வுச்சங்கத்திற்கோ அச்சங்கத்திலுள்ளவர்கள் தங்கள் சங்க காரியங்கள் கிரமமாய் நடைபெறுவதற்கு என்று சில கொள்கைகள் வகுத்துக்கொள்வதை நாம் பார்க்கிறோம். நாளாக நாளாக அதன் நிலைமைக்கும் தேவைக்கும் தக்கபடி அவற்றை மாற்றிக்கொண்டு வருவதையும் பார்க்கின்றோம்.

அதுபோலவே மக்கள் சமூக வாழ்க்கைக்கும் சில நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொள்வதும் நாளாக நாளாக அவைகளை தேவைக்குத் தக்கபடி காலத்திற்கு தக்கபடி மாற்றிக்கொள்வதும் அவசியமானதேயாகும். இந்நிபந்தனைகள் சில சமயங்களில் மக்கள் அறிவுக்குத் தக்கபடியும் சுயநலக்காரர்கள் தங்கள் சுயநலத்திற்கு ஏற்றவண்ணமாயும் செய்துவிடுவதும் உண்டு. உதாரணமாக தென் ஆப்ரிக்காவில் இந்தியர்களுக்கு வெள்ளைக்காரர்கள் நிபந்தனை ஏற்படுத்துவது போல கையில் வலுத்தவனோ அறிவில் வலுத்தவனோ ஏமாற்றத்தில் வலுத்தவனோ தன்தன் சௌகரியப்படி நிபந்தனைகள் அமைத்துக்கொள்ளுகிறான். இதையுணராமல் மதம் என்பது ஒரு சர்வவல்லமையுள்ளது என்று சொல்லப்பட்ட கடவுள் கட்டளை என்றும் அதை எப்போதும் சிறிது கூட மாற்றக்கூடாது என்றும் அதில் உள்ளவைகள் எல்லாம் கடவுள் வாக்கு என்றும் சொல்லுவதானால் அது எந்த மதமானாலும் சரி அவற்றை அடியோடு ஒழிக்கத்தான் வேண்டும். அதனிடத்தில் மக்களுக்குள்ள குருட்டு நம்பிக்கையையும் முரட்டுப் பிடிவாதத்தையும் மாற்றத்தான் வேண்டும்.

அராபியா பாலைவனத்திலுள்ள மக்களுக்கு அவர்கள் மதம் தினம் மூன்று வேளை குளிக்கும்படி கட்டளை இட முடியவே முடியாது. ஐரோப்பிய குளிர் தேசத்தில் இருக்கும் மக்களுக்கு அவர்கள் மதம் ஜலமலபாதைகளுக்குப் போனால் அடிக்கடி தண்ணீர் விட்டு சுத்திசெய்யச்சொல்லாது. அதுபோலவே வடதேசத்தின் மலைச்சாரல்களில் குளிரிலவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு அவர்கள் மதம் எப்போதும் நெருப்புக்கனல் இல்லாமல் இருக்கும்படி சொல்லி இருக்காது.

அதுபோலவே தென்னாட்டில் உஷ்ண தேசத்து மக்களுக்கு எப்போதும் நெருப்புக் கனல் இருக்கவேண்டுமென்று அவர்கள் மதம் சொல்லி இருக்கமுடியாது.

வெள்ளைக்காரர்கள் ஆதிக்கத்தினால் எப்படி அவர்களது கொள்கைகளையும் அவர்களுக்கு அனுகூலமானதையும் சிலவற்றை நம்மீது சுமத்தியிருக்கின்றார்களோ அதுபோலவே நமது நாட்டில் முன் காலத்தில் பூர்ண ஆதிக்கம் செலுத்த சந்தர்ப்பம் அடைந்தவர்கள் அவர்களது கொள்கைகளையும் அவர்களுக்கு அனுகூலமான கொள்கைகளையும் நம்மீது சுமத்திவிட்டார்கள். ஏகபோக ஆதிக்கத்தின் பலனாய் அவற்றிற்கு ஆதாரங்களும் எழுதிவைத்து அவற்றை எல்லாம் மதக்கொள்கைகள் என்றும் அவைகள் கடவுள் கட்டளை என்றும் கடவுள் வாக்கென்றும் சொன்னால் நாம் நிரந்தரமாய் ஒப்புக்கொண்டு பின்பற்ற முடியுமா? நமக்கு பகுத்தறிவு என்கின்ற தன்மை எதற்காக இருக்கின்றது? இப்பேர்ப்பட்ட விஷயத்திற்கு உபயோகப்படுத்திப் பார்க்காத பகுத்தறிவு வேறு என்னவேலை செய்ய உபயோகப்படும்? ஆதலால் கண்டிப்பாய் மதவிலங்கிலிருந்து விடுதலை அடையவேண்டும். பிறகுதான் நாட்டை விடுதலையடையச்செய்யலாம். நாடுவெறும் வெள்ளைக்கார ஆட்சியில் இருந்துமாத்திரம் விடுதலை அடைந்தால் போதும் என்பது அர்த்தமற்றவார்த்தை. நாடு வெள்ளைக்கார ஆட்சியில் இல்லாதபோது தான் நாம் மத அடிமைத்தன்மையில் மூழ்கினோம். நாடு மகம்மதியர் ஆட்சியில் இல்லாத காலத்தில் தான் மக்கள் மிருகப்பிராயத்தில் காட்டு மிராண்டிகளாகயிருந்தார்கள். நாடு சுயராஜ்யத்திலும் ராம, கிருஷ்ண அரிச்சந்திராதி கடவுள்கள் ஆட்சியிலும் இருக்கும்போதுதான் பார்ப்பனரல்லாதார்கள் சூத்திரர்களாகவும் வேசி மக்களாகவும் குரங்குகளாகவும் அரக்கர்களாகவும் படிக்கக்கூடாதவர்களாகவும் கடவுள் வணக்கத்திற்கும் தவத்திற்கும் லாயக்கில்லாதவர்களாகவும் நடத்தப்பட்டதுடன் வேற்றரசர்கள் கைக்கு காடும்ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இந்நாட்டில் வெள்ளைக்கார அரசாங்கமும் மகமதிய அரசாங்கமும இல்லாத காலத்தில் தான் சம உரிமை ஜீவகாருண்யம் ஆகியவைகளைக் கொள்கைகளாகக் கொண்ட பவுத்த மதம் அழிக்கப்பட்டது; சமணர்களை கழுவேற்றி சமணமதம் ஒழிக்கப்பட்டது. இப்பவும் வெள்ளைக்கார ஆட்சி இல்லாததும சுயஆட்சியும் இந்து அரசர்கள் ஆட்சியும் உள்ள மைசூர் திருவாங்கூர் கொச்சி முதலிய சுதேச அரசர் நாடுகளில் தான் மனிதர்களை மனிதர்கள் நாய் கழுதை பன்றி மலம் மூத்திரம் எச்சில் நாறிப் புழுத்த வஸ்துக்களுக்கும் கீழாக மதிக்கின்றனர். எனவே இந்த நிலையில் இந்த வெள்ளைக்கார ஆட்சி போனால் இன்னமம் ஒரு மஞ்சள்காரர் அல்லது சிகப்புக்காரர் ஆட்சிதான் ஏற்படுமே ஒழிய கருப்புக்கார (இந்திய மக்கள்) ஆட்சி உண்டாக வேஉண்டாகாது. ஏனெனில் நமது நாட்டில் எந்தெந்த குணங்களும் கொள்கைகளும் நம்முள் ஒற்றுமையைக் கெடுத்து அன்னியஆட்சியை வலியக்கூவி அழைத்ததோ அந்த கொள்கைகளும் குணங்களும் மாறினாலொழிய இனிஎந்தக்காலத்திலும் நமது நாட்டைவிட்டு அன்னிய ஆட்சியை விரட்டிவிட முடியாது.

## கடவுள்.

நிற்க, கடவுள் என்பதைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். கடவுள் இல்லை என்று சொன்னதாகவும் அதனால் நாஸ்திகப்பிரசாரம் செய்கின்றதாகவும் சொல்லப்படுகின்றது. அது உண்மையானாலும் பொய்யானாலும் இங்கு

இவ்வளவு பெரிய கூட்டம் கூட்டிக் கொடுக்க இந்தமாதிரியான விஷமப் பிரசாரங்கள் அனுகூலமாயிருந்ததால் ஒரு விஷயத்தில் நான் நாஸ்திகனானதற்கு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சுயமரியாதை இயக்கம் கடவுள் உண்டா இல்லையா என்கின்ற விஷயத்தில் சற்றும் கவலை எடுத்துக் கொள்வதேயில்லை. மற்றபடி நமது மக்கள் கடவுளுக்கு கற்பிக்கப்பட்டிருக்கும் குணங்களைப்பற்றியும், கடவுள்களுக்கு என்று செய்யப்படும் பூசை அபிஷேகம் உற்சவம் முதலிய செலவுகளைப்பற்றியும்தான் நான்மிகுதியும் ஆக்ஷேபிக்கின்றேன். கடவுளுக்கு இவ்வளவுபெரியகோவில் எதற்கு? உற்சவத்திற்கு லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவு எதற்கு? மேல்நாட்டார் நம்மைவிட காட்டுமிராண்டிகளாய் இருந்தவர்கள் இப்போது உலகத்தில் பெரும்பகுதியை ஆளச்சக்திகொண்டு விட்டதற்கு இம்மாதிரியான பெரிய கோவில்களும் உற்சவமும் செய்வதில் பணம் செலவழித்ததாலா? அல்லது இவற்றிற்கு பணம் செலவழிப்பதை நிறுத்திக் கொண்டு அவற்றை கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் செலவழித்ததாலா? என்பதை யோசித்துப்பாருங்கள். நமதுநாட்டில் உள்ள கற்கள் எல்லாம் சாமிகள், மரஞ்செடிகள் எல்லாம் சாமிகள், ஆறுமலை குளம் குட்டை இடி மின்னல் மழை நக்ஷத்திரம் வானம் சந்திரன் சூரியன் காற்று நெருப்பு தண்ணீர் பிளேக்கு பேதி அம்மை முதலிய காணப்படும்பொருள்கள் குணங்கள் எல்லாம் சாமிகளாய் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இது மக்களுக்கு அறிவு வளர்ச்சி இல்லாத காலத்தில், காரண காரியங்கள் அறியமுடியாத காலத்தில், சையன்ஸ் என்னும் விஞ்ஞான அறிவு இல்லாத காலத்தில், காட்டுமிராண்டிப் பருவத்தில் ஏற்பட்ட நிலைமையாகஇருக்கலாம்.

உதாரணமாக வேதகாலம் புராணகாலமென்று சொல்லப்பட்ட காலம் மனிதனுக்கு சற்றுகூட அறிவு வளர்ச்சியும் பகுத்தறிவு விசாரமும் இல்லாதகாலம் என்பதற்கு உதாரணம் வேண்டுமானால் எனக்குத் தோன்றுவதைசொல்லுகின்றேன். உலகம் என்பதைப்பற்றி சொல்லும்போது இந்தியாவுக்கு அப்புறம் ஒன்றையுமே வெகுவாய் கண்டதாக எவருமே எதிலும் குறிக்கவேயில்லை. வேதக்காரர்களுக்கு இமயமலையோடு உலகம்முடிந்து விட்டது. அதன் மீது செல்லமுடியாததால் அதுவே கைலாயமாகி விட்டது. இமயமலையின் மீது பனிக்கட்டிகள் உறைந்து கலந்து மலையையே அடியோடு மூடிக்கொண்டதாலும் சூரிய வெளிச்சத்திற்கு அது வெள்ளையாய் பளிங்கு போல் காணப்பட்டதாலும் அதை வெள்ளியங்கிரி என்றும் அங்கிருந்து நதி (கங்கை) வருவதால் சிவனின் தலையில் இருந்து வருவதாகவும் இம்மாதிரி சிறு குழந்தைகளுக்கு சோறு ஊட்ட பாட்டிகள் கதை சொல்லுவது போல் முட்டாள்கதையாய் உளறிக்கொட்டி விட்டார்கள். வெள்ளைக்காரர்கள்வந்த பிறகு தான் இமயமலை மீது ஏறிப் பார்த்து வருகின்றார்கள். இமயமலை இன்னது என்று உணரமுடியாத சென்று பார்க்க முடியாத, முடங்கல், மேல் ஏழுலோகம் கீழ் ஏழுலோகம் இருக்கின்றது என்பதும், கங்கையின் உற்பத்தியைக்கண்டு பிடிக்க முடியாத முடங்கள் பாற் கடல் தயிர்க் கடல் இருப்பதாகச் சொல்லுவதும் எவ்வளவு மடமை என்பதும் அதை நம்புவது அதைவிட எவ்வளவு முட்டாள் தனம் என்பதும் நான் உங்களுக்கு எடுத்துக்கூற வேண்டியதில்லை.

மற்றும் கல்லைக் கடவுளாக மதித்து அதற்காக கோடிக்கணக்காய்ப் பணம் செலவு செய்து வரும் நாட்டில் ஆண்களில் 100க்கு 10 பேர் கூட, பெண்களில் ஆயிரத்திற்கு 10 பேர் கூட படித்தவர்கள் இல்லையானால் உண்மையிலேயே கல்வி என்பதாக ஒரு கடவுள் இருந்து நமது பூஜையை ஏற்றுக்கொண்டு வருகின்றது என்று நம்புகின்றீர்களா? காளி, கருப்பன், வீரன் என்று வீரத்தன்மைக்குக்கூட கடவுள்களைச் சிருஷ்டித்து அதை வணங்கிவரும் மக்கள் துப்பாக்கி சத்தத்தைக்கேட்டவுடன் காய்ச்சல் வருவதானால் ஒரு வீரக்கடவுள் இருந்து பூஜைகளை ஏற்கின்றது என்று நம்புகின்றீர்களா?

வியாதிகளையெல்லாம் தெய்வமாகக் கும்பிட்டு அவற்றிற்கு கோவில் பூஜை உற்சவம் செய்து வந்தும் நமது நாட்டில் வியாதிகளும் சாவுகணக்குகளும் மற்ற நாட்டாரை எல்லாம்விட ரெட்டிப்பாய் இருந்து வருகின்றது. இந்த வியாதி தெய்வங்கள் என்பவைகள் உண்மையிலேயே நமது பூஜை உற்சவம் செலவு ஆகியவைகளை ஏற்றுக் கொண்டது உண்மையானால் இப்படி நடக்குமா என்று கேட்கின்றோம்.

மற்றும் இதுபோலவே தொட்டதற்கெல்லாம் கடவுளை யேற்படுத்தி அதற்குப் பூஜை உற்சவம் செய்வதில் நமது பக்தியும் பணமும் நேரமும் ஊக்கமும் பாழாகின்றதே அல்லாமல் காரியத்தில் ஏதாவது கடுகளவு பயனுண்டா என்று கேட்கின்றேன்.

விவசாய விஷயத்திலும் மாடு கடவுள், ஏர் கடவுள், உழவு கடவுள் ஆகிய கடவுள்களுக்கு பூஜை உற்சவங்கள் செய்து பணம் செலவழிக்கின்றோமே ஒழிய காரியத்தில் என்ன பலன் அடைகின்றோம். ஏரும் உழவும் மாடும் கடவுளாகக் கருதப்படாத ஆஸ்ட்ரேலியா தேசத்தில் ஒருஏக்கராவில் 3000 ரூ. முதல் 10000 ரூ. வெள்ளாண்மை எடுக்கின்றார்களாம். நாம் இன்னும் ஏர்பூட்ட அய்யரைக் கூப்பிட்டு நேரம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இன்னும் எவ்வளவோ வழிகளில் நாம் மூடர்களாகவே, காட்டுமிராண்டிகளாகவே இருக்கின்றோம். நாம் எந்த அரசாங்கத்தை ஒழிக்கவேண்டும் என்கின்றோமோ அந்த அரசாங்க தேசபக்தர்கள் தங்கள் தேசங்களில் ஆராய்ச்சித்துறையில் இறங்கி அநேக அற்புதங்களைக்கண்டு பிடித்து இரசவாதம்போல் செல்வத்தைப்பெருக்கி பிரஜைகள் எல்லோரும் அரசபோகத்தை அடைய ஏற்பாடு செய்து உலகத்தில் பெரும்பாகத்தை ஆட்சிபுரிகின்றார்கள். அன்றியும் அவர்களது தர்மம் நம்மைப்போன்று உற்சவத்திலும், பூசையிலும், வாகனத்திலும் கும்பாபிஷேகத்திலும் தடிராமர்களுக்கு அன்னசத்திரத்திலும் திதியிலும் அர பதாங்கலியாணத்திலும் செலவாக்கப்படாமல் அவர்கள் நாட்டு ஆராய்ச்சிக்கு செலவு செய்தது போக மீதியை நமது நாட்டில் நமது மக்களுக்கு நன்மைக்காக பிரசவ ஆஸ்பத்திரி குஷ்டரோக ஆஸ்பத்திரி க்ஷயரோக ஆஸ்பத்திரி கண்ணாஸ்பத்திரி பள்ளிக்கூடம் அனாதைஆஸ்ரமம் கைத்தொழிற்சாலை புஸ்தகசாலை முதலானவிஷயங்களுக்குசெலவுசெய்யப்படுகின்றது. எனவே எந்த நாட்டார் முன்னுக்கு வருவார்கள்என்பதை நீங்களே யோசியுங்கள்.

ஒரு மனிதனுடைய ஒழுக்கத்தை திருத்தப்பாடுசெய்வதற்குமாத்திரம், அதுவும் அறிவில்லாதவனுக்கு பயத்தையுண்டாக்கி அவனுடைய நடவடிக்கைகளை திருத்த என்று கடவுள் என்கின்ற உணர்ச்சி வேண்டுமானால் எனக்குஆக்ஷேபணையில்லை. மற்றபடி மக்களின் பணத்தையும் நேரத்தையும் அறிவையும் கொள்ளைகொண்டுவிட்டுயாதொரு பயனுமில்லாமல்கல்லைப்போல் நெட்டுக்குத்தாய் நின்றுகொண்டிருக்கமாத்திரம் கடவுள் உணர்ச்சியும் உருவமும் வேண்டுமானால் அதைநான் அரைவினாடியும் ஒப்புக்கொள்ள முடியாது. எனவே இதுதான் எனதுநாஸ்திகம் என்பது. இதைப்பற்றி நீங்கள் எப்படி நினைத்துக்கொண்டாலும் எனக்குக் கவலையில்லை. என் அபிப்பிராயத்தை உங்களுக்குத்தெரிவித்துவிட்டேன். ஏற்கவும் தள்ளவும் உங்களுக்கு பூரண சுதந்திரம் உண்டு. மற்றபடி பார்ப்பனர்களைப்போல் 'சிவன் பார்வதிக்குச் சொன்னான், நாரதன் விஸ்வாமித்திரருக்கு சொன்னார், பராசர் சொன்னார், நம்பாவிட்டால்நரகம், நம்பினால் மோக்ஷம்' என்றுசொல்லி உங்களை நாம் ஏய்க்கவில்லை. ராமசாமிஎன்னும்பெயர்கொண்ட ஒரு மனிதன், அதுவும் எழுத்துவாசனை இல்லாதவன், பள்ளிக்கூடத்தில் படிக்காதவன் சொல்லுகின்றான் என்பதாககருதி நான் சொன்னவற்றை உங்கள் சொந்த புத்தியைக்கொண்டு அலசிப்பார்த்து சரி என்று தெரிந்தால் நடவுங்கள். நேரமதிகமாய் விட்டதால் மற்றும்பல விஷயங்களைப்பற்றி பேசபோதியசாவகாசமில்லை. சமீபத்தில் இந்தவூரில் சுயமரியாதை மகாநாடு கூட்டுவதாக உங்கள் ஊர் பிரமுகர்கள் தெரிவித்தபடியால்அது சமயம்வந்து மற்ற விஷயங்களையும் செங்கல்பட்டுத்தீர்மானங்களைப்பற்றியும் விளக்க இருக்கின்றேன் என்று பேசிமுடித்தார்.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சோதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச சோக நிவாரணி.

## Instant Re'ief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம் தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும், நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி திடனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீக்ஷித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1 க்கு விலை ரூ. 1—4—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ, 2—8—0 அனுப்பவேண்டும்.

புரோப்ரைட்டர், பூ. மா. சொக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்

## கண்ணனும் சிவனும் கடவுளர்களா?

(பினங்கு திரு. M. S. நாதன் எழுதுகிறார்.)

அழகிய இப்பூவுலகில் எத்தனையோ சமயங்களிருக்கின்றன. ஏனைய சமயாசாரிகளெல்லாம் ஒழுக்கத்தைப்பற்றி கூறியிருக்கின்றார்களேயன்றிக் கடவுளைப்பற்றிஒன்றுங் கூறினதாகக் காணப்படவில்லை. அறிஞர்களும் கண்டுபிடித்தஉண்மை. ஆனால்நம்மிந்து சமயாசாரிகளோ! நம் கணக்கற்ற கடவுள்களைப்பற்றியும், அக்கடவுள்களின் யோக்யதைகளைப் பற்றியும், காவியங்களாகவும், கலைகளாகவும் ஸ்மிருதிகளாகவும் இதிகாசப் புராணங்களாகவும் புகழ்ந்து புகழ்ந்து திரட்டி உருட்டி எழுதிவைத்திருக்கிறார்கள்.

இவர்கள் எழுதிவைத்திருக்கும் கடவுள்களில், சிறப்பாகக் கண்ணனையும், சிவனையும் பற்றிக் கூறியிருப்பது கொஞ்சநஞ்சமல்ல. இவ்விரு கடவுள்களும் எப்படிப்பட்டவர்களென்றால், மனிதர்களைப்போல் அவயவங்களுடையவர்களாம். நிமிடத்திற்கு நிமிடம் மாறுவேடம் பூண்டு மக்களை ரட்சிப்பவர்களாம். இவர்களின் யோக்யதையோ அழகிய பெண்களைக் கண்டுவிட்டால் தங்களையறியாது காமவெறிபிடித்து அப்பெண்களின் கற்பைக்கெடுப்பதும், சிலசமயங்களில் அப்பெண்களாலோ அல்லது அவர்களின் நாயகன்மார்களாலோ ஏற்படும் துன்பங்களுக்கு ஆளாவதும், தப்பினபிறகு தாங்கள் பரிசுத்தவான்களென்றும், பெண்களின் கற்பைப் பரிசோதிக்கவே அங்ஙனம் செய்தோமென்றும் பாமர மக்களுக்கு போதித்து துஷ்பராஸ்புடனைபோல் கபட சன்யாசங் கொண்டு மக்களை ஏமாற்றுவதுமாகும்.

சகோதர சகோதரிகளே! வேறு எச்சமயத்திலாவது இம்மாதிரி கடவுள்களிருந்ததாகச் சொல்லுகிறார்களா? கதைகளிலெழுதி வைத்திருக்கிறார்களா? நம்மைப்போல் மூடபக்திகொண்டு அக்கடவுள்களைவணங்குகிறார்களா? வென்பதை அறிய உங்களுக்கே விட்டுவிடுகிறேன். உலகில் ஒருவரும் காணாத கடவுளெனப்படுவதற்கு மனிதனைப்போல் அவயவங்களாம், பெண்டாட்டிகள் மார்பிலும் தலையிலுமாம், பிள்ளைகுட்டிகளாம், உலக ரட்சகர்களாம், அவதார புருடர்களாம், நித்யப்ரும்மசாரிகளாம், கோபிகாஸ்திரீகளுடன் கூடுவதும், காளியுடன் கூத்தாடுவதும், அழகிய பெண்களிடம் சென்று 'நிர்வாணமாக வந்து அன்னம்படைத்தால் தான் உண்போம்' என்பதும் கடவுளர்களா? வெட்கம்! வெட்கம்! அந்நாளிலிருந்த நம் இந்துசமய அறிவற்ற மக்களும் அரசாங்கமும் துணை நின்றதாலன்றோ இவ்வயோக்கியக் காமவெறிபிடித்த கண்ணனுஞ் சிவனும் கடவுளானார்கள். அறிவுச்சுடர் விட்டெரியும் இச்சுயமரியாதைக் காலத்திலும் இம்மாதிரி கடவுளர்களுக்கு புதிது புதிதான கோயில்களைக் கட்டுவதும், குளங்களை வெட்டுவதும், பெண்களுக்கு பொட்டுக்கட்டி இக்கடவுளர்களுக்கு விடுவதும் எத்துணை வெட்ககரமான வேலையென்றுதானே 'குடி அரசு' கூறுகிறது.

சென்ற சீர்திருத்த மகாநாட்டில் ஸ்ரீமான் நாயக்கர் தாமொரு அழிவு வேலைக்காரரென்று சொன்னார். உண்மைதானே. இக்காம வெறிபிடித்த கண்ணன் கோயில்களையும் சிவன் கோயில்களையும் அவர்கள் பெண்டாட்டி பிள்ளைகள் கோயில்களையும் எதற்காக வைத்திருக்கவேண்டும்? அழித்தலாகாதா? ஸ்ரீமான் நாயக்கர் தாம் ஒரு அழிவு வேலைக்காரரென்று சொல்லும்போது ஆத்திரப்படும் பண்டிதர்கள் அக்கடவுளர்களுக்கு வாரி இறைக்கும் பணத்தை கஞ்சிக்கும், கல்விக்கும், துண்டித்துணிக்கும் கஷ்டப்படும் ஏழை மக்களுக்கு செலவு செய்து ஏன் ஆக்கவேலையை செய்யக்கூடாதென்றுதானே 'குடி அரசு' சொல்லுகிறது.

காம வெறிபிடித்த கடவுளர்களுக்கு காசையும் கொடுத்து வேசி மகனென்றும் பட்டம் பெற விரும்பும் பண்டிதர்கள் ஸ்ரீ நாயக்கரை தூற்றி பெருமை தேடுவதைவிட காக்கைப்பிடுங்கிக்கொண்டு சாகட்டுமே. ஸ்ரீ கைவல்ய சாமியார் கூறுவதுபோல் படிப்பைத்தவிர பகுத்தறிவில்லாத பண்டிதர்கள் எடுத்ததற்கெல்லாம் சமயம் போச்சு, சாமி போச்சு என்று மாயக்கண்ணீர் விட்டு மக்களை ஏமாற்ற 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் திருவாக்கையும் ஓதி 'சத்தியம் குன்றிவிட்டது தவம் கிடக்கவேண்டும், அறப்போர் தொடுக்கவேண்டும், ஆறுதான் கடவுள், மலைதான் கடவுள், மரந்தான் கடவுள், பெண்தான் கடவுள்' என்று ஊளையிட்டதுபோல இக்கட்டுரையை கண்டவுடன் ஷை பல்லவியை பாடிக்கொண்டு, கண்ணன் தான்கடவுள், சிவன் தான் கடவுள், அவர்கள் பெண்டாட்டி பிள்ளைகள் தான் கடவுளென்று சொல்லி அழுவருவார்கள். ஆனாலும் நேயர்களே! நமது ஸ்ரீ கைவல்யம் கூறினதுபோல் 'அது இனிப் பலிக்காது அண்ணா' என்ற மாதிரி அது இனி பலிக்கப்போகிறதா? நாம் வீரத் தமிழர்களாதல் வேண்டுமானால், உண்மையான சுயமரியாதைத் தொண்டர்களாதல் வேண்டுமானால், நம்மைப் பிற்போக்கான நிலைமைக்குக் கொண்டுவந்த சமயம், சாமி, கோயில் சமயாச்சாரிகள், புரோகிதர் முதலான பல முட்டுக்கட்டைகளையும் ஆப்கன் அமீரைப்போலவும், டர்க்கி முஸ்தபா கமால் பாட்சாவைப் போலவும் தூள்தூளாக்க வேண்டும். இல்லையேல் நமக்கு விமோசனமில்லையென்றே சொல்வேன். என்நாள் நம் முட்டுக்கட்டைகளெல்லாம் முறியடிக்கப் படுகின்றதோ அந்நாளே நம் முன்னேற்ற நாளாகும்.

6ம் பக்கத் தொடர்ச்சி.

நோக்கங்களை மறத்தல்கூடாது. சங்கஊழியங்களைத் தளராதும் ஓயாதும் நடத்துதல் வேண்டும். பொதுநல ஊழியங்களை அழிப்பதற்காகத் தோன்றும் உட்பகை, வெளிப்பகையை விழிப்போடு இருந்து களைதல் வேண்டும். இவ்வகையில் முன்னின்று உழைத்தால் உங்கள் நோக்கங்கள் எளிதில் நிறைவேறுமென்பதில் ஐயமில்லை.

தாங்கள் ஆராய்ந்து கண்ட உண்மையைப்பற்றி காய்தல், உவத்தல் இன்றி உறுதியுடன் மனம், மொழி, மெய்களால்தொண்டு செய்தல் மிகவும் அவசியமாகும். இத்தகைய உண்மை வழியில் நடக்கும் தொண்டர்கள் கிடைக்காத பெருங்குறை ஒன்றால் நமது நாட்டில் தலைப்படும் இயக்கங்கள் பல சோர்வடைகின்றன. போலித் தொண்டர்களும், வேஷதாரிகளும் ஒவ்வொரு வகையிலும் நமக்கு இழைத்துவரும் தீமைகள் பல.

ஆதலால் நமது மாபெருந்தலைவர் பனகால் அரசர் பெயரால் நீங்கள் ஏற்படுத்தும் வாசகசாலை உண்மைத் தொண்டர்களை உண்டாக்கி உலகிற்கு நலம் புரியுமாறு இறைவனை வேண்டுகின்றேன்.

## மதிப்புரை.

### "தமிழன்"

'தமிழன்' பத்திரிகை என்பது கோலார் கோல்ட்பீல்ட்ஸ் ஆண்டர்சன் பேட்டையிலிருந்து வெளி வந்து கொண்டிருக்கும் ஒரு வாரப்பத்திரிகை. இது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையையே அடிப்படையாகக் கொண்டு அறிவு, அன்பு, இரக்கம், ஈகை, உபகாரம், ஒழுக்கம் சத்தியம் முதலாகியவைகளைக் கொண்ட புத்த பகவானின் கொள்கைகளை விளக்கிக் காட்டி பார்ப்பனர்களின் மதப்புரட்டுகளை அஞ்சாமல் அதற்கு ஏற்ற கட்டுரைகள் ஷம்பாஷணைகள் மொழி பெயர்ப்புகள் முதலியவைகள் வாயிலாக வெளிப்படுத்திவருகிறது. தற்போது பார்ப்பனீயத்தை தைரியாய் கண்டித்து எழுதுவதில் இதற்கு மேம்பட்ட பத்திரிகை இல்லை என்றே சொல்லலாம். இது 'குடி அரசு' சைசில் 16, 20, பக்கங்கள் கொண்டு வாராவாரம் வெளியாகி வருகின்றது. சுயமரியாதை இயக்கத்திற்கு ஓர் உற்ற துணையாய் திகழ்கின்றது. இதை ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டும். ஆசிரியர் திரு ஜி. அப்பாதுரையார், வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ 3. வெளி நாட்டிற்கு ரூ 4

விலாசம்:—

"தமிழன்" ஆண்டர்சன் பேட்டை,
கோலார் தங்கவயல்,

### நவீன சுகாதார பாடம்.

திருவாளர் கே. எ. ராஜா அவர்களால் இயற்றப்பட்ட இப்புத்தகம் தேகஅமைப்பு, ஆகாரம், தண்ணீர், காற்று, உடை, வீடு, முதலிய நமக்குவேண்டிய முக்கிய சாதனங்களைப்பற்றியும், வைசூரி, ப்ளேக், பேதி, காய்ச்சல், க்ஷயரோகம் முதலிய சில கொடிய வியாதிகளைப்பற்றியும், இவ்வியாதிகள் வராமல் தடுக்கும் சில முக்யமுறைகளைப்பற்றியும், வந்தபின் செய்யவேண்டிய சில பிரதம சிகிச்சைகளைப்பற்றியும 29 பாடங்கள் கொண்டதாய் இருக்கிறது. இப்புத்தகம் இரண்டாவது மூன்றாவது வகுப்புச்சிறுவர் சிறுமிகளும் வாசித்தறியத்தக்கபடி பெரிய எழுத்தில் எளிய தமிழில் சிறிய வாக்கியங்களில் பல சித்திரப் படங்களுடன் இயற்றப்பட்டிருக்கின்றது. 56 பக்கம் கொண்ட இப்புத்தகத்தின் விலை அணா 3 தான். புத்தகம் வேண்டுவோர் "பி. மா. சிதம்பர முதலியார், புக் செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ், மதுரை" என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

(5ம்பக்கத் தொடர்ச்சி.)

வன் நரகத்தில் போய் விழுந்து விடுவான். என்று பிராமணன் சொல்லுகிறான் இந்தசடங்குகள் நடக்கும் பொழுதெல்லாம், பிராமணனுடைய பாதங்களை தண்ணீரால் கழுவி அந்த அழுக்குத்தண்ணீரை ஜனங்கள் குடிக்க வேண்டுமாம். ஏழைகளை பல மூட வழக்கங்களில் நம்பச்செய்து, அவர்களை ஏமாற்றிப்பணம்பறித்து சோம்பேறியாக பிராமணன் வாழ்ந்து வருகிறான். சர்க்கார் உத்தியோகமோ, அல்லது வக்கீல் உத்தியோகமோ தவிர வேறு எந்த உத்தியோகமும் பிராமணன் பார்ப்பதில்லை. சென்னை மாகாணத்தில் 15 லட்சம் பிராமணர்களிருக்கிறார்கள். இவர்களுக்கு அடிமையாக, இவர்களுக்கு உழைத்துப் போடுவதற்குசுமார் நான்கு கோடியே பத்து லட்சம் பிராமணரல்லாதார் இருக்கின்றனர். ஆகையால் நாங்கள் விடுதலை பெற்று, சுதந்தரமடைந்து, பிறர் உதவியின்றி வாழும் ஆற்றல் அடையும் வரை, நாட்டில் சமாதானத்தையும, பாதுகாப்பையுமளிக்க நம் தேசத்தை அன்னிய தேசத்தவர் ஆளுவதே பொருத்தமானது. எங்களை ஏமாற்றி, எங்களுடைய பணத்தைப் பிய்த்துப் பிடுங்கித் தின்று கொண்டே, எங்களைத்தீண்டாதவர்களென்றும், நாங்கள் தொட்டால் அசுத்தமாகிவிடு மென்றும் கூறும் 15 லட்சம்பிராமணர்களுக்கு அடிமையாக நாங்கள் வாழ்வதைவிட எங்களைப் பாதுகாத்து வரும் அன்னியர் ஆளுகையே எவ்வளவோ மேலானது"

மேற்கண்ட வர்ணனை இந்து சமூகத்தின் கீழ் நிலையிலுள்ள கனவானால் மிஸ் மேயோவுக்குக் கூறப்பட்டவை. இவைகளை மேலநாட்டார் படித்துப் பார்க்கின் பிராமணரின் எண்ணிக்கையற்ற வஞ்சகங்களில் சிறிதேனும் அறிந்துகொள்வார்கள். ஆதலால் பிரசங்கமேடைப் பார்ப்பனருக்கு பாதகம் ஏற்படும். ஆனதுபற்றியே 'இந்தியமாதா' வெனும் புத்தகத்தின் மீது ஆத்திரத்தோடு கிளம்பினார்கள்.

மேற்கூறியவற்றால் பார்ப்பனச்சாயம் முற்றிலும வெளியாகவில்லை. இன்னும் சொல்லவேண்டியவை எத்தனையோ உள. அவற்றைப்பேசப்புகின் இன்னும் நூறாண்டுகளுக்கு தொடர்ச்சியாகக் 'குடி அரசில்' எழுதினும் தீராது. சுருங்கக்கூறமிடத்து பார்ப்பனன் நம்முடைய பெண்டாட்டி பிள்ளைகள் தவிர மற்றெல்லாவற்றின்மீதும் கைவைத்துவிட்டான். இல்லை இல்லை. சிலவிடங்களில் நம்முடைய பெண்ஜாதி பிள்ளைகளையும் சொந்தமாக்கிக் கொண்டான். இதைத் தெரியாதவர்கள் மலையாளத்துக்கு சென்று தெரிந்து கொள்ளட்டும். அவற்றைப்பற்றி இங்கு விரித்தெழுத இடமில்லை. நம் பூசாரிப்பார்ப்பானுக்கு தங்கள் பெண்டு பிள்ளைகளைக்கூட்டிக் கொடுத்து அதனால் மேன்மையுண்டென எண்ணிக்கொண்டிருக்கும் பரிதாபகரமான இந்து சாதியார் மலையாளப் பிரதேசத்தில் இன்றையதினமும் வாழ்ந்து வருகின்றனர். சிலவாண்டுகளுக்கு முன் கொச்சிக்கடுத்த எர்ணாக்குளத்தில் ஒரு கனவானைச் சந்தித்தேன். அவரைப்பற்றி அவரையே விசாரித்தபோது அவர் பெரிய தனவந்தர் என்று தெரிய வந்தது. அவருடைய சுற்றத்தார் பலரும் உயர்ந்த பதவிகளில் இருக்கின்றனர். கல்வி கேள்விகளிலே திறமை வாய்ந்தவர். பெரிய மனிதருக்கு வேண்டிய யோக்யதைகள் பூராவும் அவருக்கு இருந்தன. எனிலும் இவற்றையெல்லாம் கூறியதால் மட்டும் தன்னுடைய உயர்வான நிலைமையைச் சொல்லி விட்டதாக அவர் மனதுக்குச் சமாதானமில்லை, ஆதலால் எல்லாம் சொல்லியான பிறகு அப்பக்கத்தில் மிகவும் செல்வவந்தரான ஒரு நம்பூதிரிப் பார்ப்பனனுடைய பெயரைச் சொல்லி அவரைத் தெரியுமா என்று கேட்டார். நான் கேள்விப்பட்டிருக்கிறேன் என்றேன். ஹா! ஹா!! இப்பக்கங்களில் அவரைத் தெரியாதவர் இருக்கமாட்டார்கள், அத்திருமேனி குடும்பத்துக்கும் எங்கள் வீட்டுக்கும் பரம்பரையாய் 'சம்பந்தம் உண்டு' எனச் சொல்லி மகிழ்ந்தார். தன்னுடைய செல்வத்தாலும் படிப்பாலும் மச்சு மாளிகை காலாட் கையாட்களாலும் உயர்ந்த உத்தியோகத்தாலும் தனது குடும்பத்திற்கு உயர்வு மேம்படவில்லை. ஆனால் ஒரு பார்ப்பனன் தனது பெண்டுகளுடன் கூடிச் சுகிப்பதால்தான் அப்பெருமை பூர்த்தியாகிறதென்ற எண்ணமும் வழக்கமும் கொண்ட வாழ்க்கையுள்ள ஹிந்து மதத்தை என் செய்வது?

இந்நாட்டில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, உயர்ந்த கல்வியறிவு பெற்று, உயர்ந்த நிலைமையிலிருப்பவர் முதல் சாமான்ய ஏழைகள் வரையுள்ள பல குடும்பத்தின் பெண்களைப்பார்ப்பானுக்குதாசிகளாக இருக்க ஹிந்து மதம் செய்து விட்டது, நாற்பது லட்சம் ஜனத்தொகை கொண்ட தேசத்தைக் கட்டியாளும் மகாராணியாரையும் பார்ப்பானேதான் சம்மந்தமாகக் கொள்ள வேண்டும் என்று ஹிந்து மதம் இன்னும் இடங் கொடுத்துக் கொண்டிருக்கிறது, பெரிய பூபாகத்தைக் கட்டியாண்டிடினும் மேல்நாடு பல சென்று கல்வி கற்றிடினும் பாமரரின் பணத்தை தன்னடைக்குத் தாரைவிட்டு பார்ப்பனருக்கு வழங்கி ராஜரிஷிப்பட்டம் பெறும் ஆள்வார் மகாராஜாக்களையும் ஹிந்து மதம் வைத்துக்கொண்டிருக்கிறது, என்னே! இம்மதப்பெருமை! என்னே இம்மதத்தால் பார்ப்பனர்க்கிருக்கும் ஏகபோகவுரிமை!! என்னே! இருபது கோடி மக்களை இருபதாம் நூற்றாண்டிலும் இவர்கள் ஏமாற்றிவரும் திறமை!!!

## "குடி அரசு"

"குடி அரசு" பத்திரிகைக்கு இதுவரை மேல் காகிதம் சற்று கெட்டியானதாகவும் வர்ணமுள்ளதாகவும் போட்டு அச்சடித்து அனுப்பிக்கொண்டு வந்தோம். இப்போது அது தீர்ந்து போய் விட்டது. மேல் கொண்டு சீமைக்கு ஆர்டர் கொடுத்து 2 மாதம் ஆகியும் இனியும் வரவில்லை. சீக்கிரத்தில் எதிர் பார்க்கின்றோம். வந்தவுடன் மேல் காகிதம் கெட்டியானதாக போடப்படும்.

## மூவார் இந்திய சன்மார்க்க சங்கம்.

இச்சங்கம் 1928ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 29-தேதி ஆரம்பம் செய்யப்பட்டது. இது 1928-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 26 தேதி சொகூர் சர்க்காரால் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இச்சங்கத்தின் நோக்கங்கள்.

(1) ஏழை இந்தியர்கட்கு பிரசங்க மூலமாகவும் மற்றும் கூடுமான வழியிலும் சன்மார்க்கங்களை போதித்தல்.

(2) ஏழை இந்தியரின் குழந்தைகளுக்கு தங்கள் தாய்பாஷையாகிய தமிழில்கல்வி கற்பிக்க ஒரு கல்விச்சாலை அமைத்தல்.

(3) திக்கற்ற இந்தியர்களை ஊர்ப் பிரயாணம் அனுப்புதல்.

(4) அனாதையாய் மடியும் இந்தியர்களின் பிரேத தகனக்கிரிகைகள் செய்தல்.

இச்சங்கத்தின் இரண்டாவது நோக்கமாகிய பள்ளிக்கூட ஸ்தாபன விஷயமாய் நிதி சேர்ப்பதை உத்தேசித்து கீழ் கண்ட விபரப்படி கையொப்பம் வாங்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| (1) | அ. கோ. ராஜப்ப தேவர் | $ 501—00 |
| (2) | கை. கேசவன் சிராங்கு | 201—00 |
| (3) | தி. சந்திரகாஸ் நாயனார் | 25—00 |
| (4) | கா. வெ. நாகலிங்கசாமி | 25—00 |
| (5) | தி. சு. அருணாசலம் | 25—00 |
| (6) | நா. குமாரசாமி ஆச்சாரி | 25—00 |
| (7) | செ. ரா. நா. மாரிமுத்து | 25—00 |

இன்னும் இம்மூவாரில் வசிக்கும் பிரபுக்களிடத்திலும் கையொப்பம் வாங்கி பண வசூல் செய்து கல்விச்சாலைக்கு சொந்த கட்டடம் கட்டுவதாக உத்தேசித்து இருக்கின்றது. தற்சமயம் தற்காலிகமாக ஒரு இடத்தில் ஆத்தாப்பு பள்ளிக்கூடம் கட்டி அதில் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று ஏற்பாடாகிக்கொண்டிருக்கின்றது

A. K. ராஜப்பதேவர் தலைவர். T. S. அருணாசலம் காரியதரிசி.

## கிறிஸ்தவர்களின் கண்விழிப்பு

மூட நம்பிக்கைகளை ஒழிக்க குருவின் உத்திரவு.

கிறிஸ்தவர்களில்கூட பழைய வைதீகக் கூட்டத்தாரான ரோமன் கத்தோலிக்கர்கள் என்கின்ற ஒரு சாராருக்குள் 1, 2, 3 என்பது போன்ற எண்ணிக்கைகளில் 13 என்னும் எண்ணிக்கையை அதிர்ஷ்டமில்லாத கெட்ட எண்ணிக்கை என்றும், கிழமைகளில் செவ்வாய் வெள்ளி ஆகிய கிழமைகள் அதிர்ஷ்டமில்லாத கெட்ட நாட்களென்றும இதுவரை கருதிவந்ததானது மூட நம்பிக்கை என்றும் இனி அம்மாதிரி யாரும் கருதக்கூடாது என்றும் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவமத குருவாகிய போப் என்பவர் தமது சிஷ்யர்களுக்குஉத்திரவுபோட்டிருக்கிறார்.

தாமும் இன்புறற்று பிறரையும் இன்புறச்செய்பவரே அறிவாளி.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யபடி செய்யாமல் இருக்கிருன் என்பதும் பாரத்து வாசனையடைந்தபோது கூட மாவுரியுடுத்தவில்லை என்பதும் புலனுகின்றன.

பாரத்துவாசன் பரதனுக்கும் அவனுடைய சேனைக்கும் விருந்து செய்கிருன். அதில் பிரமன் குபேரன் இந்திரன் முதலியவர்களால் அனுப்பப் பெற்ற அறுபதினுயிரம் தாசிப்பெண்கள் வந்ததாகவும் அப்பெண்கள் சேனுவீரர் ஒவ்வொருவருக்கும் எழெட்டுப்பேராகக் கூடிக்கொண்டு முழுக்காட்டி, அந்தரங்கமாகக் கூடி சுராமுதலிய சாருயங்களை ஊட்டினுர்களென்றும் தெரியவருகிறது. பல செடிகள் பெண்ணுருவடைந்து அவர்களோடும் கூடினவாம். ஆரியர் விருந்து மிக அழகிதே. உணவும் சாருயமும் கட்குடிகளும் பெண்கள் சேர்க்கையும்தான் அவர்கள் நடத்தும் விருந்தின் பெருமைபோலும். அதிலும் அரசர்கள் நடத்தும்விருந்தில் வேண்டுமானுல் தாசிப்பெண்களை நடனமும் சேர்க்கையும் குடியும் இருந்தாலும் முனிவன் நடத்தும் விருந்திலுமா இந்தத்தப்பான இழி செயல்கள்வேண்டும்? பாரத்துவாசன் தனது தவவலிமையை நல்ல வழியிலேயே பயன்படுத்துகின்ருன்! ஒரு முனிவன் நடத்தும் விருந்திலேயே இவ்வளவு ஆபாச அட்டூழியங்களும் நடைபெற்றனவென்ருல் அரசர்கள் நடத்தும் விருந்தானும் ஆரியப்பொது மக்கள் நடத்தும் விருந்துகளும் எவ்வளவு கேவலமாக இருந்திருக்கவேண்டும். பரதனுடைய சேனு வீரர்கள் குடித்து மயங்கிப் பெண்களோடு ஆடிக்கீழ் வீழ்ந்து தமது ஊர்திகள் போன இடம்கூடத்தெரியாமல் கிடந்தார்களாம். பாரத்துவாசன் இத்தகைய இழிவான, அறிஞர்வெறுக்கத்தக்க, விருந்தை நடத்தி மகிழ்ந்து பெருமைப்பாராட்டினனும், பரதன் முதலியோரும் அதைப் புகழ்ந்தனராம். ஆரியர் தம் விருந்து முறை மிக அழகிதே! நாம் முன் கட்டுரையில் எடுத்துக்காட்டிய மனுநூலால் கண்ட விருந்து முறைக்கு இம்முனிவன் விருந்து ஓர் பொருத்தமான எடுத்துக்காட்டாகும். பாரத்துவாசன் நடத்திய விருந்தில் ஆட்டு மாமிசங்களும் பன்றி மாமிசங்களும் நிரம்பியிருந்தனவாம், விசித்திரமாகப் பக்குவஞ்செய்யப்பட்ட மான் மயில் கோழி முதலிய பிராணிகளின் மாமிசங்கள் குடாக பானைகளில் மலைகளைப்போல வைக்கப்பட்டிருந்தனவாம். இவைகளையெல்லாம் அத்தாசிப் பெண்கள் இன் சொற்கூறி ஊட்ட அவர்கள் உண்டு மகிழ்ந்தனராம். ஐயோ அநியாயம்! காட்டில் வாழ்ந்த ஆடுகள் பன்றிகள் மான்கள் கோழிகள் மயில்கள் இன்னும் மற்றைய பிராணிகள் இவைகளையெல்லாம் கொன்று அவைகளின் உடல்களாகிய பிணங்கள் எரிப்பதற்குத் தகுந்த சுடுகாட்டாக பரதன் அவன் சேனு வீரர்கள் இவர்களுடைய வயிறுகள் ஆயினவே! மாமிசங்கள் வெந்து மலை மலையாகக்குவிக்கப்பெற்றிருந்தனவாம். எண்ணிறந்த உயிர்களுக்கு எமனுயினனே 'இச்சண்டாளன் பாரத்துவாசன்! இவனும் ஓர் முனிவனும், இவன் செய்வதும் தவமாம்!

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்குரு.' என்ருர் பொய்யில் புலவரும். தவத்தின் தன்மை யாது? உயிர்களுக்கு வரும் துன்பங்களுக்கு இரங்கி அத்துன்பங்களைப் போக்குதலும் உயிர்களுக்கு ஒரு விதமான துன்பமும் செய்யாமலிருத்தலுமே தவத்தின் தன்மையாம். இதுவே தமிழ் மக்கள் கொண்ட தவமாம். ஆரிய மக்களோ மலை மலையாக உயிர்ப் பிராணிகளைக் கொன்று குவித்துச்சுட்டுத் தின்று பலவகைப்பட்ட சாருயங்களையும் குடித்துத் தாசிப் பெண்களுடன் ஆடுதலும் பிறரை ஆட்டுவித்தலுமே தவமெனக் கொண்டனர் போலும். இது உண்மையென்பதற்குப் பாரத்துவாசன் செயலே தகுந்த எடுத்துக் காட்டாகிறது. மேலும் இவர்கள் செய்யும் தவமாகிய யாகமும் பல உயிர்ப்பிராணிகளுக்கு இவர்களை எமதர்மனுக்கி இவர்களுடைய வயிறுகளை அவைகளுடைய பிணம் இடும் காடாகவுமாக்குவதே என்பது உலகமறிந்ததே.


# பல மருந்துகள் சாப்பிட்டும் பயனில்லையா?

பழநி சி. எம். சாமி

# குருதாம்பிரபஸ்பம் சாப்பிடுங்கள்.

தீராதென கைவிடப்பட்ட சகல வியாதிகளையும் தீர்க்கும் வல்லமையுடையது சி. எம். சாமி ஒளஷதங்கள் தான் என்பதை மறவாதீர்கள்! உங்கள் கவலை ஒழியவேண்டுமானுல் ஒருமுறை எங்கள் மருந்துகளை உபயோகியுங்கள்.



ஏராளமான நற்சாட்சிகளும் தங்க மெடல்களும் பெற்று ஏழுதலைமுறையாக அனுபவசித்தியடைந்தது, ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கி புகழ் பெற்று வருவது எங்கள் தாம்பர பஸ்பம் ஒன்றே.

இது திமிர், குஷ்டம், மதமதப்பு, ரணம், பத்து. தடிப்பு, குழிப்புண், ஆனைக்கால், பவுத்திரம், பெருவயுறு, மகோதரம், கண்டமாலை, கன்னப்பத்து, காசம், கிரந்தி, ஈளை, இருமல், இளைப்பு, குன்மம், குறைநோய், முதலிய கொடிய வியாதிகளையும், தீராதென கைவிடப்பட்ட இதரநோய்களையும் அவசியம் குணமாக்கும். 50 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ 25. ஏழைகளுக்குப்பாதி விலை, வி. பி. சார்ஜ வேறு.

பினுங்கு முதலிய அன்னிய தேச வாசிகள் ரூ 5 அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

நற்சாட்சிகள்.

எனக்கு வயது 35, இரண்டு வருஷமாய் குஷ்ட வியாதி, வலதுகால் பெருவிரலில் குழிப்புண், குண்டி பின்புறத்தில் கருமேகம், முதுகில் வெள்ளைப்புண்கள், வலது கைகளிலும் இடது கைகளிலும் பத்துக்கள், தேகத்தில் மதமதப்பு, சுரணையில்லாதிருத்தல் இவைகளினுல் மிகவும் கஷ்டப்பட்டு மதராஸ் ராயபுரம் ஆஸ்பத்திரியில் 17 ஊசி வரை ஏற்றியும் இன்னும் அநேக மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாமல் தங்கள் மருந்துகளின் குணங்களையும் பிரக்யாதியையும் கேள்விப்பட்டு நேரில் வந்து 50 வேளை குருதாம்பரபஸ்பமும் அதற்கு அனுபானமும் பெற்று சாப்பிட்டதில் குணமாயிருக்கிறது.

2 என் தாயாருக்கு இருந்த குலை, குஷ்டம், மதமதப்பு, சுரணையில்லாதிருத்தல், முழங்கால் பாதம் கணுக்கால் இவைகளில் வீக்கமும், உபத்திரவமுமிருந்து அதற்கு தங்கள் தாம்பரபஸ்பம் சாப்பிட்டதில் சௌக்கியமாய்விட்டது, இப்போது எல்லா வேலைகளும் செய்துகொண்டு சௌக்கியமாய் இருக்கிருள், ராமமூர்த்தி திண்டுக்கல் 10—10—28,

இன்னும் ஏராளமான நற்சாட்சிகளைக்கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர் **சி. மலையப்பசாமி,** நித்தியானந்த வைத்தியசாலை, பழனி (தென் இந்தியா)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லி இவர்களை அழிக்க ராஜாங்கத்தாருக்கு எச்சரிக்கையும் செய்கிறார். இதற்கெல்லாம் காரணம் பலஆசையைநினைத்து அற்பத்தனமான குதினால் நேர்வழியைவிட்டு விலகும் முதுகெலும்பில்லா பண்டிதத்திறமையே. கனம் முதலியார் திருமங்கலத்தில் சுயமரியாதைச் சங்கத்தைப்பற்றி பேசினதின் ஒரு பாகமாவது:—"சீதாதேவியைத் தூற்றியும் ஞானசம்பந்தரை அக்கொடியோன் என்றும் இவர்கள் பேசுவதைப்பார்த்துக் கொண்டு லார்டுகோஷன் என்னசெய்கிறார்? மத விஷயங்களில் தலையிடுவதில்லை என்ற அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டுள்ள அரசாங்கம் என்னசெய்கிறது? லார்டுகோஷனுக்கு எச்சரிக்கை செய்கிறேன், என் முன்னோர்களையும் மதக்கிரந்தங்களையும் என குருமார்களையும் மதக்கிரந்தங்களையும் இழிவாயில் பேசுவதை இனி என்னால் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது" என்று சொன்னதாக 'சுதேசமித்திரன்' சொல்லுகிறது.

தங்கலக் குருட்டுத்தனத்தின் மோகங்களோடு பிரசங்கமேடையிலேறி பேசிவருகையில் பொறுமையால் ஏற்படும் கோபத்தையும் சேர்த்து பெருமையடையப் புறப்பட்டால்தன் அறிவையும் உள்ளத்தையும் ஒப்பந்தப்படி விற்றுவிட்ட இவருக்கு இதைவிட பேசவேண்டிய பேச்சென்ன விருக்கிறது? சர்வ ஜீவகாருண்யசபையின் மகாநாட்டிற்கும் சுயமரியாதை சங்கத்தைச் அழிக்க கோஷன் பிரபுவைக் கூப்பிடுவதற்கும் பிரசங்கியாருக்குஜீவகாருண்ணிய சபையின் தத்துவம் இடம் கொடுக்காதே. சுயமரியாதைச்சங்கத்தார் சீதையை குற்றம்சொல்லுவதாக வைஷ்ணவரிடமும் திரு ஞானசம்பந்தரைக் குற்றம்சொல்லுவதாக சைவர்களிடமும் சொல்லி இரு மதவாதிகளையும் சுயமரியாதைச்சங்கத்திற்கு விரோதமாகச்செய்து வருகிற எலக்ஷனில் பிராமணரல்லாத கட்சிக்காரரைத் தோற்கடித்து அய்யங்கார்களிடம் அதிகமதிப்பும் அய்யரிடம் பெருமையும் அடைய நினைத்தே சீதையையும் திருஞான சம்மந்தரையும் குற்றம் சொல்லுகிறார்கள் என்னும் வேஷம்போட்டு "நமது முன்னோர்களையும் குருமார்களையும் மதக்கிரந்தங்களையும் குற்றம்சொல்லுவதை இனிப் பொறுக்கமாட்டேன்" என்று பெரியவர்கள் பேரில் வைத்திருக்கும் விஸ்வாசத்தாலும் மதக்கிரந்தங்களிலுள்ள நம்பிக்கையாலும் கடவுள் பேரிலுள்ள பக்தியிலும் துள்ளிக்குதித்து சமுத்திரத்தில் விழுந்து விடுவதாகச்சொல்லுகிறாரே. இவர் மதக்கிரந்தங்களையெல்லாம் படித்திருக்கிறாரா? விசிஷ்டாத்துவைதம், துவைதம், அத்வைதம், இந்த மூனறும் ஒன்றுக்கொன்று மயிர் பிடித்துக்கொண்டும், சைவம் வைணவத்தையும், வைணவம் சைவத்தையும், ஆகமம் சுமார்த்தத்தையும், சுமார்த்தம் ஆகமத்தையும் இதிலுள்ள பெரியவர்களையும் கடவுள்களையும் இழித்தும் பழித்தும் எசியுமே எழுதப்பட்டிருக்கிறது. ராமானுசாச்சாரியாரைக் கெங்கையில் போடப்போன கதையும் பாஷாணம் வைத்த எடுகளுமிருக்கிறது. சங்கராச்சாரியார் அவர்தமது ஒளியைப்பசருக்குள் ஒளித்துக்கொண்டார். சுயமான அனுபவமே சிறந்த பிரமாணமாக விருக்க அவரது சுயஅனுபத்தில் விளங்கிய உண்மைகளுக்கெல்லாம் ஆதாரம் காட்டவேண்டிய பழயநூல்களை என்கசக்கவேண்டும். பிறகுவந்த மற்றவர்களும் அதேவார்த்தைகளைப்பிடித்துக்கொண்டு அதேநூல்களிலிருந்து கொண்டு தமக்குவேண்டிய பொருள்களை கிரகித்து வந்தார்கள். இவ்விதக்காரியம் செய்யப்பட்டமையால் உண்மையின் மார்க்கம் தடைபட்டு வேகம் கொள்ளாமல் போயிற்று. இந்தியாவின் தற்கால துக்கங்களுக்கெல்லாம் காரணம் இயற்கை அமைப்பைத்திருப்பி வைத்துக்கொண்டதுதான். பழயபுஸ்தகங்கள் என்ற சாயைகளுக்கு அடிமையாக ஜீவனையே அமைத்துக்கொண்டதுதான் என்று ராமதீர்த்தர் எழுதியபுஸ்தகங்களும் 'சங்கராருக்கிருந்த மூளைக்குத்தருக்க இருதயமில்லை' என்று சொன்ன விவேகானந்தர் உபந்யாசங்களும் சுயமரியாதைச்சங்கம் உண்டாவதற்கு முன்னே ஏற்பட்டவை, கனம் முதலியார் அவர்கள் இதற்கெல்லாம் சமுத்திரத்திற்குப் போகவில்லை. விருதுநகர் வாசகசாலையாக விருந்தாலும் திருமங்கலம் ஜீவகாருணய சங்கமாக விருந்தாலும் இவர்களையும் இந்த முதலியாரையும் இன்னும் மற்ற நம்மவர்களை எல்லாம் சூத்திரன் (சூத்திரனென்றால் அடிமை, துக்கத்தை உடையோன், தாசிமகன், ஒழுக்கமற்றவன், ஆசாரம் கெட்டவன் கண்டதைப்புசிப்பவன்) என்று சாஸ்திர இதிகாச புராணங்களில் எழுதிவைத்து இருக்கப்பட்டவர்களிட மல்லவா இனிப் பொறுக்கமாட்டேன் என்று நாக்கை இழுத்துக்காட்டவேண்டும். அதற்கு ஒரு ஜாண்வயிற்றைக் காட்டிவிட்டு எங்களை அழிக்க கங்கணம் கட்டிக்கொண்டது எந்த ஞாயத்தைப்பொருந்தது.

# மறவர் மகாநாடு.

## மஞ்சன் குளம்.

### நான்குநேரித் தாலூகா

நான்குநேரித் தாலூகாவில் மறவர் வகுப்பினர் மிகுதியாக வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் திருட்டு முதலிய தீயதொழில்களை யுடையவர்களாய் கல்வியறிவற்றவர்களாய் வாழ்வதை கண்டு அவர்களை நல்வழிப்படுத்தவேண்டுமென்று இத்தாலூக்கா போலீஸ்சர்க்கிள் இன்ஸ்பெக்டராகியதிருவாளர் முத்தையாபிள்ளையவர்கள் போலீஸ் ஜில்லாசூப்பரின்டென்டெண்ட் விண்டில் துரையுடன் கலந்து பேசி 1927ம் ஆண்டில் "மறவர் சங்கம்" என ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். விண்டில் துரையே இச்சங்கத்தின் தலைவர். திரு முத்தைய பிள்ளையவர்களுடைய நன்முயற்சியின் பயனாக மறவர்களனைவரும் ஒற்றுமையாகக்கூடித் தங்கள் வகுப்பாரின் முன்னேற்றத்திற்குப் பொருள் சேர்த்து வேண்டுவன செய்துவருகிறார்கள். இதனால் 1929 ஜனவரியில் ஓர் கூட்டம் கூடி அறிவை வளர்த்து நல்லொழுக்கத்தைத் தருவது கல்வியேயாதலால் கல்வியைத் தம் மக்களுக்குக் கற்பிப்பது இன்றியமையாத முதற்கடமையெனத் தீர்மானித்து அருபற்றி மஞ்சன்குளம், முதலைக்குளம், புதூர், செண்பகராமநல்லூர் என்ற நான்கு ஊர்களிலும் மறவர் சங்கத்திலிருந்து ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது என்றும் தீர்மானமாயிற்று. மறவர் சங்க முன்னேற்றத்திற்கு திரு. முத்தைய பிள்ளையவர்களுக்கு உடன் உழைப்பார் மஞ்சன்குளம் திரு திரவியத்தேவர் என்பவர். இவருடைய தீவிர முயற்சியால் மஞ்சன் குளத்தில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் கட்டி முடிவாயிற்று. இன்ஸ்பெக்டரவர்கள் அதைப் பார்வையிடுவதற்கு 7-3-29 வியாழக்கிழமையன்று காலையில் நான்கு நேரி போர்டு உயர்தரக் கலாசாலைத்தலைமைப்பண்டிதர் திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்களுடன் சென்றனர். பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்ட பின் திரு. முத்தையபிள்ளையவர்கள் அவ்வூர் மறவர்களையெல்லாம் அழைத்துத்திரவியத்தேவர் வீட்டுக்குப்போய் அவர் வீட்டில் தயாரித்த பலகாரங்களையுண்டனர். அப்போது அவர்கள் பேசியதன் சுருக்கம் பின் வருமாறு:—

'மறவர்களின் தலைவர்களே! நீங்கள் இங்கே இவ்வளவு விரைவில் பள்ளிக்கூடம் கட்டி முடித்ததைப்பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் ஒழுக்க முடையவர்களாகவும் சுத்தமுடையவர்களாகவும் இருக்கவேண்டும். சாதி வித்தியாசமென்பது கிடையாது நீங்கள். சுத்தமில்லாதவர்களாக மாமிசமுண்டு வருவதினாலேயே மேல் சாதியென்று சொல்லிக்கொள்கிறவர்கள் உங்களோடு சேராமல் உங்களைத் தாழ்த்துகிறார்கள். இப்போதுமேல் வகுப்பு என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களில் ஒருவனாகிய நான் உங்களில் ஒருவராகிய திரவியத்தேவர் வீட்டில் உண்ணுவதை நீங்கள் இதோ நேரே பார்க்கிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் சுத்தமுடையவர்களாக ஆவீர்களாகில் உங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் வந்து உண்பதற்கு யாதொரு தடையுமில்லை. ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்து ஒழுக்கமுடையவர்களாக விரைவில் ஆக்கவேண்டும். மேலும் நான் எப்படி இப்போது உங்களிடை வேறுபாடில்லாமல் உடன் உண்ணுகிறேனோ அதைப்போலவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்களிலும் தாழ்த்தப்பட்டவர்களாகவிருக்கும் ஆதித்திராவிடர்களிடம் சுத்தம் கண்ட இடத்து உடன் உண்ணவோ நெருங்கிப் பழகவோ தயாராயிருக்கவேண்டும். மனிதர்களுக்குள் என்ன உயர்வு தாழ்வு? நாம் எல்லோரும் கடவுளுடைய பிள்ளைகள்தானே' என்று பேசி முடித்தார்கள். அவ்வூராரனைவரும் பிள்ளையவர்களுக்கு நன்றி செலுத்தி அவ்வாறேசெய்ய இசைந்தார்கள். போலீஸ்இன்ஸ்பெக்டர் திரு முத்தைய பிள்ளையவர்களுடைய நன்முயற்சி மிகவும் பாராட்டத்தகுந்தது. ஏனைய போலீஸ் அதிகாரிகளும் இவர்களைப்போல நடந்துகாட்டுக்கு உண்மைத் தொண்டாற்றுவார்களாக.

ஒரு நிருபர்.

## ஜப்பானில் விவாக முறை.

ஜப்பானில், இதுகாலை பெண்கள் தங்கள் படிப்பைப் பூராவும் முடித்துக்கொண்ட பிறகே விவாகம் செய்து கொள்வதைப்பற்றி யோசிக்கிறார்கள். புஷ்பங்தொடுத்தல், விருந்தினரை உபசரித்தல், சங்கீதம், பிரெஞ்சு அல்லது இங்கிலீஷ் பாஷைப் பயிற்சி முதலியவைகளில் நன்றாக தேர்ச்சிபெறுகிறார்கள். சிலர், பிற்காலத்தில்விவாகம் இன்றியே காலந்தள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப்பொழுது பிறருடைய உதவியின்றி வாழ்க்கையை நடத்த சுருக்கெழுத்து, டைப்ரைடிங் முதலியவைகளில் ஏதேனுமொன்றைக் கற்றுக்கொள்கிறார்கள். இவைகளையெல்லாம்கற்றுமுடிப்பதற்குள் 23அல்லது 24வயதாகிவிடுகிறது. முன்னர் சிறு வயதிலேயே பெண்களுக்கு விவாகம் செய்து வைக்கப்பட்டு வந்தது. இப்பொழுது, 25 அல்லது 28 வயதான பெண்களும் விவாகமாகாமலிருக்கிறார்கள். இன்னும் சில பெண்மணிகள் தங்கள் காதலர்கள் பணஞ் சம்பாதித்து தங்களை சம்ரட்சணை செய்யக்கூடிய நிலைமையில் வந்த பிறகே விவாகம் செய்து கொள்கிறார்கள். மாப்பிள்ளையின் வருமானத்தை உத்தேசித்தே பெண்கள் விவாகம் செய்து கொடுக்கப்படுகிறார்கள். முன்னர் பிள்ளையினுடைய குடும்பத்தின் நற்பெயர் அந்தஸ்து கௌரவம் இவைகளே பெரும்பாலும் கவனிக்கப்பட்டன.

இனம்! இனம்!!

பிரசித்திபெற்ற இந்திரா காப்பிப்பவுடருக்கு 31—3—29 க்குள் 56 பவுனுக்குக் குறையாமல் ஆர்டர் தருபவர்களுக்கு அழகிய ஜர்மன் பிக்சர் காலண்டர் 1-ம் பிரசண்ட் டிக்கட் ஒன்றும் இனம்.

The Indra Coffee & Tea Co.,
Coimbatore.

# திருக்குறள்

## மூலமும், பொழிப்புரையும்.

பதம் பிரித்த மூலம் தெளிய எழுதிய கருத்துரை. நல்லவெள்ளை காகிதம் சுத்தமான பதிப்பு, சுமார்300 பக்கங்களுள்ளது, பல அறிஞர்களும், பெரியோர்களும் நன்றென மதித்தது, இதுவரையில் யாரும் வெளியிட்டிராத மாதிரி ஒருமாத காலத்தில் 4000 பிரதிகளுக்கு முன்பணம் அனுப்பி நல்வரவேற்கப்பெற்றது. பல பெருந் திருவாளர்களால் நூற்றுக் கணக்கான பிரதிகள் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பெற்றது. எல்லாரும் வாங்கி பயனடையவேண்டி குறைந்தவிலைக்கு வெளியிடப்பட்டதென பல பெரியோர்கள் வாழ்த்துரை வழங்கும் பேறுபெற்றுள்ளது. 5000 பிரதிகளே கைவசமுள்ளன.

பிரதி 1-க்கு ரூ 1—8—0. தபால் செலவு வேறு.

**ஸ்ரீலோலன்.**

ஓர் துப்பறியும் தமிழ் நாவல்.

சிறந்த நடை, திடுக்கிடும் சம்பவங்கள், புதிய சம்பவங்கள், இம்மாதிரி நாவல் தமிழ்நாட்டில் இதுவரையில் வெளிவந்த தில்லை.

புத்தகம் 1-க்கு ரூ 1—4—0

தபால் செலவு வேறு.

**ஞான சூரியன்.**

இது ஓர் ஆராய்ச்சி நூல். அனைவரும் படித்து அறியவேண்டியது. சுத்தமான இரண்டாம் பதிப்பு, முன் ஒரு ரூபாய்க்கு விற்றது. இப்போது விலை 0—8—0

தபால் செலவு வேறு.

ஒரு ரூபாய்க்கு குறைவாக வி. பி. யில் அனுப்பவியலாது. ஒரு ரூபாய்க்கு குறைந்தபுத்தகம் வேண்டுவோர் புத்தக கிரயத்தோடு தபால் செலவு 0-2-0 சேர்த்து ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். மூன்று புத்தகமும் ஆர்டர் செய்வோருக்கு தபால்செலவு இனாம். பதில் வேண்டுவோர் ரிப்ளைகார்டு எழுதுக.

**தமிழ் நூற் பதிப்புக் கழகம்,**

காஞ்சீபுரம்.



# ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்: நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0

அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0

மாதிரிகாப்பி இனாம்.

**ஆனந்த விகடன் ஆபீஸ்,**

244, தங்கசாலைவீதி, மதராஸ்.

டெலிபோன் 3311-

தந்தி விலாசம்:—விகடன், சென்னை.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

**இனாம்! இனாம்!!**



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினன் வாட்சு கம்பெனி,

மின்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



# "பாரதி"

இஃது

தேசாபிமானம் பாஷாபிமானம் அரசியல் ஜன நிர்மாணம் ஆசார சீர்திருத்தம் சமூகத் தொண்டு விவசாயம் கைத்தொழில் வியாபாரம் பொருளாதாரம் ஜீவியசரித்திரம் தேசசரித்திரம் கிராம நிர்மாணம் தீண்டாமை விலக்கு மதுவிலக்கு மாதர் விடுதலை கதர் இயக்கம் வாலிபர் இயக்கம் மாதர் இயக்கம் சாரணர் இயக்கம் புஸ்தகாலய இயக்கம் ஐக்கிய இயக்கம் தொழிலாளர் இயக்கம் சன்மார்க்க இயக்கம் அயல்நாடுகளில் நம்மவர் பொதுஜனக்கல்வி கல்விவளர்ச்சி குழந்தைவளர்ப்பு தேகப்பயிற்சி சுகாதாரம் பத்திரிகைத்தொழில் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு ஆகிய விஷயங்களுடன் வெளிவரப்போகும் ஓர் உயர்தர தமிழ்மாதப் பத்திரிகை.

தமிழ் நாட்டுச் சகோதரர்களே! இத்தனைச் சிறப்புடன் உதயமாகும் "பாரதி"யை ஆதரமாயும் அன்புடனும் ஆதரிக்க வேண்டியது தமிழ்ச்சகோதர சகோதரிகளின் தனிக்கடமையாகும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய விரும்பினால், "பாரதி" யில் விளம்பரம் செய்யுங்கள்.

இதன் ஆசிரியர்: தேவாரம் ரா. நாராயணசாமி

சந்தா விபரம்.

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-0-0.

வெளிநாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-8-0.

அல்லது 4 ஷிலிங்

விலாசம்:—மானேஜர்,

"பாரதி" உத்தம பாளையம்,

மதுரை ஜில்லா.



# கக்குவானுக்கு

ஹரிதாசர் மருந்து மிகவும் கைகண்டது. பூரண சுகமாகும். பத்துநாள் மருந்து ரூபா 1—0

## காலராவுக்கு

ஹரிதாசர் தனிமருந்து மிகவும் அற்புதமானது. வாந்திபேதி ஒரே வேளை மருந்தில் சுகமாகும். விலை ரூபா 1—4—0. வி. பி. செலவு அணா 5.

**Dr. H. தாசர் B. A.**

சித்த வைத்தியசாலை, திண்ணனூர் R. S.



# விலாசம் தேவை,

வாழ்க்கையின்பம், காதல் பெருக்கு, பரவச முதிர்ச்சி, புது ஊக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், 'மகர யரத்னம்' என்ற புத்தகத்தை இனாமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்.

**சுதானந்த ஔஷதாலயம்**

தபாற் பெட்டி 222,

மதராஸ்.



இன்றே ஆர்டர் செய்யுங்கள்

காப்பிப்பொடியை ஒழிக்கும்

# றேப்பி பவுடர்.

உஷ்ணத்தைத் மாற்றும்! உலகஇன்பத்தை ஊட்டும்! கற்பமூலிகைகளால் தயாரித்தது! காப்பிபோன்ற மணமுடையது! வி,பி வேறு

¼ டஜன் டின் ரூ. 1 ½ டஜன் ரூ. 1¾.

S. V. ராஜப்பா, மளிகை, பழநி.



மூன்று மாதத்தில்

# மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை நடத்தவும் ரிப்பேர் செய்யவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார், இன்ஜினியரிங் ஒர்க்ஸ்.

மைலாப்பூர், மதராஸ்



# "முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி.

வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"

152, சிலிகிரோடு, சிங்கப்பூர்.

## பொருள் செய்வகை.

1. உங்கள் வியாபாரத்துக்கு எவ்வளவு முதல் வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமா?
2. வாடிக்கைக் காரர்களைச் சேர்க்கும் விதம் அறிவீர்களா?
3. வியாபாரத்தில் எந்தெந்த காரணத்தால் எவ்வளவுபேர் நஷ்டமடைந்திருக்கிறார்களென்பது தெரியுமா?
4. வியாபாரத்தில் சித்தி அடையும் விதம் என்ன?
5. புக்கீப்பிங் (கணக்கு வைக்குமுறை) ஒற்றைப்பதிவு இரட்டைப்பதிவு உங்களுக்குத் தெரியுமா?
6. துணிந்துசெய்யும் வியாபாரத்தில் அனுஷ்டிக்க வேண்டிய விதிகள் எவை?
7. தினுசுகள்விலை ஏறுவதும் இறங்குவதும் முன்னால் அறியும் விதம் எப்படி?
8. கடை வைக்குமிடம் எது?
9. முதலில்லாமல் என்ன வியாபாரங்கள் செய்யலாம்?
10. நம்முடைய செயல் இன்னவை என்றும் ஈசுரச்செயல் இன்னவையென்றும் உங்களுக்குத் தெரியுமா?

இந்தமாதிரி நூற்றுக்கணக்கான நூதன விஷயங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம். இதன் விலை ரூபாய் ஒன்றுதான் விலாசம்:—

தேவி ஆஸ்ரமம், திரோபதை அம்மன் கோவில்வீதி, புதுச்சேரி.

குறைந்த சந்தா! நிறைந்த விஷயம்!!

## "ஆனந்தபோதினி"

### ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை.

"ஆனந்த போதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையொடு "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மத சமூக தேசீய முன்னேற்றத்தைப் பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டியிருக்கின்றனர்.

உங்களுக்கு என்ன வேண்டும்.

| | |
|---|---|
| மத உண்மைகளா? | கிராமச் சீர்திருத்தங்களா? |
| தத்துவ ஆராய்ச்சிகளா? | சமூக இயல்களா? |
| கைத்தொழில் விளக்கங்களா? | வைத்திய விசேஷங்களா? |
| வியாபார ரகசியங்களா? | தேசீய தத்துவங்களா? |
| விஞ்ஞான (Science) விநோதங்களா? | சிறுகதைப் பகுதிகளா? |
| | இன்னிசைப் பாட்டுகளா? |

எல்லாவற்றிற்கும் "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருட சந்தா ரூ 3. 6 மாத சந்தா ரூ 1—12-0

பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூ 4.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.


## லோககுரு என்பவர் உலகத்திற்கே குருவா?


சுக்ல வருஷத்திய
நேத்திர ஜீவ நக்ஷத்திராதி
சாந்திர சௌரமான சர்வ முகூர்த்த

## ஆனந்தபோதினி பஞ்சாங்கம்.

விலை 1க்கு அ. 2. 6-க்கு அ. 8. 12-க்கு அ. 14. எல்லா ஊர் புஸ்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும். இதனோடு நமது புஸ்தகங்களும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி ஆபீஸ்" மதராஸ்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

### மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற


### விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச்செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு, சேடலாக் இனம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் - 20 சாம்பில் பாக்கெட் ரூ 2 10 சாம்பில் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. சு. கோ. இ. காதர் மீரா சாயபு, வொட்னர்சரி தோட்டம், சேலம்.

## முந்துங்கள்.

விலை ரூ, 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி.



சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷைசாட்டுபொத்தான்கள் செட் 12; ஷை மல்லினழுத்த டூருச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபாக்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசீய டிராண் ஸ்பர்படங்கள் 32; அழகிய பலாக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

இ. கிருஷ்ணா ஏஜன்ஸி
தபால்பெட்டி 119 மதராஸ்.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.